NAVA LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate | Commercial | Business | Will & Estates
10 Milner Business Court, Unit 210
Scarborough, ON, M1B 3C6
416.321.1100 www.nava.law



September 2017


# உகுருவி

ekuruvi.com



Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today


# திலீபனின் காத்திருப்பு...!




MORTGAGE ALLIANCE
THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE **Right Mortgage** for you!
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
info@mortgageguardian.ca
Gini Annarasa
Mortgage Broker
Independently owned and operated franchise of the Mortgage Alliance Network | Lic#12521
gini.annarasa@gmail.com
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services.
Oil Change
$24.99 + tax
Conditions apply
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
"JOIN OUR TEAM"
Get your industry licence at no cost...
Comprehensive skills training and mentoring by over 30 yrs Experienced industry legend
Free in class teaching
Guna Thuraisingham
416 528 1407

வீடு விற்க... வாங்க...
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE 795 Milner Ave. Toronto, ON M1B 3C3 | Off: 416-282-3333

Ramanan
Santhirasegaramoorthy BSC,MBA
416-290-6000
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
For All Your Real Estate Needs

We Make Your Water Clean & Clear
Thermo Care
Heating & Cooling Inc.
416 825 9373 416 640 1174



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

# திலீபனின் பசியை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டும்!

செப்டம்பர் 26, 1987...

இராசையா பார்த்தீபன் என்கிற 24 வயதுடைய இளைஞன் அஹிம்சையின் அதியுச்ச வடிவத்தை நல்லூரின் வீதியில் தொடர்ச்சியாக 12 நாட்கள் நிகழ்த்திக்காட்டிவிட்டு வித்துடலாக வீழ்ந்த தினம்.

ஒரு மகனாக, சகோதரனாக, நண்பனாக, மருத்துவ மாணவனாக வலம் வந்த பார்த்தீபன், விடுதலைக் கனவினை நெஞ்சிலேந்தி அரசியல் பேச்சாளனாகவும், ஆயுதப் போராளியாகவும் அவதரித்த புள்ளியில் திலீபனாக பிறக்கின்றான். அந்தத் திலீபனின் பிறப்பு, ஆயிரமாயிரம் இளைஞர்களை தமிழ்த் தேசியப் போராட்டத்தின் பக்கம் இழுத்து வந்தது. இன்னமும் அதன்பால் வைத்துக் கொண்டிருக்கின்றது.

அஹிம்சையின் தேசமான இந்தியா, இம்சையின் தேசமாக உருமாறி தென்னிலங்கையின் அரசியல் அதிகார ஆக்கிரமிப்பாளர்களுடன் இணைந்து தமிழ் மக்களையும், அவர்களின் போராட்டத்தினையும் அடக்கி ஒடுங்கி அழிக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் போது, அதற்கு எதிராக திலீபன் களம் காண்கிறான். தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தற்கொடைகள் திலீபனுக்கு முன்னும் பின்னும் நிறையவே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. எனினும், திலீபனின் தற்கொடை என்பது 12 நாட்கள் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் நிகழ்ந்தது. தங்களுடைய சொந்த மகனை, சகோதரனை, நண்பனை இழப்பதற்கு உண்டான வலியோடு தமிழர் தேசம் அழுதது. ஆக்ரோசம் கொண்டது. அந்த அழுகைக்குள்ளும், ஆக்ரோசத்துக்குள்ளும் காணப்பட்டது, தமிழ் மக்களின் விடுதலை என்கிற ஓர் இலக்கே.

திலீபனின் 30வது ஆண்டு நினைவு நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்ற இன்றைய நாட்களில் தமிழ்த் தேசியப் போராட்டம் பாரிய அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, எங்களை நோக்கிய சதித் திட்டங்கள் எவை, அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது, முறியடிப்பது, வெற்றிகொள்வது என்பது பற்றியெல்லாம் சிந்திப்பதிலிருந்து விலகி நின்று, எங்களுக்குள் குடுமிப்பிடி சண்டை பிடிப்பதில் அதிக காலத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தாயகத்திலுள்ள மக்களை நோக்கி தென்னிலங்கையும், இந்தியா உள்ளிட்ட சர்வதேசமும் ஒவ்வொரு நாளும் ஏமாற்று நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது என்றால், இன்னொரு பக்கம் அந்த நாடகங்களின் பங்காளிகளாக எமக்குள் இருந்தே சில ஏவலாளிகள் இருந்து கொண்டு, தமிழ்த் தேசியப் போராட்டத்தின் மீது அச்சுறுத்தலை உருவாக்கும் புற்றுக்களாக பரவுகின்றார்கள். சதித்திட்டங்களை எதிர்கொண்டு வெற்றி கொள்வது எவ்வளவு முக்கியமோ, அதனைவிடவும், புற்றுக்களாக உருவாகும் ஏவலாளிகளையும் அடையாளம் காணுவதும் முக்கியமானது. ஏனெனில், தமிழ்த் தேசியப் போராட்டங்களின் தோல்விப் பக்கங்கள், காட்டிக் கொடுப்பவர்களினாலும், புற்றுக்களாக உருவாகும் ஏவலாளிகளினாலுமே நிகழ்ந்து வந்திருக்கின்றது.ஸ்

திலீபன் என்கிற ஆகுதியாளனினதும், ஆயிரக்கணக்கான மாவீரர்களினதும், இலட்சக்கணக்கான மக்களினதும் உயிர்க்கொடைகளிலுமே தமிழ்த் தேசியப் போராட்டம் எழுந்து நிற்கின்றது. அதன் அத்திவாரங்களைச் சிதைப்பதற்கான முனைப்புக்களை அடையாளம் காணுவதை தாயகத்திலுள்ள மக்கள் மாத்திரமல்ல, புலத்திலுள்ள மக்களும் செய்ய வேண்டிய தருணம் இது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் உள்ளிட்ட நினைவு நாட்களில் மாத்திரமல்ல, ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டத்தின் வீரியத்தினை வீழ்ந்துவிடாது காப்பாற்றுவது அவசியமானது. அதுவே, அரசியல் இலக்குகளுக்கான போராடுகின்ற சமூகமாக தமிழ் மக்கள் முன்னால் இருப்பது. அதன் குறியீடாக திலீபன் என்கிற தியாகத்தின் உருவம் உணரப்பட வேண்டியது.

திலீபனை நினைவு கூர்வதென்பது, ஒரு சம்பிரதாய நிகழ்வல்ல. ஆன்மாவோடு அந்த ஆகுதியாளனின் அரசியலையும், அர்ப்பணிப்பையும் கொண்டு சுமப்பது. அதுவே, தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவாகவும் இருக்கின்றது. அதனையே, ஆயிரமாயிரம் மாவீரர்களினதும் உயிர்க்கொடையும் எம்மிடம் மீண்டும் மீண்டும் உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

தியாக தீபம் திலீபனை நாம் அஞ்சலிக்கின்ற தருணங்களில் கண்ணீரை சிந்துவதோடு மாத்திரமல்ல, அவனின் பசியையும் எம்மோடு எடுத்துக் கொள்வதில் உறுதியாக இருக்க வேண்டும். அந்தப் பசியே, எமது அரசியல் இலக்கை இறுதி செய்யும்.

## உள்ளே....

தியாக திலீபன் அண்ணன் திலீபனின் நினைவோடு
- குலசிங்கம் வசீகரன்

Ekuruvi Pays Tribute to Arnold Chan, MP for Scarborough-Agincourt

உண்ணா நோன்புகள் போராட்ட வரலாற்று திருப்பங்கள்
-கதிர் நிலவன்

இரண்டு தேவதைகளும் ஒரு பெரும் பூதமும்
-இந்திரன் ரவீந்திரன்

திலீபனின் காத்திருப்பு - புருஜோத்தமன் தங்கமயில்

கணக்கில் கோட்டை விட்ட மாகாணம்-குயின்ரஸ் துரைசிங்கம்

புலம்பெயர் தமிழர்களிடமும் திலீபன் இன்னும் பசியோடுதான் இருக்கின்றான் -ரமணன் சந்திரசேகரமூர்த்தி

திலீபனை நினைவு கூர்வது என்பது புவிசார் அரசியலை வெற்றிகரமாகக் கையாள்வதுதான் - நிலாந்தன்

மக்கள் புரட்சி வெடிக்குமா ? - வல்லை ந அனந்தராஜ்

மீண்டும் ஜெனிவாவில் சர்வதேச விசாரணை
- கே. சஞ்சயன்

திலீபன் திரைப்படம் என்னாச்சு ? - ரமணன் சந்திரசேகரமூர்த்தி

சமணத்துறவிகள் - காந்தி -திலீபன்
ஒரு வரலாற்றுத்தொடர்பு - இந்திரன் ரவீந்திரன்

கனடாவில் சிறுவர் தமிழ் இலக்கியம் - குரு அரவிந்தன்

மரணங்கள் கேட்கும் மடிப்பிச்சை-சிவமணி

தத்தளிக்கும் பிள்ளைகளை தத்தளிக்க தயாராவோம்
- பா . சிவரஞ்சன்

பழனிச்சாமி - பன்னீர்செல்வம் அதிமுக அரசு நித்திய கண்டம் தள்ளாடிக்கொண்டிருக்கினறது - நக்கீரன்

தற்கொலை செய்ய கேட்கும் நீலத் திமிங்கிலம்
- எஸ் வினோத்

பிக் பொஸ் சமூகம் - க .ஜெனார்த்தனன்

முதுகுவலி - Dr.எழில்

இந்தியாவின் வல்லரசுக் கனவிற்காக பலி கொள்ளப்படும் தமிழ்நாடு - இந்திரன் ரவீந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ekuruvi Pays Tribute to Arnold Chan, MP for Scarborough-Agincourt



I am devastated by the loss of my dear brother and friend Arnold Chan. He was a great friend, counsel, and neighbour. We shared so many surreal moments over the last decade, but listening to Arnold when he made his epic speech in Parliament tops the list. I was fortunate to sit beside him as he took the floor of Parliament for his last formal speech. With his parents, brother Kevin, and wife Jean watching, Arnold was funny, loving, sincere, candid and humble.

He told Canadians to think with their heads and act with their hearts. He told MP's to essentially be civil and work across the aisle. He told his children that he loved them dearly and all the sacrifices they made were for a greater good. His parents sat in tears as their son honoured them like very few can. All of the things that we cherish about Arnold, he had learned from his parents. And finally, he told Kevin that he is deeply proud of his work and reminded us that public service has many forms. His staff gathered to watch in awe as Arnold made the speech of his life.

That evening, many of his friends gathered and spoke to Arnold and his family, and to each other. We knew we had witnessed something special, but equally, we knew that we may not witness this again.

This summer, I had the privilege of sitting with Jean and Arnold at their house, one last time. Arnold said good bye – and he knew he may not get a chance to say this again. Jean was more optimistic – her rock solid personality kept believing that he will overcome this fight one more time.

Cancer has taken too many of my friends and family members. I lost my best friend to Cancer almost 20 years ago, and this morning, I got the call confirming that Arnold has passed on peacefully at his home.

Arnold was meticulous, faultless, and a near perfectionist. He was very strategic and pushed us towards decisions based on reason. For all his seeming partisanship, he was never partisan. He saw the person before the party, or colour, or faith. Arnold in many ways died as he lived: discharging his duty to his family, friends and constituents to his last breath. Since June 2014, he served and worked tirelessly for his people in Scarborough-Agincourt.

Right after the election in 2015, Arnold told me to get the office suite between him and Mark Holland at the Valour Building. These 20 months have strengthened our deep friendship. I would often see him carrying his signature Stephane Dion knapsack (we often joked about getting him a proper bag) and exhausted from the medication, and the hard work. He pushed hard, even on tough days. He had bad days and really bad days – but we could never tell as he was always on point and would relish taking on his colleagues at PROC. He would often join us for dinner comprising mostly staff.

Arnold has imparted himself on many of us. He was wise beyond his years, and he never missed an opportunity to counsel and support his peers, or staffers. At the Members Lounge, he would be in intense conversations with his parliamentary colleagues on policy. He would then go to the office and speak to his staff and all of ours about work, and his experiences. The most amazing thing I witnessed with Arnold was to see young men and women who worked with him at Queens Park or in Parliament at some point as volunteers or staff turn into incredibly confident professionals within our government-some of them are Members of Parliament and even Ministers today

He was taken from us way too soon, but his words, deeds, and life will forever live through his boys Nathaniel, Theodore, and Ethan and his partner in life, Jean and all of us who share in his vision for our country across party lines.

I am grateful that he served all Canadians for the past three decades. More importantly, I am blessed to have had his love, friendship and encouragement on this journey. Thank you for everything, Arnold. Farewell my friend, you have earned your rest above the clouds. Harold and Kumar no more!

Gary Anandasangaree, MP Scarborough-Rouge River

---

Words can't describe how I'm feeling today. This is a man who has guided me since the very first steps I took onto Parliament Hill. He showed me what politics is all about, showed me what it takes to run a successful campaign, showed me how to do my job better and better each day, showed me why public service matters, but most of all showed me what it truly means to be human. He was my mentor and friend, and I'm truly heartbroken that he was taken far too soon. Arnold loved public service, he loved the House of Commons, but more importantly he loved his family, Jean and their three boys. He was an inspiration to many, and I could not be where I am today without his guidance. I'll never forget his last words to me: I love you, I'm proud of you, and just keep going. You will be missed my friend, Arnold Chan. R.I.P. #TeamArnold

Mehalan Garoonanedhi



Arnold Chan is recognizing Ekuruvi Ayaa at Ekuruvi Night 2014




Arnold Chan with Prime Minister Justin Trudeau and Gary Anandasangaree, MP Scarborough-Rouge River




Arnold Chan at the last day of election campaign before the victory winning in 2015




Prime Minister Justin Trudeau with Chan who he called "a remarkable man, a good man and he made a difference in this Parliament and he made our country a better place."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தி**யாகி தீலீபனின் முப்பதாவது நினைவுத் தினம் அனுட்டிக்கப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் அந்த மாவீரனின் தியாகம் செய்தியின் உண்மைத் தன்மை இன்றும் எங்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இந்தியாவை தமிழர்கள் தமது தாய்நாடாக போற்றி வாழ்ந்து வந்த நேரத்தில்தான் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் பிடிக்குள் சிக்குப்பட்ட ராஜிவ் காந்தியின் அரசு படைகள் வடக்கு கிழக்கு மாகாணத்தின் மூலை முடுக்கெங்கும் குவிக்கப்பட்ட பொழுது இலங்கையின் இறைமை பறித்தெடுக்கப்பட்டது. அன்று இந்திய அரசுக்கு எதிராக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீர்கூட அருந்தாது சாகும் வரை உண்ணாவிரதமிருக்கத் தொடங்கிய பொழுது, நல்லூர் ஆலய வீதியில் குழுமி நின்ற பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் முன்னிலையில் உறுதியுடன் கூறிய அந்த வாசகங்கள் இன்றும் எம்மை உலுப்பிக கொண்டிருக்கின்றது.

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!
சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்"

அன்று தனது சாவை முன்கூட்டியே அறிந்து கொண்ட திலீபன் தன் முன்னால் கண்நீருடன் பரிதவித்துக் கொண்டிருந்த மக்களை நோக்கிக் கூறிய அந்த வார்தைகள் இன்றும் உலகமெங்கும், தமிழர்கள் வாழும் நாடுகளில் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது'.

இதே போன்று தான் முன்னர் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தேசியத் தலைவர் தமிழ் நாட்டில் ஆரம்பித்த பொழுது, 48 மணிநேரத்திற்குள் இந்திய அரசு இறங்கி வந்து, அவரிடம் இருந்து பறித்தெடுக்கபபட்ட தொலைத் தொடர்புச் சாதனங்கள் போன்றவற்றைத் தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே கொண்டு வந்து கையளித்த பின்னர் தான் தன்னுடைய உண்ணா நோன்பை முடித்தார்.

ஆனால் அன்று இந்திய அரசு பணிந்து வந்தமைக்கு அகிம்சைப் போராட்டத்தை மதிப்பளித்து, காப்பாற்ற முன்வரவில்லை, எங்கே பிரபாகரன் அவர்களின் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் இறுதியில் தேசியத் தலைவரின் உயிரைப் பறிக்கும் நிலை தமிழ் நாட்டில் ஏற்படுமாயின் தமிழகம் கொதித்தெழும், அதனால் இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் ஆட்டம் காணும் நிலை ஏற்படும் என்ற அச்சத்தினாலேயே இந்திய அரசு கீழே இறங்கி வந்தது.

ஏனெனில் மாகத்மா காந்தியின் மரணத்துடனேயே "அகிம்சை" என்பதன் கருப் பொருளும் மறந்து போய்விட்டது.ஆனால் தமிழக மக்களின் உணர்வுகள் வெடித்தால் இந்தியாவில் இன்னுமொரு போர் முனை திறக்கப்பட்டு விடும் என்ற பயமே காரணம். அதேவேளை ஈழத்தில் திலிபனின் மரணத்தால் எதுவுமே நடைபெறாது என்ற நம்பிக்கை இந்திய அரசிடம் இருந்ததால் திலீபனை இந்திய அரசு சாகடித்தது..!

அதேபோன்றதாகவே தனது உயிரே போனாலும் அடக்குமுறைக்குப் பணியப் போவதில்லை என பிரபாகரனின் உறுதியான வெளிப்பாடுதான் திலீபனிடமும் பதிந்திருந்தது. அன்று தேசியத் தலைவர் தானே முன்னின்று வழிகாட்டிய பாதையில், திலீபன் பின் தொடர்ந்து போராடினார்.

1987ல். "ஒரு துளி நீர் கூட அருந்தாமல், தனது உண்ணா நோன்பை ஆரம்பிக்கப் போவதாகத் திலீபன் அறிவித்ததும், தலைவர் பிரபாகரன் திலீபனிடம் சென்று அருகில் இருந்து அவனது தலையை வருடியபடி . "தண்ணீரையாவது குடித்து உண்ணா விரதத்தைத் தொடரலாம்"— என்று திலீபனைக் கேட்டுக்கொண்டார்.

ஆனால் திலீபனோ தலைவரைப் பார்த்து சிரித்துக் கொண்டே "அண்ணா, நீங்கள் அப்படிச் செய்யவில்லையே? என்னை மட்டும் ஏன் நீரை அருந்தச் சொல்கின்றீர்கள்?" என்று கேட்டு அவரது வார்த்தைகளை மீறியிருந்தார் ஆனால் உலகுக்கே அகிம்சையைப் போதித்த நாடு இந்தியா ஒரு போதும் திலீபனைச் சாக விடாது என்ற நம்பிக்கையுடன் இந்திய அரசின் முடிவுக்காகத் தேசியத் தலைவரும் காத்திருந்தார்.

ஆனால் எதனையுமே சிந்திக்காது புன்முறுவலுடன் தனது மரணத்தின் மூலம் மக்களின் விடிவுக்கான வழி பிறக்குமானால், அதுவே தான் பெற்ற பார்க்கியம் என்று கூறி அந்த இலட்சியத்துடன் உண்ணா நோன்பிருந்து 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்திய அரசு வேடிக்கை பார்ததுக் கொண்டிருக்க பல்லாயிரக்கணக்கான மக்களின் ஓவென்ற அழுகுரலின் மத்தியில் அவர்கள் கண்முன்னால் திலீபனின் உயிர் பிரிந்தது. தனது சாவின் மூலம் மக்கள் புரட்சி வெடிக்கும் என்று நம்பி தனது போராட்ட வடிவத்தை தான் சார்ந்திருந்த உயிருக்குயிராக நேசித்த மக்களின் கரங்களில் கையளித்துச் சென்று இன்றுடன் முப்பது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன்.

ஆனால் இங்கே மக்கள் புரட்சி வெடிக்கவில்லை.

மாறாக அந்தத் தியாக தீபத்தின் சாவில் குளிர்காயும் அரசியல் வாதிகள் அடுத்தடுத்து வரப்போகும் தேர்தலின் வெற்றிகளில் கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள்..!

இந்தியாவில் இடம் பெற்ற சுதந்திரப் போராட்டத்தில, சுபாஜ் சந்திரபோஸ் ஆயுதம் ஏந்திய பேராட்டத்தை ஒரு புறம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது மறுபுறம் மகாத்மா காந்தி உண்ணாவிரதங்கள், அன்னியப் பொருள் பாவனை தடை, கதர் உடை தரிப்பு, உப்பு சத்தியாக் கிரகம் எனப் பல்வேறு வடிவங்களில் அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருந்தார்.ஆனால் பிரித்தானிய அரசாங்கம் திருப்பூர் குமரன், பகத்சிங் போன்ற வீரமறவர்களின் ஆயுதப் போராட்டங்களினால் ஆட்டம் கண்ட நிலையில் வெகுசனப் போராட்ட வடிவம் பெற்றிருந்த காந்தியின் அகிம்சைப் போராட்ட்ததை நிறுத்த தந்திரமாக ஒரு பேராட்ட முனையை அடைந்தது. அதனால் இந்தியாவை விட பிரித்தானியர்கள் இரக்கம் நிறைந்தவர்கள், அகிம்சைக்கு மதிப்பளிப்பவர்கள் என்று தவறாகக் கற்பிதம் கொள்ளக் கூடாது. ஆனாலும் பிரிதானியர்கள் நினைத்தது போல், உண்ணாவிரதமிருந்து சாகாமலேயே "மகாத்மா" எனற விருதினைக் காந்தி பெற்று விட்ட நிலையில் உண்ணா நோன்பிருந்து சாக விட்ட இந்தியாவையும் அவர்களுடன் இறுதிப்போரில் கைகோர்த்து நின்ற நாடுகளையும் எப்படி அகிம்சையை மதிக்கும் நாடுகள் என்று கூற முடியும்?

ஆனால் உலக விடுதலைப் போராட்டத்தில் ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாயமான யுத்த நடவடிக்கைகளை மட்டுமல்லாது, சாத்வீகமான போராட்டத்தையும் முன்னெடுக்க முடியும் என்று சாதித்துக் காட்டிய விடுதலைப் புலிகளின் ஒரு போர் வாளாகத் திகழ்ந்த லெப்டினன்ட் கேணல் திலீபனின் அந்த வீர்ச சாவு ஒரு வரலாறாகும்.

அன்று எங்கள் கண்முன்னாலேயே தனது உடலை அணு அணுவாக அழித்துக் கொண்டிருந்த திலீபனின் அந்தச் சாவின் செய்தியை இன்றைய சந்ததியினர் புரிந்து கொள்ளவேண்டும்.

"எமது — இந்தத் தமிழினம் அடங்காது! அது போராடும்! ஆயுதம் இல்லாவிட்டாலும் அது போராடும். புல்லையும் எடுத்து அது போராடும். அடக்கு முறைக்கு அது வளைந்து கொடுக்காது!. பேரம் பேசாது—விட்டுக் கொடுக்காது. ஆயுதம் இல்லாவிட்டாலும் —உணவு இல்லாவிட்டாலும் இந்த இனம் தலை வணங்காது! அது தொடர்ந்து போராடும்.

தன்னுடைய விடுதலைக்காக— நியாயத்திற்காக— நீதிக்காக —அது எந்த சக்தியையும் எதிர்த்துப் போராடும்." .

என்று வெளிப்படுத்திய அந்தச் செய்தியை இன்றைய பேரம் பேசும் தமிழ்அரசியல் வாதிகள் தான் புரிந்து கொள்ளவேண்டும்.ஆனால் அவர்களுக்கு எதிராகவே திலீபன் கூறிய மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும்...! அப்பொழுது தான் மக்களுக்காகவே சுகங்களைத் துறந்து மரணித்த மாவீரன் திலீபனின் ஆத்மா சாந்தி அடையும்..



**வல்வை.ந.அனந்தராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக தீபம் அண்ணன் திலீபனின் நினைவோடு...






முப்பது வருடங்களின் முன் இதே நாள் அந்த மெழுகுவர்த்தி தன்னை தானே ஒளிர்வித்து கொண்டது, தமிழினத்தின் விடிவிற்காய் உருக தொடங்கியது. வெள்ளையர்களிடமிருந்து இந்திய தேசம் சுதந்திரம் அடைய மகாத்மா காந்தி கையிலெடுத்த அதே ஆயுதத்தை திலீபன் அண்ணா அன்று இந்தியாவிற்கு எதிராக கையிலெடுத்தார். அகிம்சையே தம் பலம் என்று மார்தட்டிக்கொண்ட இந்திய வல்லரசிற்கு எதிராக தனது சாத்வீக போராட்டத்தை நல்லூர் முன்றலில் 1987ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15ஆம் திகதி தொடங்கினார்.

"நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்

நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்

தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை

திலீபனை பாடிட வார்த்தைகள் இல்லை".

என்று ஒரு கவிஞன் அன்று பாடினான்.

பன்னிரு தினங்கள் நீர் கூட அருந்தாமல் உண்ணாநோன்பிருந்த அண்ணன் திலீபன் 26ஆம் திகதி தமிழினத்தின் விடிவிக்காய் தன்னுயிரை தந்தார். தியாக தீபத்தின் சுடர் காற்றோடு கரைந்தது, தமிழ் தேசமே கண்ணீரில் நனைந்தது. இந்திய வல்லாதிக்க அரசின் முகத்திரை கிழிந்தது.

யாழ் குடாநாடெங்கும் சோக கீதமிசைக்க அண்ணன் திலீபனின் உடலம் ஊர்வலம் போனது, பல இடங்களில் மக்கள் வெள்ளத்தில் திலீபனின் உடலத்தை சுமந்து சென்ற ஊர்தி முன்னேற முடியாமல் நின்றது, தாய்மார்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என எல்லா ஊர்களிலும் மக்கள் கூடிநின்று திலீபன் அண்ணாவிற்கு தங்களது இறுதி அஞ்சலிகளை செலுத்தினார்கள். மொத்த தமிழினமும் திலீபன் அண்ணாவை தங்களது மகனாகவே, சகோதரனாகவே உணர்ந்தார்கள், ஆற்ற முடியாத சோகத்தை அழுதழுது ஆற்ற முயன்றார்கள்.

தங்களது போராட்டத்தை தமிழ் மக்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை என்று வருத்தப்பட்ட திலீபன் அண்ணா தன்னுயிரை தந்து தங்களது போராட்டத்தை, அதன் நோக்கத்தை, வீரியத்தை இந்த உலகுக்கே புரியவைத்தார். இது ஒரு மக்கள் போராட்டம், மக்களுக்கான போராட்டம் என்பதை இந்திய மற்றும் இலங்கை சிங்கள இனவாத அரசுகளின் முகத்திரையை கிழித்தெறிந்தும் உலகுக்கு காட்டினார்.

தான் கொண்ட முடிவில் இறுதிவரை உறுதியாக நின்று பசி எனும் தீயில் தன்னை நெய்யாக்கிய திலீபன் அண்ணா, தான் உயிர்நீர்த்த பின்னர் தன்னுடலை கூட இந்த மண்ணின் மருத்துவ மாணவர்களின் கல்விக்கு உதவட்டும் என்று எண்ணிய தியாக செம்மல்.

அன்று முதல் இன்றுவரை தியாக வேள்வியில் தன்உயிரை ஆகுதி ஆக்கிய திலீபன் அண்ணாவை ஒவ்வொரு வருடமும் நாங்கள் கலங்கிய நெஞ்சோடு நினைவுகூருகிறோம், வீதிகள் தோறும் பந்தல்கள் அமைத்து திலீபன் அண்ணாவின் படத்தை வைத்து பாடல்களை இசைக்க விட்டு அந்த பன்னிருநாட்களையும் புனித தினங்களாக அஞ்சலிகளோடு கடந்திருக்கிறோம். சிறு ஒழுங்கைகளில் கூட அவரவர் வசதிப்படி சிறு சிறு பந்தல்கள் இருக்கும், திலீபன் அண்ணாவின் படத்திற்கு முன்னாள் ஒரு தீபம் எரிந்தபடியிருக்கும். ராணுவ கெடுபிடிகளுக்குள்ளும் யுத்த காலத்திலும் கூட அஞ்சலி செலுத்துவதை மக்கள் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்கள். அழுதபடி திலீபன் அண்ணாவின் உடலத்தை ஏந்தி வந்த ஊர்தியின் பின்னே ஓடியது இன்னும் நினைவில் நிற்கிறது. சிறுவனாக இருந்தாலும் அந்த தியாக தீபத்தின் உயிர்த்தியாகம் என்வரைக்கும் ஆழமாக பதிந்துபோன ஒரு சோகம்.

இன்றைய இளம் சமுதாயம் திலீபன் அண்ணாவை, அவரது தியாகத்தை எந்தளவுக்கு தெரிந்து வைத்திருக்கிறார்களோ தெரியாது, ஆனால் அவர்களுக்கு புரியவைப்பது நமது கடமை. தமிழினத்தின் விடிவிற்காய் திலீபன் அண்ணா செய்த தியாகத்தை மட்டுமல்ல, அவர் கண்ட கனவையும் நாம் எமது அடுத்தடுத்த சந்ததிகளுக்கு தெரியப்படுத்தவேண்டியது எமது கடமை. தமிழினத்தின் விடுதலை போராட்டம் ஆரம்பித்து முப்பத்தியொன்பது ஆண்டுகளின் பின்னர் திலீபன் அண்ணா அகிம்சை என்னும் ஆயுதத்தை கையிலெடுத்தார், "இப்போதேனும் எமக்கான சுநத்திரத்தை, நமது சொந்த நிலத்தில் சுதந்திரமாக வாழும் உரிமையை பெறாவிட்டால் மீண்டும் ஆயுதமெடுப்போம், போராடி நம் விடுதலையை அடைவோம், மக்கள் புரட்சி வெடிக்கும், சுதந்திர தமிழீழம் மலரும்" என்று அறைகூவல் விடுத்துவிட்டே அன்று உண்ணாநோன்பிருக்க நல்லூரில் மேடையேறினார். ஆனால் முப்பது வருடங்களாகி விட்டது, இன்னும் திலீபன் அண்ணாவின் கனவு நிறைவேறவில்லை. "நிச்சயம் ஒருநாள் நம் மக்கள் சுதந்திரக்காற்றை சுவாசிப்பார்கள், அதை நான் வானத்திலிருந்து பார்ப்பேன்" என்று சொன்ன பார்த்தீபன் இன்னும் பசியோடு தான் இருக்கிறான்...



**குலசிங்கம் வசீகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திலீபனை நினைவு கூர்வது என்பது

# புவிசார் அரசியலை வெற்றிகரமாகக் கையாள்வதுதான்

**கா**ந்தி சொன்னார் எனது வாழ்க்கையே எனது செய்தி என்று. திலீபனைப் பொறுத்தவரை அவனுடைய மரணமே அவனது செய்தி எனலாம். அதற்காக அவனுடைய வாழ்க்கை ஒரு செய்தி இல்லை என்று அர்த்தமாகாது. அதுவும் செய்திதான். ஆனால் அதைவிட ஆழமான பொருளில் புவிசார் அரசியல் உறவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது அவனுடைய மரணமே அதிகம் செய்திகளைக் கொண்டிருக்கிறது. திலீபன் ஓர் ஆயுதப் போராளி. அகிம்சைப் போராளி அல்ல. ஆயுதப் போராட்டம் ஒரு பொறிக்குள் சிக்கிய பொழுது அந்தப் பொறியை விட்டு வெளியே வர அவன் அகிம்சையைக் கையிலெடுத்தான். அகிம்சையை உலகத்திற்கு போதித்த ஒரு நாட்டிற்கு எதிராக அதிர்ச்சியூட்டும் விதத்தில் அகிம்சையை அவன் பிரயோகித்தான். திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் பின்வருமாறு....

1.பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

2.புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3.இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

4.வடகிழக்கு மாகாணங்களில், காவல் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5.இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடி கொண்டுள்ள ராணுவ, போலீஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்


இக்கோரிக்கைகள் யாவும் இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு உட்பட்டவை. இந்திய இலங்கை உடன்படிக்கையை முழுமையாக அமுல்ப்படுத்தக் கோரியே திலீபன் உண்ணாவிரதமிருந்தான். பசியினாலும், தாகத்தினாலும் அவனது உயிரும், உடலும் மெலிந்து கொண்டு போன ஒவ்வொரு நாளும் இந்தியாவிற்கு எதிரான உணர்வுகள் தமிழ் மக்கள் மத்தியில் அதிகரித்துச் சென்றன. ஓர் அகிம்சைப் போராட்டத்தை இந்தியா பொருட்படுத்தவில்லை என்ற கொதிப்பு தமிழ் மக்கள் மத்தியில் அதிகரித்து வந்தது. அதன் உச்சக்கட்டமாக திலீபன் உயிர்நீத்த பொழுது அது இந்தியாவிற்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவில் விரிசல்களை ஏற்படுத்தியது.

இந்திய நடுவன் அரசுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பகையை கொதிநிலைக்கு தள்ளிய சம்பவங்கள் இரண்டு. முதலாவது திலீபனின் உண்ணாவிரதம். இரண்டாவது குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்டோர் சயனைட் அருந்தியது. இதில் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்டோர் சயனைட் அருந்திய சம்பவமே இந்தியாவிற்கும், புலிகளுக்குமிடையிலான முரண்பாடுகளை ஆயுத மோதல்களாக மாற்றியது.ரஜீவ விஜேசிங்க வர்ணித்தது போல மத்தியஸ்தரை விளையாட்டு வீரர் ஆக்கி மோதலில் ஈடுபடவைத்தது. தொடர்ச்சியாக அதிகரித்து வந்த விரக்தி, கோபம், நிராசை போன்ற உணர்ச்சிகளின் உச்சக்கட்டம் அது. அந்த உச்சக்கட்டத்தை நோக்கி ஈழத்தமிழ் உணர்வுகளை நொதிக்கச் செய்தது திலீபனின் உண்ணாவிரதமே.

இந்திய அமைதி காக்கும் படைகள் வந்திறங்கியபொழுது நிறைகுடம் வைத்து ஆரத்தி எடுத்து வரவேற்ற ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து கிட்டத்தட்ட ஒன்றரை மாதத்திற்குள் அதே அமைதிப்படைக்கு எதிராக ஒரு போர் வெடித்தது. இதற்கு வேண்டிய உளவியல் தயாரிப்பை அதிகபட்சம் திலீபனே செய்தான். இந்தியாவிற்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான பந்தம் எனப்படுவது பல நூற்றாண்டுகளுக்குரியது. அது ஒரு வேர்நிலை உறவு. ஈழத்தமழர்களின் பண்பாடு எனப்படுவது இந்திய உபகண்டப் பண்பாட்டின் ஒரு பகுதிதான். இறை நம்பிக்கை, சடங்குகள், சம்பிரதாயங்கள், உணவு, உடை, சினிமா போன்ற பல அம்சங்களிலும் ஈழத்தமிழர்கள் தென்னிந்தியப் பண்பாட்டை பகிரும் ஒரு மக்கள் கூட்டமாகவே காணப்படுகிறார்கள். இந்த உறவைக் கையாண்டுதான் இந்திய நடுவண் அரசு தமிழ் இயக்கங்களுக்கு தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை ஏற்படுத்திக்கொடுத்தது. தமிழகத்தை தாய்த் தமிழகம் என்று அழைக்கும் ஈழத்தமிழர்கள் இப்பொழுதும் உண்டு. இந்திராகாந்தியை ஈழத்தாய் என்று வர்ணிக்கும் எழுத்தாளர்கள் இப்பொழுதும் உண்டு. புலிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையிலான மோதலுக்குப் பின்னரும் ரஜீவ்காந்தி கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பின்னரும் இறுதிக்கட்டப் போரின் போது இந்தியாவை நோக்கி எதிர்பார்ப்போடு பார்த்த ஈழத்தமிழர்களும் உண்டு.

இவ்வாறாக பல நூற்றாண்டுகளாக நிலவி வரும் ஓர் உறவின் பின்னணிக்குள்தான் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் தொடக்கப்பட்டது. அவன் பசியாலும், தாகத்தாலும் படிப்படியாக இறந்து கொண்டிருந்த ஒவ்வொரு நாளும் ஈழத்தமிழ் பொது உளவியலானது இந்திய நடுவண் அரசுக்கு எதிராக நொதிக்கத் தொடங்கியது. இவ்வாறு குறுகிய காலத்துள் செங்குத்தாக எதிர் நிலைக்குத் திரும்பிய ஒரு பொது உளவியலின் பின்னணியில் தான் புலிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையிலான போர் வெடித்தது. அதன் பின் நிகழ்ந்த ஒவ்வொரு இழப்பும் ஒவ்வொரு காயமும் இந்திய ஈழத்தமிழ் உறவில் விரிசல்களை அதிகப்படுத்தின.

இந்திய அமைதிப்படையின் வருகைக்கு முன் ஈழத்து படித்த நடுத்தர வர்க்கத்து தமிழர்களின் வீட்டுச் சுவர்களில் இந்தியத் தலைவர்களின் படங்களை அநேகமாகக் காண முடியும். காந்தி நேரு, நேதாஜி போன்றோரின் படங்களையும், ஆன்மீகவாதிகளான ராமகிருஷ்ணர், விவேகானந்தர், சாரதாதேவி, ரமணர் போன்றோரின் படங்களையும் ஈழத்து படித்த நடுத்தர வர்க்கத்து வீடுகளில் அதிகமாகக் காண முடியும். அது மட்டுமல்ல கீழ் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்கள்,



**திலீபனை நினைவு கூர்வது என்பது அதன் பிரயோக அர்த்தத்தில் புவிசார் அரசியலை வெற்றிகரமாகக் கையாள்வதுதான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 இகுருவி இணைய இதழ் - SEP. 2017

விளையாட்டுக் கழகங்கள் போன்ற சிவில் அமைப்புக்களுக்கு காந்தியின் பெயரோ அல்லது நேதாஜியின் பெயரோ சூட்டப்பட்டன. ஆனால் இந்திய அமைதிப்படையின் அத்தியாயம் முடிவடைந்த பின் அந்தப் படங்கள் யாவும் ஈழத்தமிழ் சுவர்களில் இருந்து அகற்றப்பட்டு விட்டன. இப்பொழுது இந்தியா ஈழத்தமிழர்களுக்கு பல்லாயிரக்கணக்கான வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளது. இந்த வீடுகளில் ஒன்றில் கூட இந்தியத் தலைவர்களின் படங்கள் கிடையாது.

தம்மை இந்தியாவின் தொப்புள் கொடி உறவுகள் என்று நம்பிக்கொண்டிருந்த ஒரு பொது உளவியலை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வந்த ஒரு பிராந்திய உறவை பன்னிரண்டு நாட்களுக்குள் திலீபன் அதிர்ச்சிக்குள்ளாக்கினான்.

இந்த அடிப்படையில்தான் அவனது மரணம் ஒரு செய்தியாகிறது. ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் எனப்படுவது பிராந்திய அரசியலின் நேரடி விளைவுதான். சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்களை அவர்களுக்கு தமிழகத்தோடு உள்ள தொப்புள்கொடி உறவை ஒரு கருவியாகப் பயன்படுத்தி இந்தியப் பேரரசு தனது பிராந்திய நலன்களை அடைய முற்பட்டது. இந்திய — இலங்கை உடன்படிக்கை மூலம் அது தனது நலன்களைப் பாதுகாத்துக் கொண்டதும் ஈழத்தமிழர்களை கைவிட முற்பட்டது.

தமிழகத்திற்கும், ஈழத்தமிழர்களுக்கு மிடையிலான தொப்புள்கொடி உறவே ஈழத்தமிழர்களின் பிராந்தியப் பலமாகக் காணப்படுகிறது. தமிழகத்தை பின்தளமாகக் கொண்டே ஈழப் போராட்டம் பெருவளர்ச்சி கண்டது. மேற்கத்தேய அறிஞராகிய ஹாவார்ட் றிக்கிங்ஸ் இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை தொடர்பில் தெரிவித்த ஒரு கருத்தை இங்கு மேற்கோள் காட்டலாம். 'இலங்கைத் தீவில் பெரும்பான்மையினர் சிறுபான்மைத் தாழ்வுச்சிக்கலோடும் சிறுபான்மையினர் பெரும்பான்மைத் தாழ்வுச் சிக்கலோடும் காணப்படுகிறார்கள்'. இங்கு பெரும்பான்மையினரின் தாழ்வுச்சிக்கல் எனப்படுவது பெரிய தமிழகத்தோடு சிறிய ஈழத்தமிழர்களை சேர்த்துப் பார்ப்பதால் வருவது; இந்திய — இலங்கை உடன்படிக்கையின் மூலம் ஜயவர்த்தனா இப்பலத்தை சிதைக்க முற்பட்டார். அதில் அவர் குறிப்பிடத்தக்களவு வெற்றியும் கண்டார். தொடர்ந்து ரஜீவ் காந்தி; கொல்லப் பட்டார்.அது ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு சட்டப்பூட்டைப் போட்டது.

இது நடந்து ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கும் மேலாகி விட்டது. இப்பொழுது அதே நாடகம் வேறொரு மேடையில் புதிய நடிகர்களால் அரங்கேற்றப்படுகிறது. 2009 ற்குப் பின் ஜெனீவாவில் திறக்கப்பட்டிருக்கும் ஒரு புதிய மேடையில் மறுபடியும் ஈழத்தமிழர்கள் கருவிகளாகக் கையாளப்படுகிறார்கள். ராஜபக்ஷ சகோதரர்களை கவிழ்ப்பதற்காக ஈழத்தமிழர்களை மேற்கு நாடுகள் கருவிகளாகக் கையாண்டன. தமிழ் டயஸ்பொறாவை மேற்கு நாடுகள் அதற்காக உருவேற்றின. முடிவில் மகிந்த கவிழ்க்கப்பட்டார். மேற்கு நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் ஒப்பீட்டளவில் பாதுகாப்பான ஒரு புதிய வலுச்சமநிலை இலங்கைத் தீவில் உருவாக்கப்பட்டது.ஆனால், இவ்வலுச்சமநிலையை உருவாக்க வாக்களித்த தமிழ் மக்களின் நிலை எவ்வாறுள்ளது?

இந்திய — இலங்கை உடன்படிக்கையின் பின் கைவிடப்பட்டது போலவே ஆட்சி மாற்றத்தின் பின்னரும் தாங்கள் கைவிடப்பட்டு விட்டதாக தமிழ் மக்கள் கருதுகிறார்கள். மகிந்தவிற்கு எதிராக மேற்கு நாடுகளால் கருவிகளாக



**கால் நூற்றாண்டுக்கு முன்பு இந்தியப் பேரரசு தமிழர்களைக் கருவியாகக் கையாண்டது. இப்பொழுது அமெரிக்கப் பேரரசு தமிழர்களைக் கருவிகளாகக் கையாண்டு வருகிறது. காலத்திற்குக் காலம் பேரரசுகளின் கருவிகளாகக் கையாளப்படும் ஒரு மக்கள் கூட்டமா ஈழத்தமிழர்கள்?**

கையாளப்பட்ட பொழுது ஈழத்தமிழர்கள் கேட்டது இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை. ஆனால் தமது பிராந்திய மற்றும் பூகோள நலன்களை ஒப்பீட்டளவில் பாதுகாத்துக் கொண்ட பின் மேற்கு நாடுகள் ஈழத்தமிழர்களுக்கு வழங்கியிருப்பது நிலைமாறுகால நீதி எனப்படும் ஒரு கவர்ச்சியான பொய்யைத்தான். அதாவது கால் நூற்றாண்டுக்குப் பின்னரும் ஈழத்தமிழர்கள் பேரரசுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய பயன்படுத்தப்பட்டபின் தூக்கி எறியப்படும் ஆணுறைகளாகவே காணப்படுகிறார்கள்.

இப்பொழுது புலிகள் இயக்கம் அரங்கில் இல்லை. ஆனால் சீனப்பேரரசு ஏற்கெனவே இலங்கைத் தீவினுள் நுழைந்து விட்டது. அம்பாந்தோட்டையிலும், கொழும்பு துறைமுக நகரத்திலும் அது வலுவாக தனது கால்களை ஊன்றிக்கொண்டு விட்டது. மேற்கின் விசுவாசியாக இருந்தாலும் கூட ரணில் விக்கிரமசிங்க இப் புதிய யதார்த்தத்தை மீறிச் செயற்பட முடியாதவராகக் காணப்படுகிறார். அம்பாந்தோட்டையில் 15000 ஏக்கர் நிலத்தை சீனாவிற்கு வழங்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தில் இருக்கிறார். அதே சமயம் பலாலி விமான நிலையத்தையும், புத்தள விமான நிலையத்தையும் இந்தியாவிற்கு வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படுகிறது. திருகோணமலையில் உள்ள எண்ணெய் சேமிப்பு குதங்களில் ஒரு பகுதி ஏற்கெனவே இந்தியாவிற்கு வழங்கப்பட்டு விட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கைத்தீவானது ; பேரரசுகளிற்கு தனது கவர்ச்சிகளைக் காட்டி மயக்கும் ஓர் ஆபாசப் பட நாயகியின் நிலைக்கு வந்து விட்டது. ஒரே சமயத்தில் அக்கவர்ச்சி நாயகி எல்லாப் பேரரசுகளையும் திருப்திப்படுத்த முயற்சிக்கிறாள்.

1980களில் ஆயுதப் போராட்டம் எழுச்சி பெற்று வந்த காலகட்டத்தில் ஒரு விவாதம் தொடர்ச்சியாக நடந்தது. இலங்கையைப் பிரிப்பதற்கு இந்தியாவும் விரும்பாது. அமெரிக்காவும் விரும்பாது என்பதே அது. ஏனெனில் அப்படிப் பங்களாதேஷ்; பாணியில் தீவு பிரிக்கப்பட்டால் தமிழ்ப்பகுதிகளில் இந்தியா நிலைகொண்டிருக்கும். அதே சமயம் சிங்களப் பகுதிகளில் அமெரிக்கா நிலை கொண்டு விடும் என்று ஒரு விளக்கம் அப்பொழுது கூறப்பட்டது. தூரத்தில் இருக்கும் அமெரிக்காவை தன்னிடமிருந்து சுமார் 38 கடல் மைல் தொலைவில் கொண்டு வந்து நிறுத்த இந்தியா விரும்பாது என்றும் எனவே அது பிரிவினையை ஆதரிக்காது என்றும் விளக்கம் கூறப்பட்டது. அது கெடுபிடிப் போர்க்காலம். அப்பொழுது இந்தியாவும், அமெரிக்காவும் எதிரிகள். ஆனால் இப்பொழுது பலதுருவ பல்லரங்க உலக ஒழுங்கு நிலவுகிறது — (multiplex world order). இப்பொழுது சீனப் பேரரசிற்கு எதிராக அமெரிக்காவும், இந்தியாவும் பூகோளப் பங்காளிகளாகி விட்டன. கால் நூற்றாண்டுக்கு முன்பு அமெரிக்கா வந்து விடும் என்பதற்காக நாட்டைப் பிரிக்க இந்தியா விரும்பவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது சீனா ஏற்கெனவே நுழைந்து விட்டது. இந்தியாவும் அமெரிக்காவும் அதை எப்படி தூரத் தள்ளலாம் என்று சிந்திக்கின்றன. அப்படிச் சிந்தித்தால் அவர்கள் தமிழர்களையே தேடி வருவார்கள். தமிழர்களைக் கருவிகளாகக் கையாண்டே அதைச் செய்யப் பார்ப்பார்கள்.

கால் நூற்றாண்டுக்கு முன்பு இந்தியப் பேரரசு தமிழர்களைக் கருவியாகக் கையாண்டது. இப்பொழுது அமெரிக்கப் பேரரசு தமிழர்களைக் கருவிகளாகக் கையாண்டு வருகிறது. காலத்திற்குக் காலம் பேரரசுகளின் கருவிகளாகக் கையாளப்படும் ஒரு மக்கள் கூட்டமா ஈழத்தமிழர்கள்;? பேரரசுகளோடு பேரம் பேசும் ஒரு வளர்ச்சியை அவர்கள் எப்பொழுது அடையப் போகிறார்கள்?

சிங்கள மக்கள் ஓர் அரசுடைய தரப்பு. அது ஒரு பெரும் பான்மை. அதன் தலைவர்கள் முதலில் வீரம் காட்டுவார்கள். ஆனால் பொறுத்த நேரத்தில் அடியொட்ட வளைந்து கொடுப்பார்கள். ஜெயவர்த்தன அதைத்தான் செய்தார். பிரேமதாச அதைத்தான் செய்தார். மகிந்தவும் அதைத்தான் செய்தார். தன்னை நோக்கி இந்தியா வாளை வீசிய போது, ஜே.ஆர். சற்றே குனிந்து அந்த வாளை தமிழர்கள் மீது பாயச்செய்தார்.அது தான் இந்திய— இலங்கை உடன்படிக்கை. இந்தியாவுக்கு எதிராக ஒரு போரைப் பிரகடனம் செய்யப் போகிறார் என்பதுபோல தோற்றம் காட்டிய பிரேமதாச கடைசி நேரத்தில் வளைந்து கொடுத்தார். ஒரு ராணுவ சதிப்புரட்சி மூலம் தன்னைத் தக்கவைக்கப் போகிறார் என்று பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட மகிந்த முடிவில் அடியொட்ட வளைந்து ஆட்சியைக் கையளித்தார். அவர்கள் வளைய மாட்டோம் முறிவோம் என்று வீரம் காட்டினாலும் இறுதியிலும் இறுதியாக வளைந்து கொடுத்து தமது அரசைப் பாதுகாக்கிறார்கள். தமிழ் மக்கள் ஓர் அரசற்ற தரப்பு.ஒரு சிறும்பான்மை. முறிவோமே தவிர வளைய மாட்டோம் என்று கூறி முறிக்கப்படுவது வீரமா?அல்லது கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைப்பது வீரமா?

ஒரு பிராந்திய வியூகத்தின் முதற்பலி திலீபன். அவனை நினைவு கூரும் இந்நாட்களில் ஒவ்வொரு ஈழத்தமிழரும் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் இவை. ஏனெனில் திலீபனை நினைவு கூர்வது என்பது அதன் பிரயோக அர்த்தத்தில் புவிசார் அரசியலை வெற்றிகரமாகக் கையாள்வதுதான்.



**நிலாந்தன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணா நோன்புகள் போராட்ட வரலாறு திருப்பங்கள்



செப்.26 - சொட்டு நீரும் அருந்தாமல் உயிர் நீத்த உலகின் முதல் போராளி - திலீபன் நினைவு நாள்.









உலகில் ஒடுக்குமுறைக்கு எதிராக நடத்தப்படும் உரிமைப் போராட்டங்கள் ஆயுத வழியிலும் உண்ணாநிலை வழியிலும் நடத்தப்பட்டால் மட்டுமே ஒடுக்குமுறையாளர்களை குலை நடுங்க வைக்கின்றன. அயர்லாந்து விடுதலைக்காக சிறையில் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி உயிர் நீத்த பாபி சாண்ட்ஸ் பெயர் இன்றும் விடுதலையை நேசிப்பவர்களின் உதடுகளில் உச்சரிக்கப்படுகிறது. காந்தியார் நடத்திய இந்திய விடுதலைக்கான அறப்போரில் அவரின் உண்ணாநிலைப் போராட்டங்கள் மக்களை போராடும் படி தூண்டியே வந்துள்ளது.

காந்தியார் 17 முறை உண்ணாநிலை இருந்துள்ளார்.அவரின் உண்ணாநிலைப் போராட்டங்கள் மூன்று வாரங்களுக்கு தாண்டியதில்லை. அவரைப் போலவே இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட பகத்சிங்கின் தோழர் ஜிதீந்திராநாத் தாஸ் 1929இல் லாகூரில் 63 நாட்கள் உண்ணா நிலை இருந்து உயிர் துறந்தார். அவரின் மரணம் விடுதலைக் கனலை மேலும் மூட்டியது. மணிப்பூர் மக்களை ஒடுக்கும் சிறப்பு அதிகார சட்டத்தை நீக்க கோரும் இரோம் சர்மிளாவின் 13 ஆண்டு கால உண்ணாநிலைப் போராட்டம் இன்னும் நிறைவடைய வில்லை. ஆனாலும் அவரின் போராட்டத்திற்கு மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

1952இல் விசாலா ஆந்திரா கேட்டு 78 நாட்கள் உண்ணாநிலை மூலம் உயிர் நீத்தவர் பொட்டிசிறிராமுலு. அவரால் தெலுங்கு தேசிய இனம் விழிப்புணர்வு பெற்று தனி மாநிலம் கண்டது. தமிழர்கள் நடத்திய உண்ணாநிலைப் போராட்டங்கள் வரலாறு நெடுகிலும் உள்ளது. சோழமன்னன் செங்கணானால் சிறைபிடிக்கப்பட்டவன் சேரமான் கணைக்கால் இரும்பொறை. அவன் தாகம் தீர்க்க தண்ணீர் கேட்ட போது அவமரியாதை செய்யப்பட்டதால் வடக்கிருந்து உயிர் நீத்தான். இது தமிழனின் முதல் வீரமரணமாகும்.

1956இல் தமிழ்நாடு பெயர் சூட்டக் கோரி 78 நாட்கள் சங்கரலிங்கனார் உண்ணாநிலை இருந்து உயிர் நீத்தார். அவர் கனவு 11 ஆண்டுகள் கழித்து நிறைவேறியது. பேரறிஞர் அண்ணா முதல்வராகி தமிழ்நாடு பெயர் சூட்டினார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் காந்திய நாட்டிற்கு அகிம்சை வழியில் பாடம் புகட்டியவர்கள் இரண்டு பேர். ஒருவர் அன்னை பூபதி. மற்றொருவர் திலீபன். 1988இல் 31 நாட்கள் உண்ணாநிலை இருந்து அன்னை பூபதி உயிர் துறந்தார். திலீபனோ 1986இல் சொட்டு நீரும் அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாநிலையை தொடர்ந்த நிலையில் சாவு அவரைத் தழுவியது.

இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு இந்திய அமைதிப்படையை துரத்தியடிக்கும் ஆன்ம பலத்தை திலீபனின் மரணம் பெற்று தந்தது. பிரபாகரனின் படையோ இந்தியபடையை ஓட ஓட விரட்டியடித்து சாதனை படைத்தது.

**நன்றி : கதிர் நிலவன்**

ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான தெய்வீக இசை அரங்கில்
ரொறன்ரோவின் முன்னணி இசைக் கலைஞர்களின் சங்கமிப்பில் 17வது ஆண்டு

**நவராத்திரி இசைவிழா**

**20.09.2017 முதல் 30.09.2017 வரை**

20.09.2017 புதன்கிழமை இரவு 8:15 மணிமுதல்
இன்னிசை விருந்து
செல்வன். அகரன் குகேந்திரன்
மற்றும் "மிருதங்க வித்வ சிரோன்மணி"
ஸ்ரீமான். கனகேந்திரம் குகேந்திரன் அவர்களின் மாணவர்கள்

21.09.2017 வியாழக்கிழமை இரவு 8:15 மணிமுதல்
இசையும் லயமும் இசை ஆராதனை "லயஞானமணி"
ஸ்ரீமான். நவநீதன் கனகசபாபதி அவர்களின் 'நவகீதம்' இசைக்குழுவினர்

22.09.2017 வெள்ளிக்கிழமை இரவு 8:45 மணிமுதல்
இன்னிசை அமுதம் "சங்கீத வித்வ சிரோன்மணி"
ஸ்ரீமதி. காந்தினி கிஷோன்

23.09.2017 சனிக்கிழமை இரவு 8:45 மணிமுதல்
சங்கீத இன்னிசை அமுதம் "சங்கீத கலாஜோதி"
செல்வி. ஐஸ்வர்யா சந்துரு

24.09.2017 ஞாயிற்றுக்கிழமை இரவு 8:15 மணிமுதல்
வாத்ய மஞ்சரி "இன்னிசை வாணி"
ஸ்ரீமதி. வசந்தி ராஜ்குமார் அவர்களின் மாணவர்கள்

25.09.2017 திங்கட்கிழமை இரவு 8:15 மணிமுதல்
சங்கீத இன்னிசை விருந்து
"சங்கீத வித்வ சிரோன்மணி" ஸ்ரீமதி. சாருமதி மனோகாந்தன்
செல்வி. சுபீக்கா மனோகாந்தன்

26.09.2017 செவ்வாய்க்கிழமை இரவு 8:15 மணிமுதல்
இன்னிசைக் கச்சேரி "சங்கீத கலாஜோதி"
ஸ்ரீமான். மிதுரன் மனோகரன்

27.09.2017 புதன்கிழமை இரவு 8:15 மணிமுதல்
நாட்டிய சமர்ப்பணம்
ரொறன்ரோவின் முன்னணி நடன ஆசிரியர்களின் மாணவர்கள்

28.09.2017 வியாழக்கிழமை இரவு 8:00 மணிமுதல்
கலைகளின் சமர்ப்பணம்
ரொறன்ரோவின் முன்னணிக் கலைஞர்கள்

29.09.2017 வெள்ளிக்கிழமை இரவு 8:45 மணிமுதல்
இன்னிசை அமுதம் "சங்கீத வித்வ சிரோன்மணி"
ஸ்ரீமதி. பூமா கிருஷ்ணன் அவர்களின் மாணவி
செல்வி. மஹதி சிவகுமாரன்

30.09.2017 சனிக்கிழமை இரவு 8:00 மணிமுதல்
சங்கீத இசை அமுதம் "சங்கீத கலாஜோதி"
ஸ்ரீமதி. சாய்பிருந்தா பிரதீபன்
மற்றும் "மிருதங்க வித்வ சிரோன்மணி"
ஸ்ரீமான். கௌரிசங்கர் பாலச்சந்திரன் அவர்களின் மாணவன்
செல்வன். அருண் துரைராஜா

17வது ஆண்டு இசைவிழாவில் ரொறன்ரோவின் அனைத்து முன்னணி பக்கவாத்திய இசைக் கலைஞர்களும் இணைந்து நிகழ்ச்சிகளை சிறப்பிக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#1 Outstanding Agent *for* Outstanding Results. FOR SALE



Bedrooms:2/ Washrooms:2
Toronto



Bedrooms:3/ Washrooms:1
Oshawa



Bedrooms:6 / Washrooms:3
Oshawa



Bedrooms:4+1 / Washrooms:4
Richmond Hill



Bedrooms:3 / Washrooms:3
Newmarket



Bedrooms:3 / Washrooms:2
Toronto



Bedrooms:3 / Washrooms:3
Ajax



Bedrooms:4/ Washrooms:3
Markham



RE/MAX® Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independenlty Owned And Operated
*Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.*

Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
nanohomes@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களிடமும் திலீபன் இன்னும் பசியோடுதான் இருக்கிறான்



செப்டம்பர் 26. அகிம்சையின் மூலம் விடுதலையை வென்றடைய முடியும் என்று பாடம் நடத்தும் இந்திய அகிம்சாவாதிகளின் முகத்திரைகளை கிழித்து தனது மரணத்தின் மூலம் புது வரலாறு எழுதிய தியாக தீபம் திலீபனின் நினைவு நாள்.

அகிம்சை மூலம் விடுதலையை அடைந்ததாக கூறும் இந்தியா ஒரு அகிம்சைப் போராளியை கொன்று தனது இம்சை முகத்தை தமிழர்களுக்கு வெளிப்படுத்திய நாள்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்திருக்க, பசித்திருந்த பார்த்தீபன் எனும் தியாக ஒளி தன்னை அணைத்துக் கொண்ட நாளின் நினைவுகளை 30 வருடங்களின் பின்னர் நாம் மனதில் கொள்வது ஏன் அவசியமானது என்பதை ஆராய முயல்கின்றது இந்த கட்டுரை.

திலீபன் ஈழத் தமிழர்களின் ஒரு குறியீடு. திலீபனின் பசி என்பது தமிழ் இனத்தின் பசி. திலீபனை இன்றும் நாம் நினைவு கூர வேண்டியிருப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.





தீலீபன் தனது போராட்டத்திற்கு காரணமாக முன்வைத்த கோரிக்கைகள் இவை தான்.

• மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும், கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

• சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

• அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

• ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாக களையப்படவேண்டும்.

• தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகளில் ஒன்று கூட இன்று வரை மாற்றம் காணமால் அப்படியே இருக்கின்றது.

இன்னமும் ஈழத் தமிழர்களின் நிலங்களில் சிங்களவர்கள் திட்டமிட்டு குடியேற்றப்படுகின்றனர். தமிழர் நிலம் தொடர்ந்தும் அபகரிக்கப்படுகின்றது. தமிழர் வாழ்ந்த பூர்வீக நிலங்கள் சிங்கள பெயர்களை சூடிக் கொண்டு சிங்கள நிலங்களாக மாறுகின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் சிறைகளில் வாடுகின்றனர். தாம் இழைத்த குற்றம் என்ன என்பதே அறியாமலும் பல அப்பாவி தமிழர்கள் இலங்கை சிறைகளில் தவிக்கின்றனர்.

அன்று ஊர்க்காவல்படைகள்; இன்று இலங்கை இராணுவம். தமிழர் தாயகத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கையை விட அதிகமாக படையினர் பெருகி கிடக்கின்ற நிலங்களாக தமிழர் தாயகம் மாறி கிடக்கின்றன. இதனை விடவும் ஏராளமான இழப்புகளையும், அழிவுகளையும் தமிழினம் தொடர்ந்து சந்தித்து வருகின்றது.

ஆம்! தீலீபனின் கோரிக்கைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. 30 வருடங்கள் கடந்த பின்னரும் திலீபனின் பசி இன்னமும் தீரவில்லை!

தமிழ் மக்களின் அடிப்படை கோரிக்கைகள் கூட இதுவரை தீரத்து வைக்கப்படாத நிலை குறித்து பேசுவதற்கு திலீபனின் நினைவுகளை சுமக்கும் இந்த காலப்பகுதியே அதிகப் பொருத்தமானதாக இருக்கும்.

அதே சமயம் ஆயுதப் போராட்ட வடிவத்தில் மட்டுமல்ல; அகிம்சை வழியிலும் நாம் முன் வைத்த கோரிக்கைகள் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை என்பதையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு இதனை விட வேறென்ன சந்தர்ப்பம் எமக்கு வேண்டும்.

ஆனால், துரதிஷ்ட வசமாக இலங்கையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக சொல்லும் தமிழ் தேசியக் கூட்டமைபினரோ புலம் பெயர் தேசங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தம்மை காட்டிக் கொள்ளும் அமைப்புகளோ இவை குறித்து அதிகம் அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை.

கூட்டமைப்பு பாவம் சம்பந்தனுக்கு பின்னான தலைவரையும் விக்னேஸ்வரனுக்கு மாற்றான முதல்வரையும் தேடுவதிலும் நேரம் தொலைக்கின்றார்கள்.

புலம்பெயர் மண்ணில் ஏட்டிக்கு போட்டியாக தெருவிழாவும், பெருவிழாவும் வைத்து மக்களை அழைத்து வந்து தங்கள் மேடைக் காய்ச்சல்களுக்கு மருந்து தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இது போன்ற நினைவு நாட்களை வெறுமனே கடந்து செல்வதை விடுத்து, திலீபனின் கோரிக்கைகள் என்ன? அவை எவ்வாறு இன்றும் தமிழர் தாயகத்தில் நிலைத்திருக்கின்றன? அவற்றினை அடைவதற்கு நாம் எடுக்க கூடிய நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்து ஆராய்வதற்கான தொடக்க புள்ளிகளாக அவற்றை கொள்ள வேண்டும்.

தியாகி தீலிபன் என்றால் யார்? என்று கேட்கும் நிலையில் அடுத்த தலைமுறை உருவாகிவிடாமல் இருப்பதற்கு உரிய தெளிவு படுத்தல்களை இளம் தலைமுறையினர் மத்தியில் நாம் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமாக எமது இனம் விடுதலைக்காக கொடுத்த விலையின் மதிப்பினை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

இவையே ஒரு இனத்தின் விடுதலைக்காக தனது உயிரை தியாகம் செய்த ஒரு வீரனுக்கு நாம் செய்யும் மரியாதையாக அமையும்.

மாறாறக தெருவிழாவிலும், பெருவிழாவிலும் நடனமாடுவதும், பாடல்களை பாடுவதும் விடுதலையை பெற்று தந்து விடாது. கலைகளை வளர்க்கவும், களியாட்டங்களை நடத்தவும் பலர் இருக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் பயணத்திற்கு உரம் சேர்க்க வேண்டியவர்கள் கலை பண்பாடுகளை வளர்ப்பதற்காக கம்பு சுற்றுவது ஏன் என்று தெரியவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் மார்க்கம் தோன்ஹில் தொகுதியில் இடம்பெற்ற இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்த தமிழ் வேட்பாளருக்கு சந்தர்ப்பம் வழங்க தவறியதால் தமிழ் மக்களுக்கு கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அநீதி இழைத்து விட்டார். அவருக்கும் அவரது லிபரல் கட்சிக்கும் பாடம் கற்பிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு கொன்சவேற்றிவ் கட்சி ஆதரவாளருக்காக களமாடிய தமிழ் காங்கிரஸ் தோழர்கள் அப்படி ஒரு சம்பவம் சில வாரங்களுக்கு முன்பாக நடந்தது என்பதையே மறந்து அல்லது மறைத்தபடி தெரு விழாவிற்கு பிரதமர் வருகை தந்தது தமிழ் சமூகத்திற்கு கிடைத்த பெரு வெற்றி என்று கூவி திரியும் விசித்திரங்களையும் நாம் கேள்வி கேட்காமல் கடந்தே தான் ஆக வேண்டுமா ?.

தமிழர்கள் என்றாலே கேள்வி கேட்காமல் எதையும் நம்பி விடும் கோமாளிக் கூட்டம் என்று இவர்கள் எண்ணிக் கொள்கின்றார்களா ? அல்லது குறை ஞாபக மறதி (Memory Loss) நோயால் தமிழர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டிருப்பதாக இவர்கள் நம்புகின்றார்களா என்பதும் தெளிவாக தெரியவில்லை.

தெருவிழாக்களையும், பெருவிழாக் களையும் நிதி சேர் நடைபவனிகைளயும் வெற்றிகரமாக நடத்திக் காட்டுபவர்கள் ஏன் திலீபனின் கோரிக்கைகள் இன்னும் பசியோடு இருப்பதை அனைத்துலகிற்கும் தெளிவுபடுத்த முயற்சி எடுக்கவில்லை?

விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அவர்கள் தொடர்பில் வெளிப்படையான நிகழ்வுகளை நடத்துவது தமது எதிர்கால இருப்பிற்கும் கனேடிய அரசாங்கத்தின் நிதி வழங்கல்களிற்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் தம்மை புலிநீக்கம் செய்து புனிதர்களாக்கிக் கொண்டுள்ளவர்கள் மறுபுறம் காலம் காலமாக தமிழர்களின் உணர்வெழுச்சியோடு நடத்தப்படும் மாவீரர் தினங்களை பிரித்து நடத்தி பிளவுகளை ஏற்படுத்தவதற்கு ஏன் முயல்கின்றார்கள் என்று நாம் கேள்வி கூட கேட்கக் கூடாது என அவர்கள் விரும்புகின்றார்கள்.

விடுதலைப்புலிகள் வெறுமனே ஆயுதப் போராட்டத்தை மட்டும் நம்பியவர்கள் அல்ல அகிம்சையை உலகிற்கு போதித்த காந்தி தேசத்துடன் கூட அகிம்சை வழியில் போராடித் தோற்றவர்கள் என்பதை உலகிற்கு சொல்வதற்கான வாய்ப்பினை தானே தீலீபனின் மரணம் தந்திருக்கின்றது.

அகிம்சையின் பெரு நெருப்பில் தன்னை ஆகுதியாக்கிய திலீபனின் தியாகத்தில் இருந்து நாம் ஏன் எமக்கான பாதைகளை அடைய முயலக் கூடாது?

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது தமிழ் மக்களின் மீதான இன அழிப்பை தடுத்த நிறுத்துங்கள் என்ற குரலோடு தீயில் எரிந்து மாண்ட முத்துக்குமாரின் மரணம் ஏற்படுத்திய அதிர்வுகளை நீர்த்துப் போகச் செய்த இந்திய ஆளும் தரப்பின் நகர்வுகளை நாம் மீண்டும் மீண்டும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முத்துக்குமாரின் மரணம் ஏற்படுத்திய எழுச்சி தமிழகம் முழுவதும் பரவி விடாமல் நடுப்பதற்காக, அவரின் புகழ் உடலை தமிழ் தேசியம் பேசிய கனவான்களின் துணையோடு எரித்து வெற்றி கண்டது இந்திய அரசு என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

தனது உடலை ஆயுதமாக்கிப் போராடுங்கள் என்ற முத்துக்குமாரின் இறுதிக் கோரிக்கை தீலீபனின் தியாகத்தில் இருந்து முகிழ்ந்து வந்த சிந்தனையின் வடிவம் தானே?

மக்கள் புரட்சியின் மூலமாகவே சுதந்திர தமிழீழத்தை அடைய முடியும் என்று மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தீர்க்க தரிசனமாய் வெளிப்படுத்திய தியாகி தீலீபனை நினைவில் சுமப்பதன் மூலமாக நாம் எமக்கான உரிமைத் தேடலை உயிர்ப்போடு வைத்திருக்க முடியும்.

ஆயுத மோதல்களால் தீர்வு பெற முடியாது என்பதை முள்ளிவாய்க்கால் எமக்கு உணர்த்தியிருக்கின்றது எனவே நாம் நல்லிணக்க அரசுடன் பேசி, ஜனநாயக வழியில் தீர்வினை பெற முயல்கின்றோம் என்று வார்த்தைக்கு வார்தை ஜனநாயக பாடம் நடத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கூட ஜனநாயகப் போராளியான திலீபனின் தியாகம் குறித்தும் அவர் முன்வைத்த கோரிக்கைகள இன்றும் பசியோடு இருப்பது குறித்தும் வாய்திறப்பதே இல்லை.

தாயகத்திலும் சரி, புலம் பெயர் தேசங்களிலும் சரி, தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளின் நியாயங்களை கூட பேச முடியாதவர்களிடம் தான் தமிழர்களின் எதிர்காலம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் விடுதலை உணர்வை நினைவு படுத்தும் நினைவு நாட்களை திசைதிருப்பும் செயல்பாடுகளை அரசாங்கம் திட்டமிட்ட வகையில் முன்னெடுத்து வருவதை அண்மை நாட்களில் தெளிவாக உணர முடிகின்றது.

தியாக தீபம் தீலீபனின் 30வது நினைவு தினம் உணர்வு பூர்வமான அனுஸ்டிக்கப்பட்ட வேளையில் அவரின் நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெற்ற பெரு நிறுவனம் ஒன்றின் வியாபார மேம்படுத்தல் நிகழ்வு நடைபெற்றதும் அதில் மாகாண சபை உறுப்பினர் இமானுவேல் ஆர்னல்ட கலந்து கொண்டதும் தற்செயலான நிகழ்வாக கடந்து விட முடியாது.

இந்த நிகழ்வு ஏற்கனவே திட்டமிட்ட ஒன்று என்னும் அதில் தான் கலந்து கொண்டது தவறானது அல்ல என்றும் பொருள்பட மாகாண சபை உறுப்பினர் வழங்கிய தன்னிலை விளக்கம் விவாதப் பொருளாகியுள்ளது.

குறைந்த பட்சம் தனது செயலுக்கு வருத்தத் தெரிவிக்கக் கூட விரும்பாத அவரின் போக்கு கண்டனத்திற்குரியது.

மறுபுறம் தமது நிதிசேர் நடைபவனிக்கும்,, அபிவிருத்தி மாநாட்டிற்கும், தெருவிழாவிற்கும் அவரை சிறப்பு விருந்தினராக அழைத்து கௌரவப்படுத்திய கனேடிய தமிழர் பேரவை இந்த விடயத்தில் மௌனம் காப்பதன் பின்னால் உள்ள அரசியலையும் நாம் விளங்கிக் கொள்ள முன்வரவேண்டும்.

தமது அனைத்து நடவடிக்கைகளையும் விமர்சிப்பதும் எதிர்பதுமே இவர்களின் பாதை என்று தம்மீதான விமர்சனங்களை எதிர்கொள்ளாமல் பகை வளர்பதும் விமர்சிப்பவர்கள் மீது சேறுபூசும் பரப்புரைகளை தமது பரப்புரை அடியாட்கள் மூலம் செய்ய முயல்வதும் ஆரோக்கியமானதா என்பதையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஜனநாயக மாண்பினை குழிதோண்டிப் புதைத்துவிட்டு தனிமனித புராணங்களை பாடிக்கொண்டும் அவர்களின் எதேச்சாதிகாரமான முடிவுகளின் பின்னால் ஒரு இனத்தை அணிதிரளச் செய்யுமாறு கோருவதும் மிக ஆபத்தான விளைவுகளையே எமக்கு ஏற்படுத்தும்.

கனேடிய தமிழ் அரசியல் கட்சி சார்ந்தவர்களாலும் , தமிழ் அமைப்புகளினாலும் தமது இருப்பின் அடையாளத்தை நிலைநிறுத்த கோடைகாலத்துக்கும் குளிர் காலத்துக்குமாக நிகழ்வுகள் தேடி நடத்தவும் , அதன் மீதான மக்களின் கவனத்தை திசை திருப்பவும் முடிந்தவர்களால்

தீலிபனின் கோரிக்கைகள் இன்றும் நீடித்திருக்கும் நிலை குறித்து கலந்தரையாடல்களைக் கூட நடத்த முடியாமல் இருப்பது தான் தமிழர்களின் சாபம்.

30 வருடங்களாக தமிழர்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காகவே போராடுகின்றார்கள். அதனை அவர்கள் அடைவதற்கு உதவி செய்யுங்கள் என்று கனேடிய பிரதமரிடம் வேண்டுகோள் விடுக்க முடியாதவர்கள், பிரதமர் தமது கடையில் இளநீர் அருந்துவதே தமிழர்களுக்கு பெருவெற்றி என்று பிரச்சாரம் செய்கின்றார்கள்.

தீலிபன் முன்வைத்த கோரிக்கைகள் மிக அடிப்படையானவை மக்களின் அன்றாட வாழ்வுகளோடும் பாடுகளோடும் தொடர்பானவை அவற்றைக் கூட தர மறுக்கும் இலங்கை அரசோடு இவர்கள் பேசும் நல்லிணக்கம் எவ்வாறானது என்பதை மக்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு காரணமான இராணுவ அதிகாரி ஜகத் ஜெயசூரியவிற்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பான சட்ட நடவடிக்கையில் இருந்து அவரை பாதுகாப்பதற்கு தமது அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று சொல்லும் மைத்திரிபால சிறிசேனாவின் அரசாங்கத்துடன் இணக்கமாக போவதன் மூலமே தமிழ் மக்களுக்கு தீர்வினை பெற முடியும் என்று கூறுபவர்களையே நாம் தலைவர்களாக கொண்டாட வேண்டும் என்று அவர்கள் எமக்கு பாடம் எடுக்கின்றார்கள்.

இந்த பாடங்களை எல்லாம் கற்றுத் தெளிந்து கொண்ட பின்னரே நாம் விடுதலை பற்றி மூச்சு விட முடியும். அதுவரை ஸ்ராட் த மியுசிக் டண்டணக்கா ணக்கா டண்டனக்கா.!



**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வரலாற்றை தெரிந்து கொள்ளாத இனம் தன்னை சுய இன அழிப்புச் செய்து கொள்ளும் என்கின்றனர் வரலாற்றாய்வாளர்கள்.

இந்தக் கூற்று எந்த இனத்திற்கு பொருந்துகின்றதோ இல்லையோ தமிழினத்திற்கு பொருந்தும்.

இன்றைக்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றதாக கருதப்படும் தமிழ் மொழிபேசும் இனம் தன் வரலாற்றை தொலைத்து நிற்பது போல் வேறெந்த இனமும் தொலைத்ததாக வரலாறு இல்லை.

இது தற்செயலானதா திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு அழிவின் நீட்சியா என்பது அய்விற்குட்படுத்தப்பட வேண்டியது.

ஆங்காங்கே வரலாற்றை பதிவு செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளும் வல்லாதிக்கத்தின் பலம் கொண்ட கரங்களால் நசுக்கப்பட்டு அழிக்கபடவே அந்த எண்ணத்தை மகாத்மான காந்தியின் போராட்ட வடிவத்தின் உச்சத்தை தொட்டு தன் உயிரை ஆகுதியாக்கிய மகத்தான வீரனின் வரலாற்றை தனது இனம் மறந்துவிடக் கூடாது என்றும் காந்தியை விட அகிம்சையின் வீச்சை உலகிற்கு உணர்த்திய திலீபனின் தியாகத்தை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே தான் இந்த சவாலான பயணத்தை ஆரம்பித்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

திலீபனின் திரைப்படத்திற்கான ஆய்வுகளை சுமார் 15 ஆண்டுகளாக முன்னெடுத்ததாகவும் திலீபன் வாழ்ந்த வீட்டிற்கு சென்று அவர் குறித்த பல்வேறு விபரங்களை பெற்றதாகவும் திலீபனுடன் பழகிய மனிதர்கள் போராளிகள் தளபதிகள் என பலரிடம் இருந்து பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் இந்த திரைப்படத்திற்கான திரைக்கதை உருவாக்கபட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த திரைப்படம் திலீபனின் வரலாற்றை எந்தவித சமரசமும் இன்றி என்பதோடு அவ்வாறான ஒரு முயற்சியை தான் ஒருபோதும் மேற்கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இந்திய தணிக்கை குழுவை தாண்டியும் இது உலகாளவிய ரீதியில் கவனத்தை பெறும் என்ற ஆனந்தமூர்த்தி நம்புகின்றார்.

இந்தியாவில் வெளியிட முடியாத ஒரு திரைப்படத்திற்கு தொடர்ந்து தன்னால் முதலிட முடியாது என இந்த திரைப்படத்தின் தயாரிப்பாளர் கைவரித்த விட 30 ஆண்டு கடந்தும் நிறைவேறாமலேயே இருக்கும் திலீபனின் கோரிக்கை போல திலீபனின் வரலாறும் முற்றுப் பெறாமல் தொக்கி நிற்கின்றது.

80 வீதமான பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் குறித்த 12 நாள் காட்சிகளும் இன்னும் சில காட்சிகளும் மட்டுமே மிச்சமிருக்கின்ற நிலையில் திலீபன் என்கின்ற வரலாற்று காவியம் காத்து நிற்கின்றது.

தமது முதலீட்டிற்கான பாதுகாப்பு களுக்கான செலவீனமாக இந்தி மதிப்பில் ஒரு கோடி ரூபாவை தயாரிப்பாளர் எதிர்பார்கின்றார் எஞ்சிய காட்சிகளை எடுத்து திரைப்படத்தை முடிப்பதற்கு மேலும் இரண்டு கோடி இந்திய ரூபாய் தேவைப்படுகின்றது.

தனது படைப்பின் நியாயத்தையும் நேர்மையினையும் உணர்வதற்கு தான் இதவரை எடுத்து முடித்து தயார் செய்துள்ள பகுதிகளே போதுமானது என்றும் இந்த முயற்சியினை தொடர்வதற்கு விரும்புகின்றவர்கள் எப்போது வேண்டுமானாலும் அதனை பாரப்பதற்கும் தனது திரைக்கதையின் ஆளத்தை புரிந்த கொள்வதற்கும் தான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

புலம்பெயர் தேசங்களில் இருந்து பல



# திலீபன் திரைப்படம் என்னாச்சு ?



மூட்டைகட்டி விட்டு வணிக ரீதியான திரையாக்க முயற்சிகளுக்குள் படைப்பாளிகள் தங்களை ஈடுபடுத்த தொடங்கி விட்டனர்.

இந்த பின்னணிகளில் இருந்து வேறுபட்டு ஒரு வரலாற்று நாயகனின் வாழ்வை திரையில் பதிவு செய்யும் முயற்சியை முன்னெடுத்திருக்கின்றார் இயக்குனர் ஆனந்த மூர்த்தி.

பெங்களூரில் பிறந்த தமிழன் தான் இந்த ஆனந்தமூர்த்தி இயக்குநர் கதிரிடம் 'காதல் தேசம்', 'காதலர் தினம்' போன்ற திரைப்படங்களிலும், இயக்குநர் அமீரின் 'ஆதிபகவன்' படத்திலும், இயக்குநர் பாலாவின் 'பரதேசி'யிலும் பணிபுரிந்த அனுபவத்தோடு 'திலீபன்' என்ற தனது வாழ்வின் இலட்சியப் படைப்பை ஆரம்பித்துள்ளார்.

தமிழர்களின் சரியான வரலாறு எங்கேயும் பதிவாகிவிடக் கூடாது என்ற சாபம் ஆனந்த மூர்த்தியையும் விட்டுவைக்கவில்லை.

தியாக தீபம் திலீபனின் 30வது ஆண்டு நினைவாக வெளிவரும் ஈகுருவி சிறப்பிதழுக்காக ஆனந்தமூர்த்தியை தேடிப் பிடித்து தொலைபேசியில் பேசினோம் .

தான் சிறுவனாக இருந்த காலத்தில் தமது வீட்டிற்கு அருகில் இருந்து விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் தொடங்கிய தமிழின விடுதலை தொடர்பான உணர்வு திலீபனின் வீரமரணத்துடன் தன்னுள் பெருந்தீயாய் மாறியதாக கூறினார்.

ஆகிம்சையின் தந்தையாக கருதப்படும் இந்திய தேசபிதா

**80 வீதமான பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் குறித்த 12 நாள் காட்சிகளும் இன்னும் சில காட்சிளும் மட்டுமே மிச்சமிருக்கின்ற நிலையில் திலீபன் என்கின்ற வரலாற்று காவியம் காத்து நிற்கின்றது.**

திரையில் கொண்டு வரும் ஒரு முயற்சி என்றும் எந்த ஒரு அழுத்தத்திற்காகவும் தனது முடிவில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது என்றும் அவர் உறுதிபட தெரிவிக்கின்றார்.

இந்தியாவின் தணிக்கைக் குழு விடுதலைப் புலிகளின் கொடியினை தாங்கி வெளிவரும் படைப்புகளை அனுமதிக்காது என்பது தெரிந்து கொண்டே தான் திரைப்படத்தை ஆரம்பித்தாக ஆனந்தமூர்த்தி கூறுகின்றார்.

புலிக்கொடியும் விடுதலைப் புலிகள் குறித்த பதிவுகளும் இல்லாமல் திலீபன் என்ற திரைப்படத்தை எடுப்பது எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாதது இல்லாத நிலையில் இது போன்ற ஒரு முயற்சிக்கு ஆதரவளிப்பதும் இந்திய நலன்களை பகைத்துக் கொள்வதும் தமது வர்த்த முயற்சிகளுக்கு ஆபத்தானது என்பதால் இந்திய தணிக்கை குழுவை சமரசம் செய்யும் வகையிலான திருத்தங்களை மேற்கொண்டால் இந்த திரைப்படத்தை வெளியிட தாம் உதவி புரிவதாக புலம்பெயர் தமிழர்களின் பலம் பொருந்திய பெருவணிக நிறுவனங்கள் ஆனந்த மூர்த்தியிடம் பேரம் பேசியிருக்கின்றன.

ஆனால் அவ்வாறு சமரசம் செய்து இதனை ஒரு புனைவாக மாற்றுவதும் விடுதலைப் புலிகளின் அடையாளங்களை மறைத்தவாறு இந்த திரைப்படத்தை வெளியிடுவதும் திலீபனை மீண்டும் கொலை செய்வதற்கு ஒப்பானது என்பதால் அந்த பாவத்தை தான் ஒருபோதும் செய்ய முடியாது என அவர்களிடம் உறுதிபட கூறியதாகவும் ஆனந்தமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

இதுவரை எடுக்கப்பட்ட காட்சி



ஈழத்தமிழர்கள் இந்தியாவில் உருவாகும் வணிக ரீதியிலான திரைப்படங்களுக்கு முதலீடுகளை மேற்கொண்டு வரும் நிலையில் தமிழர்களின் வரலாற்றின் திருப்புமுனையாக மாறிநிற்கும் திலீபனின் வாழ்வையும் மரணத்தையும் பேசும் ஒரு முயற்சிக்கு எவருமே ஆதரவளிக்கவில்லை என்கின்ற அதங்கமும் வேதனையுமே ஆனந்தமூர்த்தியின் குரலில் மிஞ்சிக் கிடக்கின்றது.

இது ஒரு வணிக முயற்சி அல்ல மாறாக ஒரு இனத்தின் வரலாற்றை பதிவு செய்த ஆவணப்படுத்தும் நோக்கம் கொண்ட படைப்பு. இந்த படைப்பினை வெளிக்கொண்டு வருவதன் மூலம் திலீபன் என்கின்ற ஒரு போராளியின் வாழ்வும் வரலாறும் மட்டுமல்ல மாறாக ஈழத் தமிழர்களின் போராட்ட வாழ்வும் அவர்களின் அரசியல் அபிலாசைகளும் அதன் மீது வல்லாதிக்க சக்திகள் மேற்கொண்டு வரும் அழிவுகளும் பதிவு பெறும் என்பதே அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

திலீபனின் இலட்சியங்களை அடையும் புனிதப் பயணத்திற்காக எம்மால் செய்யக் கூடியதெல்லாம் ஒன்று தான் அந்த மாவீரனின் மரணத்திற்கான காரணிகள் இன்றும் பசியோடு இருக்கின்றன என்பதை பதிவு செய்வது தான். அதனை நிறைவேற்றும் ஒரு முயற்சிக்கு எம்மால் என்ன செய்ய முடியும் என்பதை சிந்திப்பதும் அதை நோக்கி முதல் அடி எடுத்து வைப்பதுமே இந்த காலத்தின் கட்டாய தேவையாகின்றது.

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனின் காத்திருப்பு...!



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் ஏதும் முன்னெடுக்கப்படாமல் இன்னமும் 70க்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பலருக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்னவென்பது தொடர்பிலேயே சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சரியான தெளிவில்லை. அரசியல் கைதிகள் விடயத்தில் கோப்புக்கள் தொலைந்து விட்டதாக நீதிமன்றங்களில் சட்டமா அதிபர் திணைக்களம் பதிலளித்த வரலாறுகளும் உண்டு. இப்படியான நிலையில்தான்,காரணங்கள் தெரியாமல், காரியங்களின் முன்னேற்றமின்றி தசாப்தங்கள் தாண்டியும் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள் பலரும். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவ்வப்போது எழுந்த குரல்களும் அரசினால் பலவந்தமாக அடக்கப்பட்டது. இல்லையென்றால், கண்டுகொள்ளப்படவில்லை.

சந்தேகத்தின் பேரில் யாரையும் எந்தத் தருணத்திலும் கைது செய்து வழக்கு விசாரணைகளின்றி தடுத்து வைக்கும் 'வதை' அதிகாரத்தினை இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பொலிஸ் தரப்புக்களுக்கு வழங்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஜெஆர். ஜெயவர்த்தனவினால் அறிமுகப் படுத்தப்பட்டு 38 ஆண்டுகளாகிறது. இந்தக் காலப்பகுதிக்குள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைகளில் நிரப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கானது. அப்படி கைது செய்யப்பட்டவர்களில் சிறைகளிலும், வதை முகாம்களிலும் படுகொலையானவர்களின் எண்ணிக்கையும் நூற்றுக்கணக்கானவை.

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டது. வன்முறைக்கான எந்த முனைப்பும் காணப்படாத நிலையிலும், மனித உரிமைகளைக் கருத்தில் கொண்டும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்ட வேண்டும் என்பது மனித உரிமை அமைப்புக்கள், தமிழ் அரசியல் கட்சிகள், சர்வதேச நாடுகளின் தொடர் கோரிக்கையாகும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலும் பயங்கரவாத் தடைச் சட்டத்தின் நீக்கம் தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை. அதன்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் சோக வரலாறு தொடர்கின்றது.

(பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக மைத்திரி—ரணில் அரசாங்கம் முன்வைக்கவுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினையும் விட மூர்க்கமானது என்கிற குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன. அந்தச் சட்டத்தின் வரைபினை இறுதி செய்யும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சு அதில் பிரதான இடம் வகிக்கின்றது.)

தமிழ்த் தேசியப் போராட்டத்தினை நினைத்துப் பார்க்க முடியாத அர்ப்பணிப்புக்களும், மனோ திடமுமே இன்னமும் வீரியத்துடன் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. அதற்காக ஆயிரக்கணக்கானோர் தமது உயிர்களை கொடையாக்கிவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். அவர்களில், தமிழ் மக்களின் மனங்களின் தியாகத்தின் தீபமாக இன்னமும் எழுந்து எரிந்து கொண்டிருக்கின்ற திலீபன் முக்கியமானவர். அர்ப்பணிக்கையும் மனோ திடத்தினையும் இன்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், நல்லூர் ஆலய வீதியில் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் தொடர்ச்சியாக 12 நாட்கள் நிகழ்த்திக் காட்டி உயிர்துறந்தார். தற்கொடைகள் (தற்கொலை— தற்கொலைத் தாக்குதல்கள்)மீது இந்தப் பத்தியாளருக்கு நிறைய மாற்றுக்கருத்துக்கள் உண்டு. ஆனால், திலீபன் அஹிம்சையின் பெரும் சக்தியாக எழுந்து நின்று முன்வைத்த கோரிக்கைகள் இன்னமும் தமிழ் மக்களின் கோரிக்கைகளாக தொடர்வதுதான் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் வடிவங்கள் மாறினாலும், அதன் வலுக்குறைந்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக்கொண்டிருக்கின்றது.

திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த போது முன்வைத்த பிரதான ஐந்து கோரிக்கைகள்:—

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
- புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றம், உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
- இடைக்கால அரசு நிறுவப்படும் வரை "புனர்வாழ்வு" என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
- வடக்கு & கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
- இந்தியா அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

திலீபனின் ஐந்து கோரிக்கைகளும் பல வடிவங்களிலும் இன்னமும் நேரடியாக தீர்வு காணப்படாமல் நீடிக்கின்றன. அதில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் விடுதலை பிரதானமானது. நல்லூர் வீதியில் கடந்த 15ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட திலீபனின் நினைவு நிகழ்வில், அஞ்சலி தீபத்தினை அரசியல் கைதியொருவரின் தாயார் ஏற்றி வைத்தார். அந்தத் தாயார் தன்னுடைய மகனுக்காக பத்து ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கின்றார்.

இன்னொரு பக்கம், வடக்கு—கிழக்கின் இன விகிதாசாரத்தை திட்டமிட்டு குலைக்கும் நடவடிக்கைகளின் போக்கில், சிங்கள—இராணுவக் குடியேற்றங்களை எந்தவிதமான தயக்கமும் இன்றி தென்னிலங்கை செய்து கொண்டிருக்கின்றது. முல்லைத்தீவு, மன்னார் காடுகள் எரித்து அழிக்கப்படுகின்றன. அங்கு சதித் திட்டத்தின் மூலம் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பாரம்பரியக் காணிகள் முல்லைத்தீவின் கரையோரங்களில் சிங்கள மக்களுக்காக பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே முன்னின்று செய்கிறார். காணிகள் ஒதுக்கீடுகள் பற்றி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனோடு எந்தவித உரையாடல்களையும் ஆளுநர் செய்வதில்லை. சிவில் அதிகாரியாக வடக்கிற்கு வந்த ரெஜினோல்ட் குரேயை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வடக்கு மாகாண சபையும் பெருவாரியாக வரவேற்றது. ஆனால், அவர், தென்னிலங்கையின் அரசியலையும், அத்துமீறலையும் செய்வதில் எந்தத் தயக்கமும் இன்றி பயணிக்கின்றார். அதற்காக அவர் பேசுகின்ற கதைகளும், காரணங்களும் எரிச்சலூட்டுவன.

வடக்கு இராணுவத்தின் ஆக்கிரமிப்பினால் சூழப்பட்டிருக்கின்றது. இன்னமும் பொது மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி களில் இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. காணி விடுவிப்பினை வலியுறுத்தி நூற்றுக்கணக்கான நாட்கள் தாண்டிய தொடர் போராட்டங்களை மக்கள் முன்னெடுக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. காணி விடுவிப்புத் தொடர்பில் வாக்குறுதிகள் காலத்துக்கு காலம் வழங்கப்பட்டாலும், அந்த வாக்குறுதிகளின் வாழ்வுக்காலம் மிகவும் குறைவு. இந்தப்பத்தி எழுதப்பட்டிருக்கின்ற தருணத்திலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும், காணி மீட்புக் கோரிக்கையோடு நூற்றுக்கணக்கான மக்களும் பல பகுதிகளில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆயுத வழி நின்று போராடிய சமூகம் மீண்டும் அஹிம்சையின் உச்சத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

ஆனால், மறுபுறத்தில், தமிழ் மக்களின் போராட்டங்கள் மீதான பற்றுறுதியைக் குலைக்கும் சதித் திட்டங்கள் பெருவாரியாக முன்னெடுக்கப்படுகின்றன. அதில், தென்னிலங்கையும், அதன் சார்ப்புச் சக்திகளும் மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்தில் வந்து நின்று ஆடிக்கொண்டிருக்கும் இந்திய துணைத் தூதுவர் அலுவலகமும் முக்கியமானது.

திலீபன், இலங்கைக்கு எதிரான போராட்டத்தின் குறியீடு மாத்திரமல்ல. அஹிம்சையின் தேசம் என்று தொடர்ந்து முன்னிறுத்தும் இந்தியாவுக்கு எதிரான அஹிம்சையின் குறியீடும் ஆகும். திலீபன் நினைவுகூரப்படுகின்ற ஒவ்வொரு தருணத்திலும் இந்தியாவும், அதன் ஏவலாளிகளும் மிகுந்த எரிச்சலடைகின்றார்கள். அதுபோல, இந்திய இராணுவத்தினால் வடக்கு—கிழக்கில் அரங்கேற்றப்பட்ட படுகொலைகள் நினைவுகூரப்படுகின்ற போதெல்லாம், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவராலயம் ஆதங்கப்படுகின்றது. பத்திரிகைகளின் ஆசிரியர்களையும், உரிமையாளர்களையும் அழைத்து பேசுகின்றது. பல நேரங்களில் மிரட்டுகின்றது. எப்போதுமே பசுந்தோல் போர்த்திய நரியாகவே இந்திய மத்திய அரசின் அங்கங்கள் தமிழ்த் தாயகத்துக்குள் நிலைபெற எத்தணிக்கின்றன. அதனாலேயே, திலீபன் என்கிற பெரு நெருப்பு எரிகின்ற போதெல்லாமல், அதனை அணைக்கும் மறைமுக வேலைத்திட்டங்களிலும் ஈடுபடுகின்றது.

திலீபன், தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தின் அடிப்படைக் கோரிக்கைகளை மாத்திரமல்ல, பிராந்திய வல்லரசுகளின் சதித்திட்டங்களையும் தொடர்ச்சியாக எதிர்கொள்ள வேண்டும் என்கிற உணர்வினை விதைத்துச் சென்றிருக்கின்றார். அவருக்காக ஏற்றப்படும் தீபங்கள் தியாகத்தின் வடிவமாகவும், போராட்டத்தின் ஓர்மமாகவும் எழுந்து எரிகின்றன. அதுபோல, விடுதலையென்கிற பெரும் விடியலுக்கான காத்திருப்பினை, திலீபன் பசியோடு காத்திருந்தது போலஞ் எம்மை காத்திருக்கவும், தக்கவைத்துக் கொள்ளவும் வலியுறுத்துகின்றன.

**புருஜோத்தமன் தங்கமயில்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமணத்துறவிகள்-காந்தி-திலீபன்

## ஒரு வரலாற்றுத்தொடர்பு



தியாகி திலீபன் பற்றிப் பேசும்போது மகாத்மா காந்தி பற்றிய பேச்சும் சேர்ந்தே வருவது இயல்பு. காரணம் இருவரும் அகிம்சையால் அறியப்பட்டவர்கள்.

ஆனால் அதையும்தாண்டி திலீபனிற்கும் காந்திக்கும் உள்ள தொடர்புகள் ஆச்சரியமானவை. இது பற்றித் தெரிந்து கொள்வதற்கு நாம் சங்ககாலத்திற்கு செல்லவேண்டும்.

புலவர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள் என்று அறியப்படும் கி.மு நான்காம் நூற்றாண்டில் இருந்து கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரையான சங்ககாலக் கல்வெட்டுக்கள் சொல்லும் வரலாறு ஒன்று உண்டு.

அதாவது சமணமுனிவர்கள் (எளிய வாழ்க்கை முறையையும் துறவு நிலையையும் பின்பற்றுபவர்கள்) தங்களுடைய சமணச்சின்னங்கள் இருக்கும் குறிப்பிட்ட எல்லைக்குள் யாரும் யாரையும் கொல்லக்கூடாது என்பதை ஒரு கண்டிப்பான நடைமுறையாக கொண்டிருப்பார்கள்.

ஒரு வேளை அந்த நடைமுறையை மீறி அங்கே ஏதாவது கொலைகள் நடந்தால் சமணமுனிவர்கள் கொலையாளி அல்லது கொலையாளிகளின் வாசல் முன் அமர்ந்து உண்ணாவிரதம் இருந்து உயிர்துறப்பார்கள். இதனை வடக்கிருத்தல் என்று அழைப்பார்கள்.

சம்பந்தப்பட்ட கொலையாளிகள் வடக்கிருந்து உயிர்துறத்தலின் பழி பாவத்தில் இருந்து தப்பமுடியாது. மக்களின் அங்கீகாரம் ஒருபோதும் கிடைக்காமல் கொலையாளிகள் அழிந்துபோவர்கள். இது வடக்கிருத்தலின் (உண்ணாவிரதம் இருத்தலின்) வரலாற்றுக் கதை.

இதன் அடுத்த படிமுறையாகத்தான் காந்தி வருகிறார்.

மகாத்மா காந்தி அவர்கள் வடக்கிருத்தல் என்கின்ற உண்ணாவிரதம் இருத்தலை சமண முனிவர்களின் வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்கிறார். வடக்கிருத்தலை அடிப்படையாக வைத்து காந்தியம்என்றதன்னுடையசித்தாந்தத்தை வகுத்துக்கொள்கிறார். தன்னுடைய நடை உடை பாவனைகளையும் அந்த சமணமுனிவர்கள்போல் எளிமையாக்கிக்கொள்கிறார்.

தியாகம் என்கின்ற பலமான ஆயுதத்தை ஏந்தி அறத்தால் அதிகாரம் செலுத்தினார். அதனால் தான் உலகின் மதிப்புமிக்க மனிதர்கள் எல்லாம் காந்தியைப் போற்றவும் புகழவும் செய்தார்கள்.

உலக நாடுகளின் தேசிய சுய நலன்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட அடிப்படையில் உலகில் நிரந்தர அமைதி நிலவச்செய்வது எவ்வாறு என்கின்ற நெடுநாள் பிரச்சனையை ஆராயும்போது காந்தியின் நெறி வழிமுறையை பரந்த அளவில் பின்பற்றுவதுதான் ஒரே தீர்வு என்று தன்னுடைய Einstein on peace என்ற நூலில் குறிப்பிடுகிறார் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானியான ஐன்ஸ்டைன் (Einstein) அவர்கள்.

காந்திய சித்தாந்தத்தை மென்மேலும் ஆழ்ந்து படிக்கையில் அன்பின் ஆற்றல் பற்றிய எனது ஐயப்பாடுகள் மெல்லமெல்ல விலகின. பேரன்பு என்ற கோட்பாட்டை காந்தியின் வழிமுறையிலான அகிம்சை வாயிலாய் நடைமுறைப்படுத்துவதே சுதந்திரத்திற்காக அல்லாடும் ஒடுக்கப்பட்ட மக்கள் கையாளக்கூடிய ஆற்றல்மிக்க ஒரே ஆயுதம் என்பதை தெள்ளத் தெளிவாக உணர்ந்தேன் என்று தனது Strength to love நூலில் அமெரிக்கப் புரட்சியாளர் மாட்டின் லூதர் கிங் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இனி திலீபனிற்கு வருவோம். சமணமுனிவர்களிடம் இருந்து காந்தியும் காந்தியிடம் இருந்து திலீபனும் கற்றுக்கொண்டதில் ஒரு வரலாற்றுத் தொடர்பும் சுவாரஸ்யமும் நிறைந்திருக்கிறது.

அரச பயங்கரவாதத்திற்கு எதிரான அறவழிப்போராட்டங்கள் தோற்றுப்போன நிலையிலும் அந்த அரச பயங்கரவாத கொலைக்களத்தின் வலிகளை அனுபவித்த மக்கள் கூட்டம் என்ற வகையிலும் ஆயுதமேந்திப் போராட முடிவெடுத் இளைஞர் கூட்டத்தில் சமணமுனிவர்கள் போல் காந்திபோல் சாத்வீகம் நிறைந்திருந்தது ஆச்சரியமே.

ஏனெனில் வடக்கிருத்தலை அடிப்படையாகக்கொண்ட சாத்வீகபோராட்டம் என்பது தியாகத்தை ஆயுதமாகக் கொண்டது. அறத்தால் அதிகாரம் செலுத்துவது. தான் நம்பும் நேசிக்கும் ஒன்றுக்காக எப்போதும் உயிர்துறக்கத் தயாராய் இருப்பது. இன்னும் சொல்லப்போனால் அகிம்சை என்பது வீரத்தின் அதிஉச்ச வெளிப்பாடு. அகிம்சை பார்ப்பதற்கு இலகுவான வழிமுறைபோல் தோன்றினாலும் அதை பின்பற்றுவது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல. சத்தியமும் வீரமும் பொங்கிப்பிரவாகிக்கும் ஒருவனாலேயே பூரணமாக அகிம்சையை கடைப்பிடிக்கமுடியும்.

ஆம் திலீபன் அப்படித்தான் இருந்தான். வயதில் மிக இளமையானவனாக இருந்தபோதும் கலைந்த முடியும் வெண்ணிற ஆடையும் என்று எளிமையானவனாகவும் மென்மையான வனனாகவும் சமணமுனிவர்களினதும் காந்தியினதும் நடை உடை பாவனை கொண்டவனாக இருந்தான்.

அரசியலிற்கும் விமர்சனங்களிற்கும் இன மொழி வேறுபாடுகளிற்கும் அப்பால் சமணமுனிவர்கள் காந்தி திலீபன் என்ற வரலாற்றுத் தொடரில் தனது தியாகத்தின் மூலம் யாராலும் வெல்லப்படமுடியாதவனாக மாறிப்போனான்.

சமணர்களும் காந்தியும் போல் அல்லாமல் ஒரு ஆயுதப்போராளியால் எப்படி இந்த உச்ச நிலையை அடைய முடிந்தது என்பது நீண்ட ஆய்விற்குரியது.

அதே நேரம் இவ்வாறு பலநூற்றாண்டு வரலாறு கொண்ட வடக்கிருந்து உயிரை மாய்ப்பதால் ஏற்படும் சாபத்திற்கு ஆளாகுதல் என்கின்ற வரலாற்றுத்தவறையும் பழியையும் இந்தியா ஏன் செய்தது எவ்வாறு செய்தது என்பதும் நீண்ட ஆய்விற்குரியது.

காந்திய தத்துவத்தை முழமையாக உள்வாங்கிய பிள்ளையை காந்திய தேசம் சாகடித்தது என்பது வரலாற்று முரண். திலீபனின் தியாக மரணம் இன்னும் பாடப்புத்தகங்களில் வராத திலீபம் என்ற புதிய தத்துவத்தை வெளித்தள்ளியிருக்கிறது. அது பேரன்பாலும் பெரும் கோபத்தாலும் நிறைந்திருக்கிறது.

திலீபனின் இன்னும் நிறைவேற்றப்படாத

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
2. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
5. பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

என்ற ஐந்து அம்ச கோரிக்கைகளும் பழியும் பாவமும் பாரததேசத்தையும் அதன் வல்லரசுக்கனவையும் சிதைத்துக்கொண்டே இருக்கும். ஏனெனில் அணுகுண்டிற்கும் இல்லாத வல்லமை வடக்கிருந்து உயிர்துறத்தலின் ஆன்மாவிற்கு இருக்கின்றது.

அத்தோடு மனிதவரலாற்றில் வருங்காலத்தில் ஓர் புதிய சகாப்தத்தின் பிதாவாக காந்தி திகழக்கூடும் என்று அறிஞர் E.Stanley Jones அவர்கள் தன்னுடைய Mahatma Gandhi: An Interpretation என்ற நூலில் குறிப்பிட்டதுபோல அவரின் அடுத்த பரிணாமமான திலீபன் ஓர் புதிய சகாப்தத்தின் பிதாவாக திலீபம் என்ற தத்துவத்தின் ஆதி ஊற்றாக திகழ்வார் .

வடக்கிருந்து உயிர்துறக்கும் தியாகத்திற்கு எந்த மனிதனுடைய ஆன்மாவுடனும் நேரடியாக சென்று பேசக்கூடிய வல்லமை உண்டு.

திலீபனின் ஆத்மதாகமான மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திரத் தமிழீழம் மலரட்டும் என்ற கனவு நிறைவேறும்வரை


நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும். தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும். விடுதலைப் புலிகள் வாழ வேண்டும் என்றோ, ஆளவேண்டும் என்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களுக்கு நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம். மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்கவேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது. நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும். எம் எதிர்கால சந்ததி வாழ.

என்று திலீபன் தான் நேசித்த மக்களோடு தலைமுறைகள் கடந்தும் சுதந்திரத் தமிழீழம் மலரும்நாள் வரும் வரைக்கும் பேசிக்கொண்டேயிருப்பான்.

**இந்திரன் ரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழனிச்சாமி - பன்னீர்ச்செல்வம் அதிமுக அரசு நித்திய கண்டம் பூரண ஆயுள் போல தள்ளாடிக் கொண்டிருக்கிறது!



தமிழக முதல் அமைச்சர்கள், அமைச்சர்கள், சட்ட சபை உறுப்பினர்களை மையமாக வைத்து பல திரைப்படங்கள் வெளிவந்து விட்டன. பொதுவாக முதல் அமைச்சரைக் கவிழ்க்க ஏனைய அமைச்சர்கள் சூழ்ச்சி செய்வதும் உதவிக்கு அடியாட்களை அமர்த்துவதும் முதல் அமைச்சரைத் தீர்த்துக் கட்டிவிட்டு இன்னொரு அமைச்சர் ஆட்சியைப் பிடிப்பதும் திரைப்படக் கதைகளில் இடம் பெறும்.

ஆனால் இன்று தமிழ்நாட்டு அரசியலில் திரைப்படங்களில் இதுவரை பார்க்காத திகில் காட்சிகள், திடீர்த் திருப்பங்கள், கழுத்தறுப்புக்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் வேலி பாயாமல் இருப்பதற்கு உல்லாச நட்சத்திரக் ஹோட்டல்களில் அடைத்து வைப்பது போன்ற காட்சிகள் நாளும் பொழுதும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

தமிழக அரசியலில் கொள்கை, கோட்பாடு, நேர்மை எதுவுமே கிடையவே கிடையாது. அண்ணா சொன்னது போல பதவி தோளில் போடும் துண்டு கொள்கை நாம் இடையில் கட்டிக் கொள்ளும் வேட்டி என்பது போல் யாரும் நடப்பதில்லை. தமிழக அரசியல் பதவி என்ற மூன்றெழுத்தைச் சுற்றியே சுழன்று கொண்டிருக்கிறது.

சில மாதங்களாக எடப்பாடி பழனிச்சாமியும் ஓ..பன்னீச்செல்வமும் கீரியும் பாம்பும் போல இருந்தார்கள். அதிமுக வை இரண்டாக உடைத்து தனித்தனிப் பெயரில் தனித்தனி கட்சிகளாக பிரிந்து மல்லுக் கட்டினார்கள். அதிமுக இன் இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட்டது. ஒரேயொரு ஒற்றுமை. பழனிச்சாமி கட்சிக்கு அதிமுக அம்மா அணி என்று பெயர். பன்னீர்ச்செல்வத்தின் கட்சிக்க அதிமுக புரட்சித் தலைவி அணி என்று பெயர்.

இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணையப் போவதாக செய்திகள் வரும். பின்னர் இணைப்புக்கு வாய்ப்பே இல்லை என்பார்கள். இணைப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகள் யார் யாருக்கு அமைச்சர் பதவிகள் என்பதைச் சுற்றியே இருக்கும். அதில் உடன்பாடு காண்பதில்தான் இழுபறி. ஜெயலலிதா டிசெம்பர் 05, 2016 இல் இறந்த போது முதலமைச்சர் பதவியைப் பிடிக்கப் பத்துப்பேர் கனவு கண்டார்களாம்.

சில நாட்களுக்கு முன்னர் பன்னீர்ச்செல்வம் முதல்வர் பழனிச்சாமியின் ஆட்சி ஊழல் ஆட்சி என்று சாடினார். அப்படிச் சொன்ன பன்னீர்ச்செல்வம் துணை முதல்வர் மற்றும் நிதி அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டு பழனிச்சாமியின் ஆட்சியில் சேர்ந்து கொண்டார். அவரது அணியைச் சேர்ந்த இருவருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன.

மீன் எப்படி தண்ணீர் இல்லாமல் வாழ முடியாதோ அதே போல் தமிழக அரசியல்வாதிகள் பதவிகள் இல்லாமல் வாழ முடியாது. ஒரு வாட்டி சட்ட சபை உறுப்பினராக இருந்தால் போதும். அடுத்து எப்போது அமைச்சராகலாம் என்ற கனவிலேயே அவர் இருப்பார்.

அரசியல் என்பது அதிகாரத்தைக் கைப்பற்றுவது. கைப்பற்றிய பின்னர் தொடர்ந்து பதவியை தக்க வைக்க எல்லாவிதமான முயற்சிகளையும் மேற் கொள்வது.

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் நடிகர் ரஜனி தனது இரசிகர்களைச் சந்தித்தார். அப்போது அவர்கள் என்ன சொன்னார்கள்? "தலைவா! இப்படி எத்தனை நாள்கள் அதிகாரம், பதவி இல்லாமல் காலத்தைக் கழிப்பது. அரசியலில் குதிக்கிற முடிவை சீக்கிரம் எடுங்க தலைவா" என்று இரசிகர்கள் வெளிப்படையாக தங்களது ஆசையை வெளியிட்டார்கள்.

அதிமுக,திமுகபோன்ற கட்சிகளில் மாவட்டச் செயலாளர் பதவிக்கே பலத்தை போட்டி இருக்கிறது. காரணம் மாவட்டச் செயலாளராக வந்தால் பணம் கொட்டோ கொட்டோ என்று கொட்டத் தொடங்கிவிடும். மாவட்டத்தில் நடக்கிற அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் கேள்வித் தொகையில் 45 விழுக்காட்டை அமைச்சர் தொடங்கி வட்டச் செயலாளர் வரை பங்கு பிரித்துக் கொள்வார்கள். ஒரு பள்ளிக்கூடத்தை அல்லது மருத்துவமனையை கட்ட ஒரு கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஒப்பந்தகாரர் அதில் 45 இலட்சத்தை அமைச்சர் முதல் கொண்டு வட்டச் செயலாளர் வரை பிரித்துக் கொடுத்துவிட்டு மிகுதி 55 இலட்சத்தில்தான் கட்டிடத்தைக் கட்டி முடிப்பார். கட்டிடங்கள் இடிந்து விழுவதற்கு இதுதான் காரணம். இது ஒரு எழுதாத வேதம்.

மூன்றாகப் பிரிந்த அதிமுக அணிகளில் இரண்டு ஒன்றாக வந்தாலும் தினகரன் தலைமையிலான அதிமுக அணிக்கும் ஒன்றாக இணைந்த பழனிச்சாமி — பன்னீர் செல்வம் அணிக்கும் இடையில் குத்து வெட்டு தொடர்கிறது.

சசிகலா நடராசனால்



துணைச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட டி.டி.வி. தினகரன் தனக்கு 21 சட்ட சபை உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகக் கூறுகிறார். இவரது அணியைச் சார்ந்த 19 சட்ட சபை உறுப்பினர்கள் ஆளுநர் வித்தியாசாகர் ராவைக் கண்டு பழனிச்சாமிக்கு கொடுத்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக மனுக் கொடுத்தார்கள். இதனால் சட்ட சபையில் பழனிச்சாமி — பன்னீர்ச்செல்வம் அணி பெரும்பான்மையை இழந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

மொத்தம் 234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாட்டுச் சட்டசபையில் 2011 மே மாதம் நடந்த தேர்தலில் அதிமுக க்கு 134 இருக்கைகள் கிடைத்தன. ஜெயலலிதாவின் மரணத்தை அடுத்து இந்த எண்ணிக்கை 133 ஆகக் குறைந்துள்ளது. இதில் தினகரன் ஆதரவாளர்கள் 21 பேரையும் கழித்தால் அதிமுக இல் பழனிச்சாமி — பன்னீர்ச்செல்வத்தின் அணிக்கு 112 சட்டமன்ற சபை உறுப்பினர்களது ஆதரவு மட்டுமே உள்ளது. இதனால் எடப்பாடி பழனிச்சாமி அரசு சட்ட சபையில் பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்டது.

எதிர்க்கட்சியான திமுக சட்டசபையகைக் கூட்டுமாறு கேட்டும் ஆளுநர் சட்ட சபையைக் கூட்ட மறுத்து வருகிறார். அதற்கு மத்திய அரசின் தலையீடுதான் காரணம். இன்று பாரதிய ஜனதா கட்சி இந்தியாவில் உள்ள 29 மாநிலங்களில் 13 மாநிலங்களில் ஆளும் கட்சியாக உள்ளது. பீகார் மாநிலத்தில் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளத்தோடு சேர்ந்து அரசு அமைத்துள்ளது.

தமிழகத்தில் பாஜக இன் செல்வாக்கு மிகக் குறைவாக இருக்கிறது. 2014 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 7 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்ட பாஜக ஒரேயொரு தொகுதியில் மட்டும் வென்றது. தமிழக சட்டமன்றத் தேர்தலில் (மே 2016) ஜனநாயக தேசிய முன்னணி என்ற பெயரில் கூட்டணி வைத்து 234 தொகுதிகளிலும் (பாஜக — 141) தொகுதிகளில் போட்டியிட்டு அனைத்து இடங்களிலும் தோல்வி அடைந்தது. மொத்தம் 12,28,693 (2.86 விழுக்காடு) வாக்குகளே அந்தக் கூட்டணிக்குக் கிடைத்தது.


எனவே குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க நினைப்பது போல பாஜக தமிழ்நாட்டில் நிலவும் குழப்பமான அரசியலை வைத்துக் காலூன்ற முயல்கிறது. பழனிச்சாமி — பன்னீர்ச்செல்வம் அணிகளை இணைத்து வைத்தது பிரதமர் மோடி, பாஜக தலைவர் அமித் ஷா மற்றும் மத்திய அரசின் மூத்த அமைச்சர்கள் எனக் கூறப்படுகிறது. இருந்தும் தமிழ்நாட்டில் பாஜக ஆட்சியைப் பிடிப்பது அடுத்த நூற்றாண்டில் கூட சாத்தியம் இல்லை.

பாஜக இன் அடிப்படைக் கோட்பாடு இந்துத்துவம் அல்லது இந்துத்துவா. இந்தக் கோட்பாடு வினாயக் தாமோதர் சாவர்க்கரால் முன்மொழியப்பட்ட கருத்தியல் ஆகும். இந்துத்துவம் என்பது எந்தவொரு சமரசமும் இன்றி இந்துக்களின் நலன் அவர்களின் வழிப்பாட்டு,பண்பாட்டு பாரம்பரிய உரிமைகளை பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் வரையறுக்கப்பட்ட ஒரு கோட்பாடாகும். இந்து என்பதும், இந்துத்துவா என்பதும் ஒன்றல்ல. அடிப்படையில் வேறுவேறானவை. இந்து என்பது சாதாரண மத உணர்வாகும். இந்துத்துவா என்பது மத அடிப்படைவாத அரசியலாகும். இது முதலாளித்துவ அரசியல் கோட்பாடாகவே முன்வைக்கப்படுகிறது.

பெரியார், அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிறந்த நாட்டில் இந்துத்துவா கோட்பாடு வேர்விட முடியாது. 'வேத காலத்திலேயே விமானம் விட்டவர்கள் நாம்', 'புராண காலத்திலேயே பிளாஸ்டிக் அறுவை வைத்தியம் செய்தவர்கள் நாம்' என்ற பொய்களை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளாது.

எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு இருக்கிற தலையிடிகள் போதாதென்று நீட் உருவில் பெரிய தலையிடி உருவாகியுள்ளது. அனிதா (17) என்பவர் ஒரு தலித் மாணவி. அவரது பிறப்பிடம் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமம். அவரது தந்தை சுமை தூக்கும் கூலித் தொழிலாளி. அந்தக் குடும்பம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த குடும்பம். அனிதா பத்து ஆண்டுகளுக்கு முன்னரே தனது தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் மாத்திரம் அடிப்படை வசதிகள் கூட இல்லாத பின்தங்கிய நிலையில் இருந்தும் படிப்பில் திறமையுள்ள இளம் மாணவி. பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் 1200 க்கு 1176 மதிப்பெண் பெற்றார். மருத்துவராக வரவேண்டும் என்று கனாக் கண்டார். நீட் தேர்வுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடியவர். ஆனால் நீட் தேர்தலில் அவர் எடுத்த புள்ளிகள் 720 க்கு 86 புள்ளிகளே. இதனால் தனக்கு மருத்துவம் படிக்க இடம் கிடைக்காது என்ற விரக்தியில் இந்த மாதம் முதலாம் நாள் வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இதனை அடுத்து தமிழகத்தில்- நீட், பாஜக, தமிழக அரசு மூன்றுக்கும் எதிராக பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டங்களைத் தொர்ச்சியாக நடத்தி வருகிறார்கள்.

எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு இருக்கிற தலையிடிகள் போதாதென்று நீட் உருவில் பெரிய தலையிடி உருவாகியுள்ளது.

நீட் என்றால் என்ன? National Eligibility - cum -Entrance Test என்பதன் சுருக்கமே நீட் என்று அழைக்கப்படுகிறது. இந்தத் தேர்வு இந்திய மத்திய அரசால் நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வை ஓர் ஆண்டுக்குத் தள்ளிவைக்குமாறு தமிழக அரசு ஒரு அவசரச் சட்டத்தை இயற்றியது. அதற்கு மத்திய அரசின் மூன்று அமைச்சர்கள் சம்மதம் தெரிவித்தார்கள். இருந்தும் திடீரென மத்திய அரசு அதிலிருந்து பின்வாங்கிக் கொண்டது. கடந்த ஆண்டு மத்திய அரசு தமிழகத்துக்கு விதி விலக்கு அளித்திருந்தது.

தமிழகத்தில் எக்கச்சக்கமான தனியார் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. நடிகர் விஜயகாந்தின் மச்சானுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கிறது. பாமக தலைவர் மருத்துவர் இராமதாசுக்கு மருத்துவக் கல்லூரி இருக்கிறது. ஆனால் அவற்றில் சேர இலட்சக்கணக்கில் பணம் தேவைப்படுகிறது. PSG, MEENAKSHI, SRM மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடிப்பதற்கு கோடி கணக்கில் பணம் வேண்டும். கோவை PSG COLLEGE இல் அன்பளிப்பாக மட்டுமே 75 இலட்சம் வாங்குகிறார்கள். MEENAKSHI COLLEGE இல் 60 லட்சம், SRM சொல்லவே வேண்டாம். தமிழ்நாட்டில் கல்வி அதிக வருவாய் ஈட்டும் வியாபாரமாக்கப் பட்டுள்ளது.

பழனிச்சாமி — பன்னீர்ச்செல்வம் அரசு நித்திய கண்டம் பூரண ஆயுள் என்று சொல்வார்களே? அது போல தள்ளாடிக் கொண்டு இருக்கிறது. எந்த நேரமும் அரசு கவிழலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. அனித்தாவின் இறுதிச் சடங்கில் எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். அதிமுக அம்மா அணி துணைப்பொதுச்செயலாளர் டிடிவி. தினகரனும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். ஆனால் முதலமைச்சர் பழனிச்சாமி, துணை முதல்வர் பன்னீர்ச்செல்வம் இருவரும் போகவேயில்லை. பயம் காரணமாக இருக்கலாம்.

இப்போது தினகரன் நீட் தேர்வு முறையை இரத்து செய்யக் கோரி செப்தெம்பர் 09 ஆம் நாள் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த அழைப்பு விடுத்துள்ளார்.

இன்னொரு புறம் திமுகவின் செயல் தலைவர் ஸ்டாலின் முரசொலியின் பவள விழாவை பிரமாதமாகக் கொண்டாடி வருகிறார். இதில் வைகோ, திருமாவளவன், கமலகாசன், ரஜனி, இடதுசாரி கம்யூனிட் கட்சிகள் உட்பட 21 கட்சிகள் கலந்து கொண்டுள்ளன. இது அடுத்த தேர்தலுக்கு திமுக ஒரு மெகா கூட்டணியை உருவாக்க முயன்று வருவதைக் காட்டுகிறது. எப்போதெல்லாம் அதிமுக இரண்டாக பிளவுபடுகிறதோ அப்போதெல்லாம் திமுக தேர்தலில் வெற்றிபெற்று வந்திருக்கிறது. அந்த வரலாறு திரும்பக் கூடும்.

**நக்கீரன்**

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஜெனிவாவில் சர்வதேச விசாரணை

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, இலங்கைக்கு இரண்டு ஆண்டுகள் காலஅவகாசம் கொடுக்கப்பட்ட ஆறு மாதங்களிலேயே, "பூகோள நீதித்துறை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம்" என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்துகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஜெனீவாவில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமாகி, நடந்து வருகின்ற ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 36 ஆவது கூட்டத்தொடரின் தொடக்க நாளன்று உரையாற்றிய போதுதான், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

கடந்த மார்ச் மாதக் கூட்டத்தொடரில், இலங்கைக்கு இரண்டு ஆண்டு காலஅவகாசம் கொடுக்கப்பட்டு விட்டதாலும், வாய்மொழி அறிக்கையை 37 ஆவது கூட்டத்தொடரிலேயே சமர்ப்பிக்க, வேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாலும், இப்போது நடக்கும் அமர்வுகளில் இலங்கை விவகாரம் முக்கியத்துவம் பெறாது என்ற கணிப்பே காணப்பட்டது.

ஐ.நா நிபுணர்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்று கொடுப்பதற்கான உபகுழுக் கூட்டங்களை நடத்துகின்ற நடவடிக்கைகள் மாத்திரம் இம்முறை ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததால், இந்தக் கூட்டத்தொடரை அரசாங்கம் அலட்சியமாகவே கருதியிருந்தது.

ஆட்சி மாற்றத்துக்குப் பிந்திய, இலங்கையின் செயற்பாடுகளைப் பல்வேறு நாடுகள், பாராட்டி வந்த சூழலில், இம்முறை ஜெனீவாவில் அழுத்தங்கள், குற்றச்சாட்டுகள் ஏதும் இருக்காது என்றே அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது.

இரண்டு ஆண்டு கால அவகாசம் பெற்று விட்டாயிற்று; ஆறு மாதங்கள் தான் கடந்திருக்கின்றன; இன்னும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கின்றன என்ற நினைப்பும் கூட அரசாங்கத்துக்கு இருந்தது. இவை எல்லாவற்றுக்கும், ஆப்பு வைக்கும் வகையில், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் தொடக்கவுரை அமைந்திருக்கிறது.

2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த போரில், போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் நடந்திருக்கின்றன. இவற்றுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்; குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்; அதற்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று முதலில் வலியுறுத்தியது ஐ.நா மனித உரிமை ஆணையாளர்தான்.

2009ஆம் ஆண்டிலேயே, அப்போது ஐ.நா மனித உரிமை ஆணையாளராக இருந்த நவநீதம்பிள்ளை அம்மையார்தான், இந்தக் கோரிக்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார். எனினும், இன்று வரையில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான சூழல் உருவாகவில்லை. ஆனாலும், 2012ஆம் ஆண்டு தொடக்கம், ஜெனீவாவில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு, கண்காணிப்புப் பட்டியலுக்குள் கொண்டு வரப்படும் நிலை ஏற்பட்டது.

2012ஆம் ஆண்டு தொடக்கம், இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டு வரும் தீர்மானங்கள், போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதையும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்ட போதிலும், பொறுப்புக்கூறல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், ஒருபோதும், ஜெனீவா தீர்மானங்களுடன் இணங்கவுமில்லை; அவற்றை நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுக்கவுமில்லை.

எனவே, ஜெனீவா வாக்குறுதிகளை மஹிந்த அரசாங்கம் நிறைவேற்றியிருக்கும் என்று ஒருபோதும் நம்ப முடியாது.

2015இல் பதவிக்கு வந்த தற்போதைய அரசாங்கமும் கூட, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் அதே கொள்கையைத்தான் கடைப்பிடிக்கிறது. ஆனால், சற்று வேறுபட்ட முறையில் அதை அணுகுகிறது.

ஜெனீவாத் தீர்மானங்களுக்கு இணங்குவதாக வாக்குறுதிகளைக் கொடுப்பதுபோல் கொடுத்து, அவற்றை நிறைவேற்றாமல் இழுத்தடிப்பது, அரசாங் கங்கத்தின் பிரதான நோக்கம் ஆகும். பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை உருவாக்காமல் நழுவுவதை, இருவேறுபட்ட அணுகுமுறைகளில் ஆட்சியாளர்கள் கையாண்டு வருகின்றனர்.

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம், வெளிநாட்டு மற்றும் கொமன்வெல்த் நீதிபதிகள், சட்டத்தரணிகள், வழக்குத் தொடுநர்களின் பங்களிப்புடன், நம்பகமானதும் நடுநிலையானதுமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை, அமைப்பதற்கு அரசாங்கம் இணங்கியிருந்தது.

இது கலப்பு விசாரணை ஒன்றையே குறிப்பிடுகிறது. 2015ஆம் ஆண்டு, இந்தப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டபோதே அரசாங்கம் இதை அறிந்தும் இருந்தது. அதே விடயங்களை உள்ளடக்கியதாக, கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கும் அரசாங்கம் இணங்கியிருந்தது.

**ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அவசரத்துக்கு எதையும் செய்ய முடியாது, பொறுமையாகவே கடப்பாடுகளை நிறைவேற்றுவோம்**

ஆனாலும், "கலப்பு விசாரணை நடக்காது; அதற்கு அரசமைப்பில் இடமில்லை; இதை சர்வதேச சமூகத்துக்குக் கூறிவிட்டோம்" என்று அரசாங்கம் இழுத்தடிக்கிறது. அதுபோலவே, ஜெனீவாவில் வழங்கப் பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அல்லது மெதுவாக நிறைவேற்றி வருகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், காணிகளை மீள ஒப்படைத்தல், காணாமல் போனோர் பணியகத்தைச் செயற்படுத்தல், அரசியல் கைதிகளின் மீதான சட்ட நடவடிக்கை உள்ளிட்ட நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை விரைவாகச் செயற்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளை, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திவரும்போராட்டங்கள், அவர்களின் ஏமாற்றத்தை வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறியிருந்தார்.

இதன் மூலம், அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இழுத்தடிக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இரண்டு ஆண்டு காலஅவகாசத்தின், கால்பகுதியே முடிவடைந்த நிலையில், ஐ.நா மனித உரிமை ஆணையம் எதையும் கண்டுகொள்ளாது என்ற கருத்தே அரசாங்கத்திடம் காணப்பட்டது.

"இரண்டு ஆண்டுகள் காலஅவகாசம் தரப்பட்டிருக்கிறது; தேவைப்பட்டால் மேலதிக காலஅவகாசத்தையும் கோருவோம்" என்று, அண்மையில் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற, திலக் மாரப்பன கூறியிருந்தார்.

"போரில் அகப்பட்ட நாடுகள் பலவற்றில், இலங்கையை விடத் தாமதமாகத்தான் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன" என்ற வாதத்தையும் கூட அவர் முன்வைத்திருந்தார்.

இவையெல்லாம், சர்வதேச சமூகத்துக்கு கடுப்பை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தன.

ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக, முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்தவரும் தற்போது அரசாங்கத்தில் இருக்கின்ற ஓர் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, குற்றச்சாட்டுகளை முன்வைத்து.

அதற்கு ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தயார் என்று அறிவித்த போதும், அரசாங்கம் அதை அணுகிய விதம் கூட, சர்வதேச சமூகத்துக்கு அதிருப்திகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஜெனரல் ஜயசூரிய எந்தக் குற்றத்தையும் இழைக்கவில்லை என்றும், அவரை அரசாங்கம் பாதுகாக்கும் என்றும், திரும்பத் திரும்ப வாக்குறுதிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஓர் அமைச்சரிடம், மிகமுக்கியமான செல்வாக்கான ஒருவரிடம் உள்ள ஆதாரங்களைக் கூட, செவிமடுக்கத் தயாரில்லாத நிலையில்தான் அரசாங்கம் இருக்கிறது.

இவ்வாறான நிலையில், போர்க்குற்றங்கள் குறித்து, சாதாரண மக்களின் சாட்சியங்கள் எவ்வாறு எடுபடும், அவர்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும் என்ற நியாயமான கேள்வி பிறக்கிறது.

இதுதான், சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்ய, நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்காதமையானது, உலகளாவிய நீதி நடவடிக்கைகளுக்கு இன்னும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் குறிப்பிடக் காரணமாயிற்று.

இதன் அர்த்தம், சர்வதேச விசாரணைதான். அதைச் சற்று மென்மையாக் கூறியிருக்கிறார். பொறுப்புக்கூறலுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காத நிலையில், சர்வதேச நடவடிக்கைகள் அவசியமாகிறது என்ற கருத்தை அவர் வலியுறுத்தியிருக்கிறார்.



இது அரசாங்கத்தை மிரள வைத்திருக்கிறது. அதனால்தான், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியான அடுத்த நாளே, காணாமல் போனோர் பணியக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஆணையை ஜனாதிபதி வழங்கியிருக்கிறார்.

காணாமல் போனோர் பணியக சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும், இழுத்தடிக்கப்பட்டு வந்தது. அதை நடைமுறைப்படுத்தவும் ஜெனீவா அழுத்தம் தேவைப்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இருந்தாலும், "ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அவசரத்துக்கு எதையும் செய்ய முடியாது, பொறுமையாகவே கடப்பாடுகளை நிறைவேற்றுவோம்" என்று அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கிறது. எனினும், சர்வதேச சமூகத்துக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் திருப்தியளிக்கின்றன என்று கூற முடியாது.

சர்வதேச விசாரணையை மனதில் கொண்டு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள கருத்து, அவரது நிலைப்பாடே தவிர, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாடு அல்ல; ஐ.நா மனித உரிமைகள் பேரவை, இந்த முடிவை எடுத்தால்தான் அது அரசுக்கு நேரடி அழுத்தங்களைக் கொடுக்கும்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மீண்டும் வலியுறுத்தத் தொடங்கியுள்ள சர்வதேச விசாரணை என்ற விவகாரம், இலங்கை அரசுக்கு உடனடி ஆபத்தை ஏற்படுத்தாது. என்றாலும், இரண்டு ஆண்டு காலஅவகாசத்தின் முடிவிலும், இதேநிலை தொடருமானால், அத்தகையதொரு முடிவை சர்வதேச சமூகம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாது என்று மட்டும் உறுதியாக்க கூற முடியாது.

ஏனென்றால், மாறிவரும் உலகில் எதுவும் நிகழலாம்; நிகழாமலும் போகலாம்.

**கே. சஞ்சயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Re/on Homes Realty Inc திறப்பு விழா






**Re/on Homes Realty** நிறுவன அங்குராப்பன திறப்புவிழா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் திறந்துவைத்தார் . மார்க்கம் நகரின் மத்தியில் அமைந்துள்ள புதிய நிறுவனத்தை பல வர்த்தக பிரமுகர்கள் வாழ்த்திச்சென்றார்கள்





# தமிழ் தெருவிழா










கனடிய பிரதமரின் வருகையுடன் நடைபெற்ற தமிழ் தெருவிழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SELLING A HOME?

GET A FREE HOME EVALUATION DONE.



**KAMAL** AMIRTHALINGAM*

**JAY** PARAMANATHAN*

**ELANGO** EESWARAPATHAM*

TEAM | JAY

REAL ESTATE PROFESSIONALS

ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

www.teamjay.ca

DIRECT: 416.700.2222 | OFFICE: 416.282.3333 info@teamjay.ca

INDEPENDENTLY OWNED & OPERATED | SALES REPRESENTATIVES*

#BuyandSellWithTeamJay / #TeamJay

ROYAL LEPAGE 100 YEARS SINCE 1913

THE HOME HUB

CondoFinder.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னமரவடி நிதிசேர் நடை பவனி








கனடியத் தமிழர் பேரவையினரால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் வருடாந்த நிதிசேர் நடை பவனி செப்டெம்பர் 10 ஆம் திகதி ஸ்காபரோவின் தொம்சன் பூங்காவில் நடைபெற்றது இந்த நிதிசேர் நடையானது யுத்தத்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளான தென்னமரவடி கிராமத்து மக்களின் மறுவாழ்வுக்கு உதவும் நோக்கோடும் அவர்களுக்கு பொருளாதார அடிப்படையில் வலுத்தர வைக்கும் இலக்கோடும் நடத்தப்பட்டது. படத்தில் ஏற்பாட்டாளர் சார்பாக திரு பிரகால் திரு ஆரம்பித்து வைப்பதையும் இலங்கைநாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாணசபை கவுன்சிலரான இம்மானுவேல் ஆர்னோல்ட் மற்றும் வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் பா. சத்தியலிங்கம் அவர்களையும் படத்தில் காணலாம்.




# மிருதங்க அரங்கேற்றம்









ஸ்ரீதரன் துரைராஜாவின் மகன் அருண் துரைராஜா அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் 27 Aug 2017 அன்று Amenian Youth Centre இல் நடைபேற்றது. சிறப்புவிருந்தினர்களாக Shri Thiruvaarur Bakthavathsalam மற்றும் Shri Gowrishankar ஆகியவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பிக் பொஸ் சமூகம்

1999 ஆம் ஆண்டு நெர்லாந்தைச் சேர்ந்த வெரொனிக்கா தொலைக்காட்சியில், டச் மொழியில் முதன் முதலாக ஒளிபரப்பு செய்யப்பட்ட 'பிக் பிரதர்' நிகழ்ச்சி அன்றைய காலத்திலேயே பல வாத பிரதிவாதங்களுக்கு உள்ளாக்கப்பட்டது. தனி மனிதனின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளதாகவும், பார்வையாளர்களுக்கு விசமத்தனமான சிந்தனைகளை இவை தூண்டுவதாகஉள்ளதாகவும்கருத்துக்கள் அப்போதே வந்தன. எனினும் இன்று இந்தியாவரை இதுபோல நிகழ்ச்சிகள் உள்வாங்கப்பட்டு தமிழிலும் நடைபெற்றுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொருவருமே தம்மைச்சுற்றி ஈகோ என்ற காற்று பலூன்களை கட்டி வைத்துள்ளனர், எவர் அந்த காற்று பலூனுக்கு அருகில் குண்டூசியுடன் நிற்கிறார்களோ அவர்கள் மேல் இவர்களுக்கு கோவம் வந்துவிடுகின்றது என்பதே யதார்த்தம்.

இன்று பிரபலமாக பேசப்படும் பிக் பொஸ் நிகழ்ச்சியிலும் பாருங்கள்இன்றைய காலத்தில் கைகளில் ஒரு ஸ்மார்ட் போன் இல்லாமல் இருப்பது என்பதே வழமைக்கு விரோதமான ஒன்றாகவே கருதப்படுகின்றது. இந்த நிலையில், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்கள், வெளி உலகத்தொடர்புகள் எதுவும் இல்லாத நிலையில், அதேவேளை இணையமோ அல்லது, தொலைபேசியோ, ஏன் புத்தகம் பத்திரிகை கூட படித்துவிட முடியாத நிலையில் வைக்கப்படுகின்றனர். இந்த புறக்காரணிகள் போதும் அவர்களின் மனங்களை உளவியலாக தாக்கம் ஏற்பட வைப்பதற்கு.

தமிழிலும் இந்த நிகழ்ச்சியை கலைஞர் கமல் ஹாசன் அவர்கள் தொகுத்து வழங்கிவருகின்றார். இங்கும் பல வாத பிரதிவாதங்கள் நடக்காமல் இல்லை, அதற்கு பதிலளிப்பதுபோல் 'இந்த நிகழ்ச்சி ஒரு போதிமரம் போன்றது என வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் ஆடுகளாக இதைப்பார்த்தால் குளைகளும், புத்தனாக இதைப்பார்த்தால் ஞானமும் தெரியும்' என கமல் தெரிவித்திருந்தார்.

சரி.. புத்தனாக இந்த நிகழ்ச்சியால் என்ன ஞானங்கள் கிடைக்கும் என்பதே இந்தப்பகுதி!

இங்கே ஒரு வீட்டில் தங்கவைக்கப் பட்டிருக்கும் பல பாத்திரங்களை அவர்களுக்கு தெரியாமலேயே நீங்கள் வெளியில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றீர்கள். அவர்கள் சிலரின் நடவடிக்கைகள் உங்களுக்கு நல்லதாகவும், சிலரின் நடவடிக்கைகள் அருவருக்கத்தக்க வகையிலும் இருப்பதாக உள்ளது. பல விடயங்களையும் வெளியில் இருந்து பார்ப்பதனால் அங்கே நடப்பவற்றின் உண்மையான நன்மை தீமைகளை பெரும்பாலானவர்களால் உணரக் கூடியதாக உள்ளது. அதேவேளை இவர்களும் அதன் உள்ளே இருந்தார்களானால் இவர்களாலும் எவர் சரி எவர் பிழை என்பதை காணமுடியாது போய் தமக்கு சாதகமானவர்கள் செய்பவையே சரி என்ற மனநிலையிலேயே இருப்பார்கள். இங்கே வெளியில் இருந்து பார்க்கும் மனநிலையே உண்மைகளை அறிய உதவுகின்றது.

நாம் ஒவ்வொருவருமே மற்றவர்களின் தவறுகளுக்கு சிறந்த நீதிபதிகளாகவும், நமது தவறுகளை நியாமாக்க மிகச்சிறப்பான சட்டத்தரணிகளாகவும் உள்ளோம். நமக்கான பிரச்சினைகள், சம்பவங்களை நாமே வெளியில் இருந்து மூன்றாவது நபரின் கண்ணோட்டத்தில் நமது செயற்பாட்டை அவதானிப்போமானால் பல பிரச்சினைகளும் மனப்பாரங்களும் நொடிப்பொழுதில் தீர்க்கப்படக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. எனவே நம்மையே வெளியில் இருந்து பார்க்கும் மனோநிலையினை நாம் வளர்த்துக்கொள்வது அவசியமாகின்றது.

அடுத்த விடயம் ஒருவரைப்போல அத்த குண இயல்புடன் மற்றவர் இருப்பார் என்பது கட்டாயம் இல்லை. இருவரின் கருத்துக்களும் ஒத்ததாக இருக்கவேண்டும் என்பதும் கட்டாயமானதல்ல.

உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பார்வை இருக்கும். அதனால்தான் ஓவியப்பாடம் நடத்தப்படும்போது அல்லது ஓவிய பயிற்சிகளின்போது ஒரு பொருளை பார்த்து வரைய சொல்லும்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோணங்களை கொடுக்கின்றனர்.

அதேபோல ஒவ்வொருவரின் மன ஓட்டங்களும் ஒவ்வொருவிதமாக இருக்கும் அவ்வளவுதான். உதாரணத்திற்கு உலகில் அனைத்துமே ஒரே நிறமான வெள்ளையாக இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் உலகம் நன்றாகவா இருக்கும்?. நிறைய வர்ணங்கள் சேரும்போதுதானே அனைத்தும் நன்றாக இருக்கும்.

அதேபோலத்தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிறங்கள் உண்டு. ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள், ஒவ்வொரு நிறத்தையும் இரசிப்பதுபோல நாம் ஒவ்வொரு குணங்களையும் இரசிக்கதொடங்கினால் எதுவும் ஆனந்தமே.இவர் இப்படி, இவர் இதுதான், இவர் சரிவரமாட்டார் இவர், துரோகி, இவர் எதிரி, என்ற விம்பங்களை எம் மனம்தான் போட்டுக்கொள்கிறது. அந்த விம்பங்களை பிடுங்கி எறிந்துவிட்டு, எல்லோரும், எல்லாமும், என இருந்து, அத்தனையையும் இரசிக்கப்பழகினால் யாவருக்கும் சந்தோசமே அல்லவா?

பிக் பொஸ் நிகழ்ச்சியில்கூட ஒருவரின் நடத்தையினைப்பார்த்து பார்வையாளர்கள் பலர் உச்சக்கட்ட கோபத்திற்கும், எரிச்சலுக்கும் உள்ளாகப்படுகின்றனர். உண்மையில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அந்த நபரின் நடத்தையைப்போல் தான் நடந்திருப்பதையும், இனி வருங்காலங்களில் அவ்வாறான நடத்தையில் தான் ஈடுபாடது இருக்கவேண்டும் என்பதையும் அவர்கள் அதே கோபங்களுடன் ஏற்றுக்கொண்டார்களானால் சிறப்பானதுதான்.

நாம் எந்த லென்ஸின் ஊடாக உலகத்தைப்பார்க்கின்றோமோ, அந்த லென்ஸையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நாம் பார்க்கும் உலகத்தை நாம் எப்படி அர்த்தப்படுத்திக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து அந்த லென்ஸ் தன் வடிவத்தை மாற்றிக்கொள்கின்றது.

எங்களை திறமையானவர்களாக மாற்றிக்கொள்ள முதலில் நாம் எம்மை மாற்றிக்கொள்ளவேண்டும், அதன்பின் முக்கியமாக எமது கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ளவேண்டிய தேவையும் உள்ளது.

ஆரம்பத்தில் நல்ல நணபர்களாக இந்த நிகழ்ச்சியில் இருந்தவர்களையும், பின்னர் ஒருவரை ஒருவர் குறை கூறுவதையும், பிரச்சினை படுவதையும் அறவே ஒருவரை மற்றொருவர் வெறுப்பதையும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நால்வர், அல்லது ஐவர் சேர்ந்து தமக்கான சௌகரியமான வட்டங்களை அமைத்துக்கொண்டு தமக்கு ஒவ்வாதவர்களை வெளியேற்ற போடும் திட்டங்களையும் கண்டிருப்பீர்கள். இந்த பிரச்சினைகள் அந்த பிக் பொஸ் வீட்டில் மட்டுமல்ல நாம் வாழும் சூழலில் பல முக்கியமான இடங்களிலும் இல்லாமல் இல்லை.

நட்பு கொண்டவர்கள் நாணையத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவர்கள். இருவருக்கும் நட்பின் அனுபவிக்கும் உரிமை சமனானதே. அதைவிட்டுவிட்டு ஒருவர்மேல் ஆதிக்கம் செலுத்த தலைப்படும்போது தான் நட்பு நரகமாகிப்போகின்றது.

சரியோதவறோஎம்நண்பர்களையும் ஒரு முடிவு எடுக்கும்போது சேர்ந்து அலோசிக்கவேண்டும். பிழையான கருத்துக்களை சுட்டிக்காட்டுவதில் எந்த பலனும் இல்லை, அதை பக்குவமாக சொல்லி திருத்தி எடுப்பதில்த்தான் நட்பின் திறமையே இருக்கின்றது.

நண்பர்கள்வாக்குவாதப்படுப்போது ஒன்றை மட்டும் மனதில் கொள்ளுங்கள், 'இது எனக்கும் உனக்குமான முரண்பாடு இல்லை! நீ இப்போது முன்வைக்கும் கருத்திற்கும், அல்லது இப்போதுள்ள உன் எண்ணத்திற்கும் எனது தற்போதைய கருத்துக்கும், என் தற்போதைய எண்ணத்திற்கும் இடையிலான முரண்பாடுதான் என்பதை.

தினம் மாறும் கருத்துக்களால் மகத்தான மாறாத நட்பை இழக்க வேண்டுமா? ஒரு கணம் யோசியுங்கள். மனிதன் உணர்வுகளின் சங்கமம். எப்போதும் அவன் ஒரேபோல சிரித்துக்கொண்டிருப்பவனும் இல்லை, எப்போதும் துயரத்தால் அழுதுகொண்டிருப்பவனும் இல்லை. சமுகத்தாங்கங்கள், உளவியல் மாற்றங்கள் என்று எண்ணில்லாத அலையடிப்புக்களை தாங்கவேண்டிய உங்கள் நண்பனின் உணர்வுகளை புரிந்துகொள்ளுங்கள்.

ஓர் சிறிய மனக்கசப்பு என்பதற்காக பல நாட்கள் பழகிய இனிமையான பொழுதுகளை, அவரிடம் கண்டு இரசித்த முகபாவங்களை, அற்புதமான பகிரல்களை, சில மகிழ்ச்சி பகிர்வுகளை, ஒரேயடியாக மறந்துவிடமுடிகிறதா? நட்பில் உண்மையான சுகம் விட்டுக்கொடுத்தல்தானே! இப்படியாக எத்தனையோ எத்தனையோ சின்னச்சின்ன விடயங்கள் எம்மிடையே மிகப்பெரிய முரண்பாட்டு மதில்களை எழுப்பிவிடுகின்றது. அட உலகமே ஒருமித்து நின்று பிரித்துக்கட்டிய பேர்லின் சுவரே தகர்ந்துவிட்டது. உங்கள் சின்னச்சின்ன நட்பூடல்கள் தகர்ந்துவிடாதா என்ன?

இப்போது ஒரு பெரிய உண்மையை புரிந்துகொண்டீர்களா? ஒரு வீட்டிற்குள் மட்டும் நடத்தப்படும் நிகழ்ச்சி மட்டுமல்ல பிக் பொஸ்.. உண்மையிலேயே நீங்கள் பூமியில் வாழ்தல் கூட ஒரு பிக் பொஸ் நிகழ்வுதான்.. அத்தனையையும் நீங்களும் வெளியில் இருந்து பார்த்தல் என்ற மனநிலைக்கு சென்றீர்களேயானால் வாழ்தலில் உண்மையான பிக் பொஸ் நீங்கள் தான்!

**க.ஜெனார்த்தனன்**
(பயிற்சியாளர்,
BBA, MPM, NDTHRD, IFMA)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணங்கள் கேட்கும் மடிப்பிச்சை



'சமூகத்திற்கு பலம் சேர்க்க வேண்டிய ஆறு மாணவர்களின் இழப்பும் ஜீரணிக்க முடியாததாகும். இனியும் இவ்வாறான பேரவலம் தொடரக்கூடாது' என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கசர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மண்டைதீவுக் கடலில் நேற்று திங்கட்கிழமை நிகழ்ந்த படகு விபத்தில் பலியான மாணவர்களுக்கு அஞ்சலி தெரிவித்து வெளியிட்டுள்ள ஊடகக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ள தாவது, "தற்சமயம் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் ஆறு மாணவர்கள் நேற்று (திங்கட்கிழமை) மாலை மண்டைதீவு கடலில் மூழ்கி பரிதாபமாக மரணித்த பேரவலச் செய்தி அதிர்ச்சியையும் மிகுந்த மன வேதனை யையும் அளிக்கின்றது. அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள், புகையிரதக் கடவை விபத்துககளைத் தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டுக கொண்டிருக்கும் வேளையில், பாதுகாப்பற்ற படகுப் பயணத்தின் மூலம், ஆறு மாணவர்களை நாம் இழந்தது என்பது, மேலும் வேதனையைத் தருகின்ற சம்பவமாகும்.

எமது சமுதாயம் பொதுவாக மக்கள் தொகையிலும் குறிப்பாக ஆண்களின் தொகையிலும் வீழ்ச்சி அடைந்து கொண்டுவரும் வேளையில் கல்வித் தரத்தை மேம்படுத்தி எமது பலத்தை அதிகரிக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். அதனை நோக்கியே எமது திட்டங்களும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேளையில் கல்வியில் உயர்தரத்தில் உள்ள ஒரு சமூகத்திற்குப் பலம் சேர்க்க வேண்டிய இந்த ஆறு மாணவர்களின் இழப்பும் ஜீரணிக்க முடியாததாகும்.

இவ்விழப்புக்கள் அவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கு மட்டுமின்றி தமிழ் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வரும் அலட்சிய மனோபாவமும் இவ்வாறான இழப்புக்களுக்கு ஒரு காரணமாகும். எதிர் காலத்தில் இத்தகைய இழப்புக்கள் எதுவும் நடைபெறாவண்ணம் பெற்றோர், பொறுப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும் வழிகாட்டி வளர்க்கவேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை இவ்வேளையில் விடுப்பதுடன் பாதுகாப்பற்ற இத்தகைய கேளிக்கை நிகழ்வுகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என்றும் இளைஞர்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தமது பிள்ளைகளின் இன்னுயிர்களை இழந்து வாடும் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும், நல்ல மாணவர்களை, நண்பர்களை இழந்து வாடும் பாடசாலைச் சமூகத்திற்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவைபோன்ற துயரமான சம்பவங்கள் இனிமேலும் நிகழாதிருக்க விழிப்புறுக என மாணவர்கள் இளைஞர்களை மீண்டும் வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

ஆறு இளைஞர்களினதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்." என்றுள்ளார்.

பயமறியாப் பருவத்தின் புதல்வர்கள், அத்துடன் அவர்களை போதையும் அணைத்து கொண்டுள்ளது, கூடவே நடைபெற்றுவரும் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய சுதந்திரமுமாய் இவர்களை இனம் தெரியாத இன்பம் ஆட்கொண்டிருக்க வேண்டும். பல தளங்களில் இச் செய்தி பல கேள்விகளை எழுப்பி வருகிறது. இவர்களின் இறப்பு யாழ்ப்பாணத்து பெற்றோருக்கு பல்வேறுபட்ட அழுத்தங்களை உருவாக்கி விட்டிருக்கிறது.

யுத்தம் முடிந்து 8 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் இலங்கைத் தமிழர்களின் புறவாழ்க்கை வழமைக்கு திரும்பியிருந்தாலும், அவர்களின் அகச்சூழல்களில் இன்னும் ஆறுதல் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களின் மனோவியல் காயங்களுக்கு இன்னும் முழுமையான உதவிகள் கிடைக்கவில்லை என்பதே சரியான வாதமாகவிருக்கும். தனித்தமிழீழ போராட்டத்துக்கு முன்பான வாழ்வியலில் ஓர் ஒழுங்கு முறை கடைப்பிடிக்கப்பட்டது. குடும்பத்தினரோடு சேர்ந்ததும், அயலுடன் கூடியதும், சூழலுடன் ஒன்றியதுமான வாழ்க்கை ஒன்றில் நாம் தெளிந்த நீரோடைபோல் பயணித்தோம். அந்த வாழ்வியல் பாடசாலையின் கல்வி போல் வாழும் கல்வியைக் கற்றுத் தந்தது. அந்த கற்கை முறைதான் எங்களை வெளிநாட்டு வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொண்டு நேர்த்தியாக வாழ வழிகாட்டுகிறது.

யுத்த காலத்தில் இருந்தே இளையவர்கள் எங்கள் அடிப்படை வாழ்வியலில் இருந்து விலகி தம்மை ஓர் மாறுபட்ட மனிதர்களாக காட்டிக் கொள்ள ஆரம்பித்தனர். இதனால் பெற்றோர்கள் தமது கடமைப்பாட்டை ச் செய்ய முடியாமல் போயினர், பாடசாலைகள் மாணவர்களின் பக்தியை இழந்து போயின, அயலும் சுற்றமும் கையாலாதவர்கள் ஆயினர், இதனை இளையவர்கள் தமக்குக் கிடைத்த முதல் விடுதலையாகப் பார்த்தனர். ஆனால் பாதிப்போ மாணவர்களை நோக்கியதாகவே நகர்கிறது. படகுச் சம்பவம் அனைத்துத் தமிழர்களுக்கும் ஓர் அபாயக் குரலை எழுப்பியுள்ளது.

முதலில் புலத்தில் இருக்கும் அனைவருக்கும் அவர்களின் தேவைக்கேற்ப தன் நம்பிக்கை ஊட்டும் மகாநாடுகள், சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் அத்துறைசார் வல்லுனர்களால் போதிக்கப்பட வேண்டும். அதற்குரிய வாய்ப்பு வளம் அதிகளவில் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் உள்ளது. கனடாவில் இருந்து சென்ற புதியவெளிச்சம் 30பாடசாலைகளுக்கான நிகழ்வுகளை நடாத்தியது அவர்கள் மனதில் மாற்றத்தை உண்டுபண்ணி விடாது. அது மாற்றத்துக்கான பிள்ளையார் சுழி மட்டுமே. பிறரும் இவ்வாறான மனவெளிச்சிக்கான கூட்டங்களை தொடர்ச்சியாக நடாத்த வேண்டும். இல்லையேல் புதிய வெளிச்சம் போன்றவர்களுக்கு ஆதரவினை வளங்க வேண்டும்.


தொழிற்கல்வி வடமாகாணத்தில் காணாமல் போய்விட்டது. இன்றைய திகதியின்படி கிட்டத்தட்ட 4000 பட்டதாரி மாணவர்கள் வேலையற்றவர்களாக வடமாகாணத்தில் இருக்கிறார்கள். குறிப்பாக குறிக்கப்பட்ட பாடத்திட்டத்துக்கு அமைய பட்டதாரியாகியமையே இந்த வேலை இல்லாமைக்கு காரணமாகும். இலங்கைகு வெளியே அதிகம் செல்வப் பேற்றுடன் இருப்பவர்கள் தொழில்சார் தமிழர்களே. நீங்கள் முன்வந்து தொழிற்கல்விக்கான உருவாக்கங்களை எங்கள் பிரதேசங்களில் ஆரம்பித்தால் வேலையில்லாமல் முடங்கிக்கிடக்கும் இளைஞர்களுக்கு சாதகமாக இருக்கும்.

விளையாட்டு என்பதும் வர்தகமயப்பட்டு விட்டது. ஆனால் பெரும்பாலான நமது மாணவர்களுக்கு உயர் தரக்கல்வியுடன் விளையாட்டும் விடைபெற்று விடுகிறது. ஒவ்வேரு விளையாட்டுத் துறையிலும் கழகங்கள் அமைக்கப்பட்டு வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும். புலம் பெயர் தேசங்களில் பலர் விளையாட்டுக் கழகங்களின் உரிமையாளர்களாக இருக்கிறார்கள், வீரர்கள் ஆக இருக்கிறார்கள். நீங்கள் முன் வந்தால் புதிய வீரர்களும் விளையாட்டுச் சார்ந்த தொழிற்துறையும் சிறப்பாக உருவாகும்.

காலத்தோடு சேர்ந்த கல்வி, புலம் பெயர் தேசத்தில் ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை பலர் ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், கற்கை முறையை உருவகிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் கூட்டுச்சேர்ந்து தமிழ் மாகாணங்களின் கல்வி அமைச்சுகளுடன் இணைந்து மேற்கத்தேய கற்றல் முறைமைகளை அறிமுகம் செய்வதன் மூலம் சர்வதேச தரத்தில் நம்ம கிராமத்து மாணவனும் உருவாக்கப்படுவான். இப்படியானதொரு கற்கை முறை இருந்திருந்தால் படகு விபத்தில் மாணவர்கள் உயிரிளந்திருக்க மாட்டார்கள். ஆரம்பக் கல்வியிலேயே அவர்களுக்கு நீச்சல் ஓர் பாடமாக இருந்திருக்கும்.

வருடா வருடம் வர்த்தக் பயணம், மருத்துவப் பயணம், நிவாரணப் பயணம், அரசியல் பயணம், அறிவியற் பயணம் என ஏராள பயணம் நடாத்தும் மூத்தவர்களே!. நின்று நிதானியுங்கள் எத்தனை வாரப்பத்திரிகை வாயிலாகவும் வானொலிகளின் மூலமாகவும் கனவுகள் தந்திருப்பீர்கள். நீங்கள் தான் சமுதாயச் சிற்பிகள் என அங்கீகரிக்கப்பட்டு நூற்றுக் கணக்கான புலம் பெயர் விழாக்களின் மாலைகளுக்கும் பொன்னாடைகளுக்கும் சொந்தக்காரர்கள் ஆகியிருப்பீர்கள். இனி வரும் காலங்களில் நீங்கள் ஒவ்வொருவரும் எங்களின் பிரம்மாக்களாகவும் உங்களின் பயணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு படைத்தலாகவும் உருப்பெற்றால் நீங்களும் பெரியார்களே!.

இல்லையேல், இன்னும் ஓராயிரம் ஈழத்து தமிழர்களை நோக்கி பாழடைந்த படகுகளும், கேரளக்கஞ் சாக்களும், உள்ளூர்க் கசிப்புகளும், வெளிநாட்டு மதுக்களும் படை எடுக்கும் என்பதில் ஐயமில்லை. முடிந்தால் அச்சம்பவங்களை சிங்களவனின் சதி என ஈழ ஊடகங்கள் ஊதிக்கொண்டாடும்.



சிவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பணி செய் அதற்கு பெயர் தவம்.**
**தன்னலமற்று மக்களுக்கு உழைக்க வேண்டும்.**
**மக்களுக்கு உழைப்பதை தாழ்வாக எண்ண வேண்டாம்.**
**அது தெய்வத்துக்குச் செய்யும் தொண்டு போன்றது"**

— சுவாமி விவேகானந்தர்

குழந்தைகளை கடவுளின் பிள்ளைகள் என அழைக்கின்றார்கள். குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பார்கள். ஆனால், அப்பேற்பட்ட பல குழந்தைகளும் சிறுவர்களும் தாயகத்தில் தற்போதும் அடுத்த வேளை உணவுக்கே தத்தளிக்கின்றார்கள்.

நாளாந்த பத்திரிகைச் செய்திகளில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செய்திகள் இல்லாத நாட்களே இல்லை எனக் கூறலாம். வடக்கு, கிழக்கில் நடைபெற்ற கொடிய போர் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக, கணிசமான சிறுவர்கள் பெற்றோரை இழந்து வாழ்கின்றனர்.

இவ்வாறாகப் பெற்றோரைப் பிரிந்த அல்லது இழந்த கணிசமான சிறுவர்கள் தெருக்களில் துணையின்றி அலைந்து திரிகிறார்கள். இவர்களைச் சிறப்பு தேவை உடையவர்களாக இனம் கண்டு, ஆற்றுப்படுத்த வேண்டும்; தேற்ற வேண்டும். தவறின் எதிர்காலங்களில் மிக மோசமான உளப்பாதிப்புக்கு உள்ளாவர்.

சில பெற்றோர்கள் மாற்று வலுவுள்ளோர்களாக உள்ளனர். சில பிள்ளைகளது அம்மா போரில் மடிந்து போக, அப்பா வேறு பெண்ணை மறுமணம் புரிந்து விட்டார். இவ்வாறு, பல்வேறு காரணங்களால் சிறுவர்களின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

கொடிய போரில் அப்பா, அம்மா என இருவரையும் பறிகொடுத்த பல சிறுவர்கள், தாத்தா, பாட்டியின் பாதுகாப்பில் அரவணைப்பில் வாழ வேண்டிய சூழலில் உள்ளனர்.

முதியோரான தாத்தாவும் பாட்டியும் தங்கள் பேரப் பிள்ளைகளை வளர்க்க நாளாந்தம் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர். சீரான கண்காணிப்புக் குறைகின்றது; இதனால் சிறுவர்கள் வாழ்வில் பிழையான பக்கங்களுக்கு செல்கின்றனர். மேலும், பலர் போரால் தங்கள் அவயவங்களை இழந்து அல்லல்படுகின்றனர். தேசத்தில் நடந்த போரால் தேகத்தில் குண்டு சிதறல்களுடன் பெரும் சிலுவை சுமக்கின்றனர்.

பொதுவாக ஆயுத மோதல் நடவடிக்கைகளின் போது, அனைவரும் பாதிக்கப்படுவார்கள். ஆனாலும், பெரிதும் அதன் வலியை சுமப்பவர்கள் சிறுவர்கள், பெண்கள் மற்றும் முதியோர்கள் எனலாம்.

உடல் காயங்களும் உளம் சார்ந்த காயங்களும் ஒன்று சேர்ந்து, இவர்களை வாழ்வில் பொய்யான திசைக்கு வழி நடாத்தும்; வாழ்வை இருள் மயமாக்கும்; சூனியமாக்கும்; கேள்விக் குறியாக்கும்.

ஒவ்வொரு சிறுவனும் தனது அடிப்படைத் தேவைகளைப் பெற, உரிமை உள்ளவன் எனவும் நாம் அவற்றை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவதில் முனைப்பாக இருக்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் உரிமைச் சாசனத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இலங்கையின் வடக்கு, கிழக்கில் பல ஆண்டுகளாக நடைபெற்ற ஆயுதப் போராட்டம், இவர்களின் இனிதான வாழ்வைக் கசப்பு ஆக்கியது எனலாம். ஆயுதப் போராட்டம் முடிவுற்று எட்டு வருடமாகியும், இவர்களது வலி சுமந்த வாழ்வு, சீரான வழி இன்றி தொடர்கின்றது.

போர் ஓய்ந்தாலும் போரின் தாக்கம் இன்னமும் ஓயவில்லை. ஆனாலும், சிறுவர்களது ஒட்டுமொத்த அபிவிருத்தி என்னமோ இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது.

யுத்தம், குடும்பங்களில் உள்ள பல உழைப்பாளிகளையும் கொய்து விட்டது. குடும்ப தலைவனை இழந்த தலைவி (தாய்) குடும்பத்தை நிர்வகிக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்படுகின்றாள். நாளின் பெரும் பகுதியைப் பொருளாதாரம் தேட செலவழிக்கின்றாள். ஆதலால் சேயுடன் ஒரு நாளில் செலவழிக்கும் நேரம் குறைகின்றது.

மேலும் குடும்பங்களில் அன்றாட



# தத்தளிக்கும் பிள்ளைகளை
## தத்தெடுக்க தயாராவோம்

**ஆகவே, இதற்கு என்ன பரிகாரம் என யோசிப்பின் புலம் பெயர்ந்த ஒவ்வொரு குடும்பமும் தாயகத்தில் இவ்வாறாக தத்தளிக்கும் ஒவ்வொரு பிள்ளையை தத்தெடுக்க வேண்டும். பெற்றால் மட்டுமா பிள்ளை? தத்தெடுத்தாலும் பிள்ளை தான். அதற்காக சட்ட ரீதியான தத்தெடுத்தல் அல்ல.**

ஆகவே, இந்நிலையில் பெற்றோர்களும் பிள்ளைகளும் உளநெருக்கீடுகள், மனவடு எனத் தமக்கான நிச்சயமற்ற சூழலை, குழப்பகரமான நிலையில் எதிர்நோக்க வேண்டி உள்ளது.

உதாரணமாக, கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மட்டும் தாய், தந்தை எனப் பெற்றோர்கள் இருவரையும் இழந்து 31 சிறுவர்கள் உள்ளனர். அத்துடன், தந்தையை இழந்து 325 சிறுவர்களும் தந்தையை பிரிந்து வாழும் சிறுவர்கள் என 13 சிறுவர்கள் வாழ்கின்றனர். அதாவது 338 சிறுவர்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களை சார்ந்தவர்களாக உள்ளனர். அத்துடன் 65 சிறுவர்கள் மாற்றுவலு உள்ளவர் களாகக் காணப்படுகின்றனர்.

தாயகத்தில் பல பொது அமைப்புகள் சிறுவர்களது வாழ்வை வளப்படுத்தும் மகத்தான பணியை ஆற்றி வருகின்றன. மேலும் சில தனி நபர்கள் கூடத் தங்களது இயலுமைக்கு ஏற்ப பல்வேறு உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். மேலும், சிறுவர்களது கல்வி, போசாக்கு மற்றும் சுகாதாரம், வாழ்வாதாரம் எனப் பல்வேறு கருத்திட்டங்களுக்குமென பெருவாரியான நிதி வருடாந்தம் ஒதுக்கப்படுகின்றது.

அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினர் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதவாறு வறுமை மையம் கொள்ளத் தொடங்குகின்றது. ஆகவே, ஜீவனோபாயத்துக்காகப் பணம் தேவைப்பட, உழைக்க வேண்டிய தேவை சிறார்களுக்கும் எழுகின்றது. ஆதலால், இங்கு கல்வி மற்றும் கற்றல் செயற்பாடுகள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. ஆகவே பாடசாலைக்கு செல்ல வேண்டிய சிறுவனுக்கு தொழில் வாய்ப்புகளைத் தேடிச் செல்ல வேண்டிய அவல நிலை உருவாகின்றது.

இவ்வாறாக சூழ்நிலைகளே, பின் நாட்களில் சிறுவர்கள், போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்களாகவும் வாள் வெட்டுக் ஆசாமிகளாகவும் வர வழி சமைக்கின்றன. அத்துடன் இவ்வாறான வேலைத்தளங்களில், சிறுவர் துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் இம்சைகளுக்கும் உள்ளாகின்றனர்.

மேலும், வெளிச்சத்துக்கு வராத பல குற்றச் செயல்கள், சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல், அதிகளவிலான சிறுவர் துஷ்பிரயோகங்கள் தினசரி அரங்கேறி வருகின்றன. ஆகவே, இவ்வாறான குடும்பங்களின் பிரச்சினைகள் ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்தப் பண்பியல் கோலத்தையே ஆட்டம் காண செய்கின்றன.

இந்நிலையில் சிறுவர்கள் தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுமுடிவுகள் ஊடகங்களில் வெளி வந்துள்ளன. அவை பல அதிர்ச்சி தரும் தகவல்களையே அதிகம் கொண்டுள்ளன. அதாவது, இலங்கையில் 51,249 சிறுவர்கள் ஒரு நாளேனும் பாடசாலைக்கு செல்லாத சிறுவர்களாக உள்ளனர். மேலும் பாடசாலைக்கு செல்ல வேண்டிய 5—17 வயதைச் சேர்ந்தவர்களில் 452 ,661 சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சிறுவர்களது பங்களிப்பும் இந்தப்புள்ளி விவர அதிகரிப்புக்குப் பெரும் பங்காற்றி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆகவே, ஒருவித நெருக்கடியான சூழலில் வளரும் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் பூரணபடுத்தப்படாத பட்சத்தில், அது அவர்களின் விருத்தியில் தாமதத்தை அல்லது அசாதாரண நிலையை ஏற்படுத்தலாம்.

ஆகவே, நம் நாட்டின் வருங்கால சந்ததியான அவர்களைச் சிறப்பான உன்னதமான வழிக்கு நகர்த்த வேண்டிய பெரும் சமூகப் பொறுப்பு தாயகத்தில் வாழ்கின்ற மற்றும் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து தமிழ் உறவுகளுக்கும் உண்டு.

ஆகவே, இதற்கு என்ன பரிகாரம் என யோசிப்பின் புலம் பெயர்ந்த ஒவ்வொரு குடும்பமும் தாயகத்தில் இவ்வாறாக தத்தளிக்கும் ஒவ்வொரு பிள்ளையை தத்தெடுக்க வேண்டும். பெற்றால் மட்டுமா பிள்ளை? தத்தெடுத்தாலும் பிள்ளை தான். அதற்காக சட்ட ரீதியான தத்தெடுத்தல் அல்ல.

ஆபிரிக்க நாடான நைஜ?ரியாவை சேர்ந்த கைவிடப்பட்ட குழந்தையை டென்மார்க்கை சேர்ந்த தன்னார்வ தொண்டரான அன்ரிங்கிரென் அம்மையார் எவ்வாறு தத்தெடுத்தாரோ, அதே மாதிரியாக எம் உறவுகள் தத்தெடுக்க வேண்டும். கைவிடப்பட்ட நிலையில் இருந்த அந்த பிள்ளைக்கு பெயரிட்டார். அன்ஜ?ரிங்கிரென் அவர்களால் சமூக வலைத் தளங்களில் பதிவிடப்பட்ட புகைப்படம் அந்த குழந்தையின் வாழ்வை உச்சிக்கு கொண்டு சென்றது.

கருக வேண்டிய அவனின் வாழ்வில் புதிய நம்பிக்கையைக் கருக் கொள்ள செய்தது. அக்குழந்தையால், அவ்வாறான நிலையில் உள்ள குழந்தைகளின் வாழ்விலும் புது வெளிச்சம் பிறந்தது. இனத்தாலும் மதத்தாலும் மொழியாலும் தேசத்தாலும் என அனைத்தாலும் வேறுபட்ட இக் குழந்தையை மனிதாபிமானம் மட்டுமே இணைத்து வைத்தது; வளப்படுத்தியது; வாழ்வு கொடுத்தது.

உங்கள் ஆதரவில் செதுக்கப்படும் பிள்ளை, நாளை பல தடைகளையும் எட்டித் தாண்டும்; முட்டி உடைக்கும்; வெற்றிப் படிகளின் ஊடே சிகரத்தை எட்டும். அந்த வெற்றியின் நடுவே உங்கள் அர்ப்பணிப்பு தெரியும்.

இவர்களே நாளைய தலைவர்கள். வீழ்ந்து கிடக்கும் நம் தேசத்தை நாளை தூக்கி நிறுத்தப் போகின்றவர்கள். ஆகவே அவர்களை விழ விடக் கூடாது. கரம் கொடுப்போம். காப்பாற்றுவோம்.

**பா. சிவரஞ்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை செய்ய கேட்கும் நீலத்திமிங்கிலம்



இரவில் தனியாகப் பேய்ப் படம் பார்ப்பது, கையில் பிளேடால் வரைவது, கண்ணை மூடிக்கொண்டு மிக வேகமாக சைக்கிளில் பயணிப்பது என்றவாறு அமைந்திருக்கும். இறுதியாக நீங்கள் வெற்றி பெறுவதற்கான கடைசி சவாலுக்காக காத்திருக்கும்போது, இறுதி சவால் உங்களை தற்கொலை செய்துகொள்ளச் சொல்லும்.நீங்கள் தற்கொலை செய்து கொள்ள முடியாது என மறுத்தால், ஆட்டத்தில் இருந்து விலக முடியாது என்பதுதான் இதில் இருக்கும் பேராபத்து.

விளையாட்டாக கூட விளையாடி பார்க்கக் கூடாத ஒரு விளையாட்டு ரஷ்யாவில் பிறந்து இந்தியா வரை பல உயிர்களை தற்கொலை எனும் போர்வையில் காவுகொண்டுள்ளது புளூவேல்.

பொதுவாக கணினி விளையாட்டுக்கள் சிறுவர்களை முழுமையாக தம் வசம் ஈர்த்து வசியப்படுத்தி விடுகின்றன. இதனால் சிறுவர்கள் கணினி விளையாட்டுக்கு அடிமைகளாகி கல்விச் செயற்பாட்டில் இருந்து திசை மாறுகின்றனர். அவ்வாறு இன்று உலகை அச்சத்திற்கு உள்ளாக்கி உள்ள மற்றுமொரு விளையாட்டு புளூவேல்.

நீலத் திமிங்கிலம் என தமிழில் அர்த்தப்படும் இந்த புளூவேல் கேம், இன்று உலகில் பரவலாக பேசப்படும், பலரது சாபத்திற்குள்ளானதுமான ஒரு விளையாட்டாக மாறியுள்ளது. இந்த சாபத்திற்கு காரணம் இதை விளையாடுபவர்களுக்கு போட்டி முடிவில் கிடைக்கும் பரிசுதான்.

பரிசு என்றதும் அது பணமோ பொருளோ அல்ல உயிர்...! பொதுவாக போட்டி ஒன்றில் வெற்றி பெறுபவருக்குதான் பரிசு கிடைக்கும். ஆனால் இது விதிவிலக்கானது. இந்த போட்டியில் போட்டியாளர் இறுதியில் தன் உயிரை போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு பரிசளிக்க வேண்டும். இதுதான் போட்டியின் விதி.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் உளவியல் மாணவரான ரஷ்யாவைச் சேர்ந்த பிலிப் புடகின் என்பவர் இந்த விளையாட்டைக் கண்டுபிடித்துள்ளார். சமூகத்தில் எந்த மதிப்பும் இல்லாமல் இருப்பவர்களை தற்கொலை செய்யவைத்து அதன் மூலம் சமூகத்தை "சுத்தம்" செய்வதாக தன் தரப்பு நியாய வாதத்தை முன்வைத்து பிலிப் இந்த விளையாட்டை அறிமுகம் செய்துள்ளார்.

இந்த விளையாட்டால் 2015 ஆம் ஆண்டு முதல் தற்கொலை நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து இன்று வரை உலகில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் மற்றும் இளையவர்களின் உயிரை தற்கொலை எனும் வடிவில் காவு கொண்டுள்ளது இந்த புளூவேல்.

போட்டியிட்டால் நாம் ஏன் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற கேள்வி உங்களுக்குள் எழுகின்றதல்லவா? அது தான் புளூவேல் போட்டியில் உள்ள மாயை.

50 சவால்களை கொண்டுள்ள இப் போட்டியில் சில தம்மைத்தாமே துன்புறுத்திக்கொள்ளும் வகை சவால்களையும் உள்ளடக்கியது. இறுதி சவால் தற்கொலை. இவ்வாறு அபாயகரமான சவால்களை கொண்ட புளூவேல் என்பது இணையத்தில் குழுவாக ஆடப்படும் ஒரு விளையாட்டு. இந்த விளையாட்டை நாமாக தேடிப் போய் விளையாட வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் உயிரை பறிக்க இதுவாகவே இணைய வழியில் வந்து உங்கள் வாசல் கதவை தட்டும்.

அதன் படி இந்த விளையாட்டில் உங்களை இணைத்துக்கொள்வதற்காக முதலில் மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு ஓர் அழைப்பு வரும். அந்த மின்னஞ்சல் அழைப்பில் ‘புளூவேல் சேலஞ்சை எதிர்கொள்ளத் தயாரா?’ என உங்களை அழைக்கும். ‘ஆம்’ என்று நீங்கள் பதில் அனுப்பினால், விளையாட்டின் விதிமுறைகளை உங்களுக்கு அனுப்புவார்கள். முதலில் பார்ப்பதற்கு மிக எளிதான விதிமுறையாகவே தோன்றும். இவை எம்மை இந்த விளையாட்டுக்கு உள்ளீர்க்க விரிக்கப்படும் மாயவலை. அறியாமலேனும் இம் மாய வலையில் நீங்கள் சிக்கிவிட்டீர்களாயின் இந்த போட்டியில் உள்ள 50 சாவால்களை எதிர்கொண்டு நீங்கள் செய்து காட்ட வேண்டும்.

சவாலை நீங்கள் செய்து முடிப்பதை காணொளிகளாகவோ அல்லது புகைப்படமாகவோ எடுத்து அந்தக் குழுவுக்கு அனுப்ப வேண்டும்.

இறுதியான சவாலை நீங்கள் எதிர் கொண்டு செய்துவிட்டால் நீங்கள் வெற்றியாளர். ஆனால் போட்டியின் இறுதி 50 ஆவது சவாலை செய்த பின்னர் போட்டியின் வெற்றியாளராக பெருமிதம் அடைய நீங்கள் இவ்வுலகில் இருக்க மாட்டீர்கள். காரணம் அதிபயங்கரமான அந்த இறுதி சவால் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்பதுதான். இறுதி சவாலில் நீங்கள் ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது.

முதல் கட்ட சவால்கள் மிக எளிதாகவே இருக்கும். ஒரு நீலத் திமிங்கிலத்தை வரைய வேண்டும், தனியாக இரவு பன்னிரெண்டு மணிக்கு மயானத்திற்கு செல்ல வேண்டும், இனிப்புகளை அள்ளி வாய் நிறைய சாப்பிட வேண்டும். இவற்றில் ஒவ்வொன்றையும் நீங்கள் செய்து முடிக்க முடிக்க, உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்கும். மெல்ல படிநிலைகள் உயர உயர சவால்கள் கடினமாகிக்கொண்டே போகும். அடுத்து வரும் சவால்கள் எம்மை நாமே வதைத்துக்கொள்வது.

இதன்படி இரவில் தனியாகப் பேய்ப் படம் பார்ப்பது, கையில் பிளேடால் வரைவது, கண்ணை மூடிக்கொண்டு மிக வேகமாக சைக்கிளில் பயணிப்பது என்றவாறு அமைந்திருக்கும். இறுதியாக நீங்கள் வெற்றி பெறுவதற்கான கடைசி சவாலுக்காக காத்திருக்கும்போது, இறுதி சவால் உங்களை தற்கொலை செய்துகொள்ளச் சொல்லும்.

நீங்கள் தற்கொலை செய்து கொள்ள முடியாது என மறுத்தால், ஆட்டத்தில் இருந்து விலக முடியாது என்பதுதான் இதில் இருக்கும் பேராபத்து.

இப்போதுதான் நாம் அவர்களின் வலையில் முழுமையாக சிக்கிக்கொண்டுள்ளதை உணர்வோம். காரணம் ஆரம்ப நாளில் இருந்து நடந்த மின்னஞ்சல் தொடர்பாடல்களின் ஊடாக உங்களுக்கே தெரியாமல் உங்கள் கணினியிலோ அல்லது கையடக்க தொலைபேசியிலோ ‘ட்ரோஜன் வைரஸ்’ எனப்படும் வைரஸ் அனுப்பப்பட்டு, உங்கள் இரகசிய தகவல்கள் அக்குழுவின் கையில் சிக்கி இருக்கும்.

இனி நீங்கள் சவாலை ஏற்கவில்லை என்றால், உங்கள் இரகசிய தகவல்கள் கசியவிடப்படும் என மிரட்டுவார்கள். பெரும்பாலான சிறுவர்கள், இளம் வயதினரை அந்தக் கும்பல் குறிவைக்கிறது. சிறுவர்கள் விபரீதம் தெரியாமல் பயந்துபோய் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

ரஷ்யாவை மையமாகக்கொண்டு ஆரம்பித்த இந்த விளையாட்டு, இணையம் மூலம் உலகம் முழுவதுமாக சிறுவர்கள் உட்பட சுமார் 3000 க்கும் அதிகமானவர்களை தற்கொலைக்குத் தூண்டியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களாக உலகம் முழுவதும் இந்த விளையாட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் ரஷ்ய அரசாங்கம் நேரடியாகத் தலையிட்டு விசாரணை மேற்கொண்டது. உலகம் முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு இந்த விளையாட்டை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

விளையாட்டின் முக்கிய சூத்திரதாரியான இலியா சிட்ரோவ் எனும் 26 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார்.

இதனால் இந்த விளையாட்டு குறித்து பெற்றோரும் ஆசிரியர்களும் நிம்மதி பெரு மூச்சுவிட்டனர். இருந்த போதிலும் மும்பையைச் சேர்ந்த சிறுவன் மன்பிரீத் சிங்கின் தற்கொலை, அவன் நண்பர்களின் வாக்குமூலம் போன்றவை மூலம் புளூவேல் விளையாட்டு தொடர்பான பீதி மீண்டும் உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்துள்ளது.

புளூவேல் என்றால் நீல நிறத் திமிங்கிலம் என்று அர்த்தம். அமெரிக்காவில் உள்ள ஒரு கடற்கரையில் திமிங்கிலங்கள் திடீரென தண்ணீரை விட்டு வெளியே தாமாக வந்து இறந்தன.

அதைப் பார்க்க திமிங்கிலங்கள் தாமாகத் தற்கொலை செய்துகொண்டதைப் போலிருந்தது. இதை அடிப்படையாக வைத்துத் தான் இந்த விபரீத விளையாட்டுக்கு புளூவேல் சேலஞ்ச் எனப் பெயரிட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலையைத் தூண்டும் குழுக்கள், தங்கள் உறுப்பினர்களை தற்கொலைக்குத் தூண்டி, அவர்கள் தற்கொலை செய்துகொள்வதை நேரலையில் ஒளிபரப்பி ரசிப்பவர்கள் என இணையத்தில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய குழுக்கள் அதிகமாக உள்ளன. ஒரு ஆய்வின்படி உலகம் முழுவதும் தற்கொலையைத் தூண்டும் இணையத்தளங்களின் எண்ணிக்கை அதிகமாகி இருப்பதும், அதனால் சுமார் 51 சதவீதம் சிறுவர்களின் மரணம் அதிகமாகி இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மரண விளையாட்டிலிருந்து தப்பிக்க என்ன செய்யலாம்?


இந்த விளையாட்டில் பலியாகும் சிறுவர்கள், இளைஞர்கள் எல்லோரும் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பதாக மனநல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

வெற்றி பெறுவது மட்டுமே முக்கியமான இலக்கு என்று நம் குழந்தைகளுக்கு நாம்தான் கற்றுத்தருகிறோம். தோல்வி என்பதை வெறுக்கும் சமூகமாகவே இந்த இளைய தலைமுறையினர் வளர்க்கப்படுகின்றனர்.

இதனால் தோல்வியிலிருந்தும், சமூக பிரச்சினைகளிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் தேர்ந்தெடுக்கும் முறைதான் இந்த விபரீத விளையாட்டுக்கு அடிமைகளாகக் காரணமாகிறது.

உலகில் எல்லாமே எளிமையாகக் கிடைக்க வேண்டும் என்ற பொய்யான புரிதலை நாம் மாற்ற வேண்டும். நமது உரிமைகளை நாம் போராடித்தான் பெற வேண்டும் என்ற உண்மையை நம் குழந்தைகளுக்கு நாம்தான் கற்றுக்கொடுக்க வேண்டும்.

வாழ்க்கையில் 90 சதவீதம் தோல்விதான் இருக்கும். பிரச்சினைகளில் இருந்து எப்படி தப்பிப்பது என்ற யோசனையை குழந்தைகளுக்கு விதைக்காமல். அதைத் துணிச்சலாக சமாளிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும்.



தற்போதைய இளைஞர்களுக்கு வெளியுலக விளையாட்டு என்பது இல்லாமல் போனது. வீட்டில் அமர்ந்து கொண்டு இணையத்தில் பதிவிறக்கம் செய்து விளையாடி வருகின்றனர்.

ஏதாவது பொழுபோக்கு தங்களுக்கு தேவை என்கிற போது, ஆவலைத் தூண்டும் வகையில் இருக்கும் விளையாட்டை தேர்வு செய்கின்றனர். அது அவர்களுக்கு நல்லதா? கெட்டதா? என்பது தெரிவதில்லை.

"ப்ளூ வேல்" அல்லது "பிங் வேல்" எதுவாக இருக்கட்டும், அடுத்தவர்கள் உங்களைத் தூண்டும் இந்த விளையாட்டுக்குச் செல்லக் கூடாது. உங்களை நீங்கள் சந்தோஷமாக வைத்துக் கொள்ள எத்தனையோ பாரம்பரிய விளையாட்டுகள் உள்ளன அவற்றை விளையாட வேண்டும்.

இதுக்குத் தீர்வு உங்கள் கைகளில்தான் உள்ளது. உங்களது வீட்டில் அல்லது, உங்களுக்கு அறிமுகமான சிறார்களை அதிக நேரம் இணையத்தில் மூழ்கியிருப்பதை தெரிந்துகொண்டால். அதைத் தடுக்க அல்லது கண்காணிக்க நடவடிக்கை எடுங்கள்.

தேவையற்ற, அறிமுகமில்லாத நபர்களுடன் அவர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்களா என்பதையும் கண்காணிப்பது நல்லது. அத்துடன், திடீரென தன்னை தனிமைப்படுத்திக்கொண்டு அலைபேசியில் இணையத்தில் மூழ்கிருந்தால் அவதானம் அதிகம் வேண்டும்.

பெற்றோரின் கவனமும். ஆசிரியர்களின் பொறுப்பும், நண்பர்களின் அக்கறையும்தான் இளைய சமுதாயத்தை காக்கும். இந்த கறுப்புத் தளங்களை ஒழிக்க எமது சமூகம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

சிறுவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம், மன உளைச்சலைப் போக்க தேவையான நடவடிக்கைகளை பெற்றோரும் ஆசிரியர்களும் இணைந்து முன்னெடுப்பதன் மூலம் சிறுவர்கள் இவ்வாறான விளையாட்டுக்களுக்கு இரையாகாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

**எஸ். வினோத்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE



Residential / Commercial / Industrial / Investment Properties

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment
- Home Equity Loan

Mortgage In Any Situations

We Deal with all banks

MORTGAGE ALLIANCE

Thavanesan Subra

Independently Owned and Operated

| Category | Starting Rate |
|---|---|
| 5 Years Variable | 2.2% |
| 3 Years Variable | 2.25% |
| 5 Years Fixed Rate | 2.69% |
| 3 Years Fixed Rate | 2.25% |
| 2nd Mortgage | 6.99% |

**416-908-5656**

Lic# M15001465, Brokerage # 10530

mortgage@nesan.ca www.nesan.ca

NESAN

SUBRA MORTGAGE SOLUTIONS INC.

Office: 647-351-0399

Toll: 1-844-878-2721 Fax: 647-351-3099

SUBRA ACCOUNTING & TAX SOLUTIONS INC.

Bus: 416-660-5656

Our Off: 1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1

INCOME TAX SERVICES:

Personal Tax Returns (T1)

Corporate Tax Return (T2)

ACCOUNTING SERVICES:

Bookkeeping, Business Registration

Payroll & Many More...

www.subra.com solutions@subra.com



# 20 Year Pay Insurance

# இருபது வருடக் கட்டுப்பணம்! வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!



**இருபது வருடங்களுக்கு மட்டும் மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |

RBC Insurance, Manulife, Industrial Alliance, La Capitale Financial Group, Assumption Life, BMO Insurance, Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

Cell:416.728.5772 Office:416.519.3896



- Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
- Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI

Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
### OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*



**Vilosanan Sivatharman**
416-993-0826

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

**1911 Woodbine Ave, Markham
ON, L3R 5G1
www.chapelridgefh.com
info@chapelridgefh.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் பத்தாவது ஆண்டு குழிப் பந்தாட்டம்






வருடந்தோறும் குழிப் பந்தாட்டப் போட்டிகளை நடத்தி வரும் கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இந்த ஆண்டுக்கான போட்டிகள் செப் 6 ம் திகதி மதியம் 12 மணியளவில் தொடங்கிய இவ் விளையாட்டு விழா மாலை ஆறு மணியளவில் வெற்றிக் கிண்ணங்கள் வழங்குவதன் மூலம் முடிவுற்றது. கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அஜித் சபாரெட்னம் நன்றி கூறி உரையாற்றிய பின்னர் போட்டிகள் முடிவுக்கு வந்தது.

இந்த போட்டிகளில் சேகரிக்கப் பட்ட நிதி ஸ்காபுறோ மருத்துவ அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.




Canada MIGRATION PILOT

# CANADA MIGRATION PILOT

**STUDY - WORK- SETTLE IN CANADA**

**அங்கீகாரம் பெற்ற கனடிய குடிவரவு ஆலோசகர்கள்**

- பெருந்தொகை பணம் செலவழித்தும் கனடாவிற்கு வரமுடியாமல் தவிக்கும் உறவுகளின் சட்டரீதியிலான குடிவரவிற்கு சரியான ஆலோசனையாளர்.
- இந்தியா, இலங்கையில் இருக்கும் உங்கள் மாணவ உறவுகளுக்கு தகுந்த வழிகாட்டலில் Student Visa ஏற்பாடுகள்.
- உங்கள் பெற்றோர் மற்றும் உறவினரை உங்களோடு சேர்த்து வைக்கும் Super Visa மற்றும் Visit Visa ஒழுங்குகள்
- உங்கள் பெற்றோரினை உங்களுடன் நிரந்தரமாக தங்கவைப்பதற்கான permanent resident Visa விண்ணப்பங்கள்
- கல்வித்தகமை, மற்றும் வேலை அனுபவம் உள்ள உறவுகளுக்கான skilled migration- Permanent Resident Visas
- இலங்கையில் கொழும்பு,யாழ்ப்பாணம். இந்தியாவில் சென்னை,கோயம்புத்தூர் மற்றும் கேரளாவில் எமது சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

OUR SERVICES

- Family visa
- Spousal Sponsorship
- parental Sponsorship
- Super Visa
- Express Entry for Skilled Workers
- Student Visa
- Provincial Nominees
- Study Permits
- Visit Visas
- Citizenship Applications
- PR Card Extentions
- Immigration Consultations




Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng)

6477178226
151 NASHDENE RD,#55
SCARBOROUGH,ONTARIO




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின்
உங்கள் முடிவை எடுங்கள்.

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastraphic Injuries

FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Over 30 Years Combined Experience




Even if you are at fault:
Unemployed . Employed
Passenger . Pedestrian
Cyclist . Travelling in
public transit . Student
Housewife.

DON'T BE MISLEAD INTO TAKING A POOR OR SMALL
CASH SETTLEMENT
IF YOU ARE INJURED PHYSICALLY AND/ OR PSYCHOLOGICALLY
CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே அழையுங்கள்.

தீபன்
(416) 505-9804
(416) 831-4444
24 Direct Line

2190 Warden Ave., Suite 202,
Toronto, ON M1T 1V6


# குயின்ரஸ் துரைசிங்கம் அவர்களின் கேன்சவேட்டிவ் கட்சியின் உள்ளக நியமனத் தேர்தல்





ஸ்காபரோ-கில்வூட் தொகுதியில், 2018ல் வரவுள்ள மாகாணசபைத் தேர்தலில் கேன்சவேட்டிவ் கட்சியில் உள்ளக நியமனத் தேரத்லில் போட்டியிடத் தீர்மானித்துள்ள திரு.குயின்ரஸ் துரைசிங்கம், அதற்கான வேட்பாளர் நியமனத் தேர்தல் மிக விரைவில் நடக்கவிருக்கிறது. சிறந்த சமூகசேவையாளரும் அரசியல் ஆய்வாளரும் எமது சமூகத்தில் நன்கு அறியப்பட்டவருமான குயின்ரஸ் துரைசிங்கம், வடஅமெரிக்காவில் பெயர்பெற்ற முன்னணி நிறுவனமான தொம்சன்-றொய்ட்டேர்ஸ் ரொறன்ரோ கிளையில் கணினித் தொழில்நுட்பத் துறையில் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக உயர் பணியிலுள்ளார். தமிழ் ஆங்கில இருமொழிப் புலமைகொண்ட குயின்ரஸ் துரைசிங்கம் போட்டியிடும் ஸ்காபரோகில்வூட் தொகுதியில் மேலும் இரு இந்திய நாட்டவர்களும் போட்டியிடும் நிலையில், இவர் சந்தித்துள்ள கடும் போட்டியை வெற்றியாக்குவது ரொறன்ரோ தமிழ் மக்களின் முக்கிய சவாலாகவே காணப்படுகிறது.

அவரது தேர்தல் பிரச்சாரத்தின்போது எடுக்கப்பட்ட சில படங்களை இங்கே காணலாம்.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு தேவதைகளும் ஒரு பெரும் பூதமும்



யாழ்ப்பாணம் இடப்பெயர்வு 1995



மியன்மார் இடப்பெயர்வு 2017

தமிழ் சினிமாவில் வந்த குசி திரைப்படத்தின் கதைபோலவே இக்கதையும் ஆரம்பிக்கிறது.

இக்கதையில் இரண்டு தேவதைகள். ஒரு முகம்தெரியாத வில்லன். ஒரு சப்போட்டிங் வில்லன். இரண்டு இனமக்கள் கூட்டம். இரண்டு போராடும் இளைஞர்கூட்டம். ஒரு பெரும் பூதம் ஆகியவை முக்கிய பாத்திரங்கள்.

இக்கதையில் மிருகங்கள் பறவைகள் எவையும் துன்புறுத்தப்படடவில்லை. மனிதர்கள் மட்டுமே.

கதை ஆரம்பிக்கும் காலம் 1945 பிரித்தானியர் ஆட்சிக்காலம்.

1945 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி பர்மாவின் ரங்கூன் நகரத்தில் (தற்போது மியன்மாரின் யங்கூன் நகரம்) ஒரு பெண்குழந்தை பிறக்கிறது. இக்குழந்தைக்கு பெயர் சுகி (Aung San Suu Kyi)

அன்றிலிருந்து பத்து நாட்களின் பின்னர் 29 ஆம் திகதி இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கின்ற சிலோனில் உள்ள கொழும்பு மாநகரத்தில் (தற்போது சிறீலங்கா) இன்னொரு பெண்குழந்தை பிறக்கிறது. இக்குழந்தைக்குப் பெயர் சந்திரிக்கா.

இந்த இரண்டு குழந்தைகளினதும் வாழ்வில் நடக்கும் ஒரே மாதிரியான சம்பவங்களையும் செயல்பாடுகளையும் ஒருசேரப் பார்ப்பதே இக்கதை.

இரண்டு குழந்தைகளினதும் தாய் தந்தையர்கள் அவரவர் நாட்டின் அரசியலில் மிகவும் பிரபலமானவர்கள் செல்வாக்குமிக்கவர்கள். ஆகையால் இந்த இரண்டு குழந்தைகளும் இரண்டு தேவதைகளாக வளரத்தொடங்குகிறார்கள்.

இரண்டு தேவதைகளினதும் தந்தையர்கள் சுட்டு படுகொலை செய்யப்படுகிறார்கள். தந்தையர்கள் இருவருமே தங்கள் நாடுகளின் அரசியல் அமைப்பு மற்றும் அதிகாரக்கட்டமைப்பு விடயங்களிலும் சிறுபாண்மையினரின் உரிமைகளைப் பறிப்பதிலும் செல்வாக்குச் செலுத்திய மிக முக்கிய நபர்கள்.

இரண்டு தேவதைகளும் தமது பட்டப்படிப்பினை வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களில் படித்து பின் திருமணமாகி குழந்தைகளையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

சில வருடங்களிற்குப் பிறகு

இரண்டாவது தேவதையின் கதை

1994 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு காலப்பகுதி. சமாதானத்தின் சின்னமான வெள்ளைப்புறாவைப் பறக்கவிட்டபடி ஒரு தேவதை மேடையேறிவருகிறாள்.

அது ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்காண பிரச்சாரக்காலம். பெண்களின் வலி விதவைகளின் வலி பாதிக்கப்பட்ட மக்களின் வலி என வலிகளை வரிக்குவரி பேசப்பேச மக்கள் கூட்டம் அவளின்பால் ஈர்க்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அது நாள்வரை ஈழத்தீவில் அடித்துக்கொண்டிருந்த இனவாத இரத்தநெடி மாறி ஒரு தேமாப்பூவின் வாசம் வீசத்தொடங்குகிறது.

ஆண்டாண்டு காலமாய் அல்லலுற்று அலைந்து திரிந்த மக்களின் கடைசி நம்பிக்கையாய் காட்சி தந்த அந்தத் தேவதைக்கு வாக்குகளை வாரி வளங்குகின்றனர் மக்கள்.

ஆம் உலகின் முதல் பெண் பிரதமர்



Aung San Suu Kyi ஜனாதிபதி, மியன்மார், 2017



Chandrika Kumaratunga ஜனாதிபதி இலங்கை 1995

சிறீமாவோ பண்டார நாயக்காவின் மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஈழத்தீவின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாகிறார்.

சரியாக ஓராண்டுக்குள் சமாதனப் புறா வேடத்தை மெல்ல மெல்லக் கலைத்து இரத்தக்காட்டேறியாக காட்சிதரத்தொடங்குகிறார்.

ஈழத்தீவின் வரலாற்றில் கொடூரத்தின் புதிய முகமானார். பாடசாலைகள் தேவாலயங்கள் எங்கும் குண்டு மழை. வரலாறு காணாத இடப்பெயர்வுகள். கைதுகள் காணமல் போதல்கள். பாலியல் வன்கொடுமைகள் என்று ஈழத்தீவு அதுவரை கண்டிராத கொடுமைகளை அரங்கேற்றி உள்ளூரில் அரக்கிபோலவும் வெளிநாடுகளில் தேவதைபோலவும் வலம் வந்து கொண்டிருந்தார் சந்திரிக்கா.

அதே நேரத்தில் உரிமைக்காண போராட்டத்தை ஒரு பயங்கரவாத மாக சித்தரிப்பதிலும் வெற்றிகண்டு கொண்டிருந்தார்.

ஈழத்தீவில் சிறுபான்மை தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வை ஒரு மீளமுடியாத இருட்டுக்குள் கொண்டு சென்று விட்ட பெருமையோடு தன்னுடைய அடுத்த கட்டத்துக்காக காத்திருக்கிறார். ஒன்றில் அவர் தொடர்வார் அல்லது அவரின் பிள்ளைகள் அப்பணியை எதிர்காலத்தில் தொடர்வார்கள்.

முதலாவது தேவதையின் கதை

சுதந்திர பர்மாவின் தியாகி தேசியத்தலைவர் என்று போற்றப்படுகின்ற ஆங் சாண் (Aung San) மற்றும் மிக முக்கிய பர்மிய ராஜதந்திரி என்று புகழப்படுகின்ற கின் கி (Khin Kyi) தம்பதிகளின் புதல்வியான சுகி (Aung San Suu Kyi)அவர்கள் மியன்மாரில் பல தசாப்தங்களாக நிலவிய இராணுவ ஆட்சிக்கு எதிராக மூன்று தசாப்பதங்களாக தொடர்ந்து போராடி 2016 முதல் மியன்மாரின் நிறைவேற்று அதிகாரம் மிக்க தலைமையாக வலம்வரத்தொடங்குகிறார்.

தன்னுடைய மூன்று தசாப்தங்கள் கடந்த பொது வாழ்வில் தொடர்ந்து அகிம்சை வழியில் ஜனநாயக மலர்ச்சிக்காக போராடியதாலும் அதற்காகவே பதினாறு ஆண்டுகளுக்கும் மேல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதாலும் சமாதானத்திற்கான நோபல் பரிசு மற்றும் சர்வதேச நாடுகளின் கௌரவ பிரஜாஉரிமை போன்றவற்றை பெற்றிருந்ததாலும் அவரின் ஜனநாயக ஆட்சி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்திருந்தது.

ஈழத்தீவில் ஒரு காலத்தில் சந்திரிக்கா அம்மையார் சமாதான தேவதையாக சித்தரிக்கப்பட்டிருந்ததைப்போல சுகி அம்மையாரும் மியன்மார் தேசத்தின் புதிய வெளிச்சமாக சர்வதேச ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்.

இந்தக்காலப்பகுதியில்தான் சில சர்வதேச ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் மனதை உருக்கும் காட்சிகள் வலம்வரத்தொடங்குகிறது. குழந்தைகள் முதியவர்கள் பெண்கள் என்று பாராமல் இரத்த ருசி பார்கும் ஈவிரக்கமற்ற செயல்கள் அரங்கேற்றப்படுகின்றன.

மியன்மாரின் சிறுபான்மை இனமாகிய றொகினிய பிரதேசத்து முஸ்லிம் மக்கள் மியன்மாரின் நவ் (Naf River) நதியைக் கடந்து வங்காளதேசத்திற்கு தப்பிச்செல்லும் காட்சிகள் ஈழத்தமிழர் வாழ்வில் நிகழ்ந்த யாழ்ப்பாண இடப்பெயர்வின் கிளாளி பெருநீரேரித்துயரத்தையும் நாவற்குழிப்பாலக் காட்சிகளையும் மீள் நினைவூட்டுபவையா அரங்கேறுகின்றன.

கூடவே படகுகள் மூலம் வங்கக்கடல் கடந்து அந்தமான் தீவுகளுக்கும் அவுஸ்திரேலியா மலேசியா தாய்லாந்து போன்ற பிறதேசங்களிற்கும் அகதிகளாக அலையத்தொடங்குகிறார்கள்.

ஆம். மியன்மார் தேசத்தின் றொகின்ய (Rohingya) பிரதேசத்தில் வசித்துவந்த இலட்சக்கணக்கான சிறுபான்மை முஸ்லிம் மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு கொலையும் கொடுமையும் கோரத்தாண்டவமாட செத்தவர்கள் போக எஞ்சியவர்கள் உயிரைக்கையில் பிடித்தபடி அகதிகளாக அந்த நெடும்பயணத்தை கொடும் பயணத்தை ஆரம்பிக்கிறார்கள்.

இக்கொடுமை நிகழக் காரணம் என்ன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியன்மார் பெரும்பான்மையாக பௌத்தர்கள் வாழும் ஆளும் நாடு. அதில் றொகின்யா பிரதேசத்தில் வசிக்கும் சில இலட்சம் முஸ்லிம் மக்கள் பங்களாதேசத்தில் இருந்து வந்த வந்தேறிகளாகப் பார்க்கப்பட்டு பாகுபாடும் கொடுமையும் நிகழ்கிறது. அந்த பிரதேசமே தமது தாய்மடியாக பல நூறு வருடமாக வாழ்ந்துவரும் அந்த றொகின்ய முஸ்லிம் மக்களுக்கு பிரஜா உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.


இவ்வாறு தொடர்ந்து வந்த அடக்குமுறையையும் உரிமை மறுப்பையும் தட்டிக்கேட்கும் முகமாக ஒரு இளைஞர் எழுச்சி ஏற்படுகிறது. அது சில நூறு பேர்களைக்கொண்ட ஆயுத இயக்கமாகி ஏ ஆர் எஸ் ஆமி (Arakan Rohingya Salvation Army) என்று தம்மை அழைத்துக்கொள்கிறது. (வேறு சில இளைஞர் குழுக்களும் உண்டு)

இவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தம்மீது தொடர் மோதல்களும் காரணம் என்ற தொனியிலும் கருத்துத்தெரிவிக்கிறார்.

இந்நிலையில் இந்தியப்பிரதமர் மியன்மாருக்கு பயணம் மேற்கொண்டு சுகி அம்மையாருடன் கைகுலுக்கிக்கொள்கிறார். இரண்டு நாடுகளும் பயங்கரவாதத்திற்கு எதிரான செயல்பாடுகளில் ஒன்று பட்டு செயல்ப்படப்போவதாக கூறிக்கொள்கிறார். சுகி அம்மையாரோ பாரதப்பிரதமரின் வருகையும் கருத்துக்களும் தனக்கு உற்சாகத்தைத் தருவதாகக் கூறிக்கொள்கிறார்.

ஒரு புறம் மிகப்பெரும் மனிதப்பேரவலமும் இனச்சுத்திகரிப்பும் நடந்துகொண்டிருக்க அதை நடத்திக்கொண்டிருப்பவர்களுடன் கைகுலுக்குவதும் ஆதரவு வழங்குவதும் என்பது பாரததேசத்திற்கு இதுதான் முதல் தடவை அல்ல. ஈழத்தீவில் நடைபெற்ற இனவழிப்பின்போதும் இதைத்தான் செய்தது.







மியன்மார் இடப்பெயர்வு 2017

இந்த மக்களின் அடிப்படை அபிலாசைகள் அங்கீகரிக்கப்படும் நாள்வரைக்கும் இந்தக்கதைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடமுடியாது. இரண்டு தேவதைகளும் ஒரு பெரும் பூதமும் கதை அடிப்படை உண்மைகள் மாறாதிருக்க விரிந்து தொடரும்.


யாழ்ப்பாணம் இடப்பெயர்வு 1995

அடக்குமுறைகளை பிரயோகித்துவரும் மியன்மாரிய பாதுகாப்புப் படையினரைத் தாக்கி அதில் பத்திற்கும் அதிகமானவர்களைக் கொன்றுவிடுகிறார்கள். (இது ஈழத்தமிழர் வரலாற்றில் நிகழ்ந்த 83 யூலைக் கலவரத்தின் காரணத்தையும் அவலத்தையும் நினைவூட்டுவது.)

இதனைத்தொடர்ந்து றொகின்ய முஸ்லிம் சிறுபான்மையினர் முழவதுமாக இலக்கு வைக்கப்படு கிறார்கள். குழந்தைகள் பெண்கள் முதியவர்கள் என்ற பாகுபாடு பாராமல் வெட்டியும் எரித்தும் சுட்டும் கோராமாக கொலைசெய்யப்பட்டு துரத்தியடிக்கப்படுகிறார்கள்.

காடுகள் நீர் நிலைப்பிரதேசங்கள் கடந்து பங்களாதேசம் நோக்கி அகதிகளாக தஞ்சமடையும் காட்சிகள் ஊடகங்களில் வெளிவர ஆட்சிஅதிகாரத்தில் இருக்கும் சுகி (Aung San Suu Kyi) அம்மையார் மீது அழுத்தங்களும் கேள்விகளும் தொடுக்கப்படுகிறது.

ஆனால் இப்பேரவலத்தைத் தடுக்கவோ அம்மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்கவோ சுகி அம்மையார் எந்த நடவக்கையும் எடுக்கவில்லை. மாறாக ஏ ஆர் எஸ் ஆமி (Arakan Rohingya Salvation Army) எனப்படுபவர்கள் பயங்கரவாதிகள் என்றும் அவர்கள் சர்வதேச பயங்கரவாத வலையமைப்பைச் சார்ந்தவர்கள் என்றும் அங்கு நடக்கும் மனிதாபிமானமற்ற கொலைகளுக்கு அவர்களுக்குள் இருக்கும் பிரிவு காரணம் சீனாவுடனான பலப்பரீட்சையில் அந்த வலயத்தில் இருக்கும் நாடுகளை தன்பக்கம் இழுத்துக்கொள்ளும் முகமாக அதிகாரவர்க்கங்களுக்கு இப்படியான நேரத்தில் கைகொடுப்பதை இந்தியா ஒரு உத்தியாக பாவித்துவருகின்றது. அதாவது இந்தக்கதையில் வரும் துணை வில்லன் (Supporting Villain) இந்தியா.

அறவழி ஜனநாயகவாதியான சமாதானத்திற்கான நோபல் பரிசை வென்ற சுகி அம்மையார் ஒரு மக்கள் கூட்டத்தின் வதிவிட உரிமையை வாழும் உரிமையை வழங்காமல் அதற்கு எதிராக அவர்கள் போராட முற்படும்போது அதை மிகக்கொடூரமாக நசுக்குவதும் பயங்கரவாதமாகவும் உள்மோதலாகவும் சித்தரிப்பதும் ஏன் என்ற கேள்வியும் ஆச்சரியமும் பரவலாக மேலெழுகிறது.

இதற்கான காரணம் தன்னை ஒரு சமாதான தேவதையாக காட்டிக் கொண்ட சந்திரிக்கா அம்மையார் எப்படி ஒரு இரத்தக்காட்டேறியாக மாறினார் என்பதன் அடிப்படையில் தான் இருக்கிறது.

அதாவது சுகியும் சந்திரிக்காவும் தேவதைகளோ பிசாசுகளோ என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால் அவர்களும் அவர்களைச் சார்ந்த ஆட்சியாளர்கள் நின்று கொண்டிருப்பதும் ஆட்சிசெய்வதும் பௌத்த பேரனவாத பெரும் பூதத்தின் தயவில்தான். அவர்களின் தொடர் இருப்பையும் ஆட்சியதிகாரத்தையும் காப்பாற்றவும் தொடரவும் பௌத்த பேரினவாதத்தின் தயவு தேவை.

ஆகையால்தான் சமாதான தேவதைகளாக வலம்வந்த சுகியும் சந்திரிக்காவும் ஆட்சியதிகாரத்தில் இருக்கும்போது சிறுபான்மை மக்களை சிதைத்தழிக்கும் பௌத்த பேரினவாதத்திற்கு துணைபோவதுடன் அதன் நிகழ்ச்சிநிரலையும் உணர்ச்சி நிலையையும் முன்னெடுக்கவும் தலைப்படுகிறார்கள். கூடவே அந்த மக்கள் கூட்டத்தின் உரிமைக்ககாக போராடுபவர்களை பயங்கரவாதிகளாக சித்திரிப்பதிலும் அதிக திறமையாக செயல்படுகிறார்கள்.

அதன்படி இக்கதையில் வரும் பெரும் பூதம் பௌத்த பேரினவாதம்.


இப்போது கதையில் வரும் தேவதைகள் சப்போட்டிங் வில்லன் இரண்டு இனமக்கள் கூட்டம் பயங்கரவாதிகள் என்று அழைக்கப்படும் போராளிகள் எல்லாம் யார் யார் என்று புரிந்திருக்கும்.

இன்னும் சொல்லப்படவேண்டியது முகம்தெரியாத வில்லனைப்பற்றித்தான்.

ஆண்டாண்டு காலமாக தமது சொந்த மண்ணில் வாழ்ந்து வந்த ஈழத்தமிழரையும் றொகினியா முஸ்லிம்களையும் தமது காலணித்துவ ஆட்சியின் நிறைவில் பெரும்பான்மை பௌத்தபேரினவாதத்திடம் ஆள ஒப்படைத்ததன் ஊடாக இறமையுள்ள தனித்தேசிய இனங்களையும் நிலங்களையும் பௌத்த பேரினவாதத்திடம் சிறைப்படுத்திவிட்டுச்சென்ற பிரித்தானியப்பேரரசுதான் இத்தனை பேரவலங்களிற்கும் காரணமான அந்த முகம்தெரியாத வில்லன்.

அந்த மக்களுக்காக போராடு பவர்கள் பயங்கரவாதிகளாக்கப்பட்டு முற்றாக அழித்தொழிக்கப்படலாம். அந்த மக்கள் கூட்டத்தை சிதைத்தழித்து சின்னாபின்னமாக்கி துரத்தியடித்து விடலாம்.இத்தனைக்கும்துணைபோகும் பிசாசுகள் சமாதானதேவதைகளாக நல்லாட்சித் தேவதூதர்களாக கொண்டாடப்படலாம். இத்தனை துண்பத்திலும் இன்பம் காணும் பௌத்தபேரினவாதம் இறுமாப்பும் மகிழ்ச்சியும் அடைந்துவிடலாம். இத்தனைக்கும் காரணமான பிரித்தானியப் பேரரசு உட்பட்ட பேரரசுகள் மௌனமாக இருந்து விடலாம். இத்தனை கொடூரத்திலும் இலாபம் சம்பாதிக்கும் இந்தியப் அரசு போன்ற அரசுகள் இலாபநட்டக் கணக்கில் இலாபம் பார்த்துவிடலாம்.

ஆனால் இந்த மக்களின் அடிப்படை அபிலாசைகள் அங்கீகரிக்கப்படும் நாள்வரைக்கும் இந்தக்கதைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடமுடியாது. இரண்டு தேவதைகளும் ஒரு பெரும் பூதமும் கதை வெவ்வேறு சம்பவங்களாக வெவ்வேறு கதாநாயகர்களின் தோன்ற அதே பாத்திரங்களுடன் அடிப்படை உண்மைகள் மாறாதிருக்க விரிந்து தொடரும்.



**இந்திரன் ரவீந்திரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகுவலி



நவீன மயமான உலகத்தில் வாழ்வியல் மாறிய பிறகு அதிகபடியான உடல்உழைப்பின் விளைவு முதுகுவலி

முதுகு வலி எனப்படும் ‘பேக் பெயின்’ ஒரு காலத்தில் முதியவர்களுக்கான பிரச்சினையாக மட்டுமே பார்க்கப்பட்டது. ஆனால், இன்றைய நிலைமை தலைகீழ். 25 — 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்குகூட இந்தப் பிரச்சினை தற்போது பரவலாகிவிட்டது. பெருகிவரும் இந்தப் பிரச்சினைக்கு ஆயுர்வேத சிகிச்சையை நாடுவோர் அதிகரித்து வருகிறார்கள். ஆயுர்வேத சிகிச்சையில் முதுகு வலி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியுமா? அது எப்படிச் சாத்தியம்?

இந்த அவசர உலகில் 80 சதவீதம் பேருக்கு ஏதோ ஒரு வகையில் முதுகு வலி இருக்கிறது. முதுகுத் தண்டுவடத்தில் ஏற்படும் வலிதான் பேக் பெயின் எனப்படும் முதுகு வலி. இதில் பல வகைகள் உண்டு. ஜவ்வு வீங்குல், ஜவ்வு விலகுதல், எலும்புத் தேய்மானம், எலும்பு பலவீனம் அடைதல், அடிபடுதல் எனப் பல காரணங்கள் உள்ளன.

இதனால் வரும் முதல் பிரச்சினையே வலிதான். பின்னர் வீக்கம் வரும். வீக்கம் வரும்போதுதான் வலியின் வீரியம் கூடும். வலி கூடக்கூட வலி ஏற்படும் இடத்தில் விறைப்புத் தன்மை (Stiffness) உருவாகும். இந்த விறைப்புத் தன்மை நாளடைவில் நம் நடையையே மாற்றும்

## நடையை மாற்றும் வலி

“விறைப்புத் தன்மைக்கு என்ன காரணம் என்றால், வலி இருக்கும்போது குறிப்பிட்ட இடத்தை நாம் அதிகம் பயன்படுத்தமாட்டோம். வலியை உணராமல் இருப்பதற்காக உட்காரும் முறையை மாற்றுவோம். இப்படிச் செய்யும்போது நாளடைவில் நம் நடை மாறிவிடும். இதை மருத்துவத்தில் ‘ஈகிள் வாக்’ என்பார்கள். கழுகு நடப்பது போல இருப்பதால், இதற்கு அந்தப் பெயர். இதை ஆயுர்வேத மருத்துவத்தில் ‘கிரித்வம்’ என்கிறோம். இந்தப் பிரச்சினையில் நரம்புகள் அழுக்கப்படும்போது வலி அதிகரிக்கும். இடுப்பில் தொடங்கி, தொடை, கணுக்கால் என நம் பாதத்தின் பெருவிரல் வரை வலியை ஏற்படுத்தும். நாள்பட்ட வலி தொடரும்போது விறைப்பு ஏற்பட்டு, பின்னர் அந்த இடம் மரத்துப் போய்விடும். இதனால் ஒரு கட்டத்தில் நடக்கவே முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவீர்கள்.

டிஸ்க்குகள் உடலில் ஏற்படும் அதிர்வை தாங்கிக்கொள்ள பயன்படுகிறது. முதுகெலும்பு நேராக இல்லாமல் சில வளைவுகளுடன் இருக்கும். முதுகெலும்பின் நடுவில் இருக்கும் தண்டுவடத்தில் இருந்து 31 ஜோடி நரம்புகள் முதுகெலும்புகளுக்கிடையில் உள்ள துவாரத்தின் வழியாக வெளியேறி உடலின் பல முக்கிய உறுப்புகளுக்கு சென்று செயல்பட வைக்கிறது.”

“குழந்தை பிறந்ததில் இருந்தே எலும்புகளின் வளர்ச்சி வேகமாகவும், சீராகவும் இருக்கும். எலும்பின் வளர்ச்சி 18 வயது வரையில் வேகமாகவும், அதன்பின் 25 வயது வரை மிதமாகவும் இருக்கும்.”

முதுகெலும்பின் அமைப்பில் ஆண்—பெண்ணுக்கு வித்தியாசம் ஏதாவது இருக்கிறதா? “முதுகெலும்பின் அமைப்பிலோ, செயல்பாட்டிலோ ஆணுக்கும்—பெண்ணுக்கும் வித்தியாசம் இல்லை. ஆனால் முதுகெலும்பின் வளைவுகளில் சிறு வித்தியாசம் இருக்கும். வளைவு ஆண்களை விட பெண்களுக்கு சற்று அதிகமாக இருக்கும்.”

பெண்கள் 45—50 வயது வரை வீட்டு வேலைகளை செய்வது நல்லது. வீட்டு வேலைகளால் முதுகெலும்பிற்கோ, எலும்புகளின் நடுவில் உள்ள டிஸ்கிற்கோ எந்த பாதிப்பும் வராது. ஆனால் முதுகெலும்பில் ஏதாவது பிரச்சினையோ, நோயோ ஏற்பட்டிருந்தால் கடினமான வேலைகளை செய்யாமல் இருக்கவேண்டும்

கர்ப்பம், பிரசவத்திற்கு தக்கபடி பெண்களின் முதுகெலும்பு கட்டமைப்பில்ஏதேனும்மாற்றங்கள் இருக்கிறதா என்றால. “பெண்களின் அடி முதுகு வளைவு அவர்களது கர்ப்ப காலத்தில் வயிற்றின் முன் பக்க வளர்ச்சிக்கு ஏற்ப, பின்பக்கம் சாய்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. இதனால் வயிற்றில் குழந்தை வளர வளர முன்பக்க பாரத்திற்கு ஈடுகொடுக்கும் விதத்தில், பின்புறமாக சாய்ந்துகொண்டு கர்ப்பிணிகளால் அன்றாட வேலைகளை செய்ய முடியும். இதற்கு கர்ப்ப காலத்தில் சுரக்கும் ஹார்மோன்களும் உதவி புரிகின்றன.”

முதுகுவலி தோன்ற கீழ்க்கண்டவை பொதுவான காரணங்களாக இருக்கின்றன.

டிஸ்க் ப்ரொலாப்ஸ்: முதுகெலும்புகளுக்கு இடையில் ஷாக் அப்சர்வர் போல் இயங்கும் ‘டிஸ்க்’ என்னும் மெல்லிய ஜவ்வு வயதாவதாலோ, காயம் பட்டதினாலோ அல்லது அழற்சியினாலோ தேய்ந்து விடும். அப்போது 2 எலும்புகளுக்கிடையே போதிய இடைவெளி இன்றி டிஸ்க் எலும்பை விட்டு வெளியே பிதுங்கி விடும். இதனால் அதன் அருகில் செல்லும் ரத்தக்குழாயையோ, நரம்பையோ அழுத்தி வலியை உண்டு பண்ணும்.

ஸ்பாண்டிலோசிஸ்: வயதாகி எலும்புகளில் தேய்மானம் ஏற்படுவதாலும், எலும்புகளுக்கிடையே சில தாதுக்கள் படிவதாலும் எலும்புகளுக்கிடையே உராய்வு ஏற்படும். இதனால் அழற்சியோ, கிருமி தொற்றோ ஏற்பட்டு வலி ஏற்படும்.

ஆஸ்டியோ பொரோஸிஸ்: உடலின் கால்சியம் சத்துக்களின் அளவு வயதாவதினாலோ, பெண்களுக்கு மாதவிடாய் நின்ற பிறகோ குறைந்துவிடலாம்.இதனால் எலும்புகளில் போதிய அளவு சுண்ணாம்பு சத்து இல்லாததால் எலும்புகள் வலுவிழந்து, அடர்த்தி குறைவாகிவிடும். இதனாலும் எலும்புகளில் வலியும், எலும்பு முறிவும் ஏற்படலாம்.

ஸ்பான்டிலோலிஸ்தஸிஸ்: முதுகெலும்பு வலுவிழக்கும்போது வரிசையாய் இருக்க வேண்டிய எலும்புகளில் ஒன்றிரண்டு வரிசையிலிருந்து முன்புறமோ பின்புறமோ விலகி விடும். இதனாலும் முதுகுவலியோ, முதுகு தசை பிடிப்போ, மரத்து போதலோ ஏற்படலாம். இது 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது.

ஆர்த்ரைட்டிஸ்: மூட்டுக்களில் ஏற்படும் அழற்சியே ஆர்த்ரைட்டிஸ். இது ருமடாய்டு ஆர்த்ரைட்டிஸ், ஆன்க்கிலோசில் ஸ்பான்டிலோசிஸ் போன்ற நோய்களின் விளைவால் ஏற்படக்கூடியதாக இருக்கும்.”

“முதுகெலும்புகளுக்கு நடுவில் உள்ள டிஸ்க் ஷாக் அப்சர்வர் போல் செயல்பட்டு அதிக பளு தூக்குதல், குனிதல், குதித்தல் போன்ற சமயங்களில் அதிர்வுகளை தாங்கி கொள்ளும். ஆனால் டிஸ்க் தேய்ந்து விட்டாலோ அல்லது எலும்புகளில் வேறு பிரச்சினை இருந்தாலோ மேடு, பள்ளம் நிறைந்த சாலையில் செல்லும்போது டிஸ்க் அழுத்தப்பட்டு, அழுத்தம் தாளாமல் வெளியே பிதுங்கி பக்கத்தில் உள்ள நரம்புகளை அழுத்தும். இதனால் வலி ஏற்படும்.”

**முதுகுவலி என்பது கழுத்து வலியும் சேர்ந்ததா? முதுகு வலிக்கும்போது கழுத்தும் சேர்ந்து வலிக்குமா?**

“முதுகெலும்பில் எங்கு வேண்டுமானாலும் எலும்பு தேய்மானமோ, அழற்சியோ, டிஸ்க் ப்ரொலாப்ஸோ ஏற்படலாம். இதனால் எங்கு வேண்டுமானாலும் வலி ஏற்படலாம். பொதுவாக கழுத்து எலும்பில் டிஸ்க் ப்ரொலாப்ஸ் என்றால் கழுத்து, தோள்பட்டை, கைகளில் வலி பரவலாம்.

அதே போல் அடி முதுகில் ப்ரொலாப்ஸ் என்றால் அடிமுதுகு, இடுப்பு மற்றும் கால்களில் வலி ஏற்படலாம். இரண்டு வித வலியும் சேர்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை

உறுப்பு மாற்று ஆபரேஷன் இப்போது பரவலாக இருக்கிறதே. முதுகெலும்புகளை எடுத்து எலும்பு வங்கிகளில் சேகரிக்க முடியுமா? அதை மாற்று ஆபரேஷன் மூலம் பாதிக்கப்பட்டவருக்கு பொருத்த முடியுமா?“எலும்பு வங்கியில் எலும்புகள் சேமித்து வைக்கப்படுகிறது. ஆனால் முதுகெலும்புகள் சேமிக்கப்படுவதில்லை. மேலும் செயற்கை டிஸ்க்குகளை பயன்படுத்தி டிஸ்க் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால் முதுகெலும்பு மாற்று அறுவை சிகிச்சை இதுவரை செய்யப்படவில்லை.

## ஆயுர்வேத சிகிச்சையில்

வலி உள்ள இடத்தில் மூலிகை மருந்து களிம்பு சிகிச்சை அளிக்கப்படும். மருந்துடன் கஷாயம் கலந்து வலி உள்ள இடத்தில் படரவிட்டுச் சிகிச்சை அளிப்பது ஒரு முறை. இது வீக்கத்தைக் குறைத்து வலியின் தீவிரத்தை மட்டுப்படுத்தும். தொடர்ந்து 3 அல்லது 5 நாட்கள் இப்படிச் செய்தாலே வலி குறைந்துவிடும்.

மூலிகை எண்ணெய் கொண்டு செய்யப்படும் பஞ்சகர்மா மற்றும். ,சிறப்பு ஆயுர்வேத தெரபியில் ‘அபியங்கம்’ என்ற சிகிச்சை உள்ளது. இது எண்ணெய் மசாஜ்தான். வயது, வலி, பாதிப்புக்கு ஏற்ப இந்தச் சிகிச்சை அளிக்கப்படும். எண்ணெயோடு மூலிகை கலந்த மருந்தை இதற்குப் பயன்படுத்துகிறோம். மசாஜ் செய்யும்போது ரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதனால் வலி குறையும். சிகிச்சையாக,சிறப்பு யோகா, கட்டிவஸ்திகொண்டு செய்யப்படும் சிகிச்சை கொண்டு முதுகு வலிக்கு நாம் சவால் விடலாம்



**Dr.எழில்மதி பாலசந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் வல்லரசுக்கனவிற்காக பலிகொள்ளப்படும் தமிழ்நாடு

Bureau of Police Research and Development and Data on Police Organizations Data on Police Organizations தரவுகளின் அடிப்படையில் கடந்த ஒரு தசாப்த காலமாக அதிக ஆர்ப்பாட்டங்கள் அல்லது போராட்டங்கள் (protests) நடக்கும் இந்திய மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கின்றது. அதாவது இந்தியாவில் நடக்கும் மொத்த போராட்டங்களில் அண்ணளவாக ஐந்தில் ஒரு பங்கு போராட்டம் தமிழ்நாட்டில்தான் நடைபெறுகின்றது.

ஒரு நிலத்தில் இவ்வாறன எதிர்ப்பு போராட்டங்கள் (protests) அதிக அளவில் தொடர்ந்து நடைபெறுவதற்கு இரண்டு விடயங்கள் முக்கிய காரணமாக இருக்கின்றது. ஒன்று வலுவும் செயல்திறமையும் அற்ற ஆட்சி அதிகாரமையம் அடுத்தது போராட்டங்கள் தோன்றுவதற்கு ஏதுவான வலுவான அக புறக்காரணிகள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் அது கடந்த ஒரு தசாப்தகாலமாக சந்தித்த அல்லது சந்தித்து வருகின்ற போராட்டங்களில் கூடங்குளம் அணு உலை, ஈழத்தமிழர் இனவழிப்பு, இந்தித் திணிப்பு, மீனவர்கள் படுகொலை, கச்சதீவு தாரைவார்ப்பு, காவிரி நதிநீர் மறுப்பு, மீத்தேன் உட்பட்ட இயற்கை வளச்சுரண்டல், ஜல்லிக்கட்டு தடை, புதிய நாணயத்தாள்கள், புதிய பொருட்கள் சேவைகள் வரி (GST) நடைமுறை, நீட் தேர்வு போன்றனவற்றிற்கெல்லம் எதிரான போராட்டங்கள் என்று ஒரு பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

இந்தப்போராட்டங்களை எல்லாம் ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்க்கின்றபோது அது இந்தியா என்கின்றஒருகூட்டாட்சித்தேசத்தினதும் தமிழ்நாடு போன்ற மொழிவழித் தன்னாட்சி மாநிலத்தினதும் கடந்தகால நிகழ்கால எதிர்கால நிலையை அல்லது கனவினை துலக்கமாக விபரிக்கும் ஒரு அரசியல் மரபணுப்பரிசோதனை அறிக்கையினை தரும்.

அதன்படி இந்தியாவின் வல்லரசுக்கனவின் விளைவுகள் தான் இத்தனை போராட்டங்களிற்கும் முக்கியமான காரணம் என்பதை பகுத்தறிந்துகொள்ளலாம். அத்துடன் இந்தியா தன்னை ஒரு வல்லரசாக நிறுவி நிலைபெறச்செய்வதற்காக ஏற்கெனவே போட்டியில் தனக்கு முன்நிற்கும் சீனாவின் வியூகங்களில் பெரும்பாலானவற்றைத்தான் பின்பற்றுகின்றது என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

நடைபெறும்அத்தனைபோராட்டங்களும் இந்தியாவின் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்தல், வெளியுறவு என்று அழைக்கப்படுகின்ற நண்பர்களையும் பகைவர்களையும் கையாளுதல், மக்களாட்சிக்கூட்டாட்சி இந்தியாவை சீனாபோல் வெளியாட்களால் உடைத்துவிடமுடியாத ஒரு supreme leadership தேசமாக மாற்றுதல் என்ற மூன்று அடிப்படைவிடயங்களோடு தொடர்புபட்டுநிற்கின்றன.

முதலாவது,

பொருளாதாரம் — பொருளாதாரத்தில் தன்னை நிலைநிறுத்துவதற்காக அன்னிய முதலீடுகளிற்கான கதவினைத் திறந்துவிட்டிருக்கிறது. அதாவது தன்னுடைய நிலத்தையும் வளத்தையும் அழித்தும் சிதைத்தும் காசுபார்க்கும் முயற்சி இது. இதைத்தான் சீனாவும் செய்துவருகின்றது. சுத்தமான காற்றிற்கே தட்டுப்பாடு நிலவுகின்ற அளவுக்கு தன்னிலத்தை தொழிற்சாலைகளின் கழிவிடமாக்கி காசுபார்க்கின்றது.




தமிழ்நாடு போராட்டங்களின் பூமி மட்டுமல்ல இந்தியாவின் வல்லரசுக் கனவிற்கு பலிகொடுத்துக் கொண்டிருக்கும் பூமி

இதில் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் ஒரு சிறு வித்தியாசம் உண்டு. சீனா தன்னுடைய பொருட்களை பெருமளவில் வெளிநாட்டுக்கடைகளில் விற்கிறது. இந்தியா பெருமளவில் வெளிநாட்டு வியாபாரிகளுக்கு தன்னுடைய மூலவளத்தையும் தன்தேசத்தில் சந்தைவாய்ப்பையும் கொடுக்கிறது.

அதுதான் மேற்குறிப்பிட்ட கூடங்குளம் அணு உலை, மீத்தேன் உட்பட்ட இயற்கை வளச்சுரண்டல், காவிரி நதிநீர்மறுப்பு, ஜல்லிக்கட்டு தடை போன்றனவற்றிற்கு எதிரான போராட்டங்களின் அடிப்படை.

இரண்டாவது,

வெளியுறவு — இந்தியாவின் வெளியுறவு என்பது பெரிதும் சீனாவின் வெளியுறவில் தங்கியுள்ளது. அதாவது சீனாவின் வெளியுறவு இயக்கத்திற்கு ஏற்பவே இந்தியா தன்னுடைய வெளியுறவை மேற்கொள்கிறது.

இதுதான் ஈழத்தமிழர் இனப்படுகொலை, மீனவர்கள் படுகொலை, கச்சதீவு தாரைவார்ப்பு போன்றவற்றிற்கு எதிரான போராட்டங்களிற்கு அடிப்படைக்காரணம்.

இது தொடர்பான ஒரு அண்மைய உதாரணம் மியன்மாரில் றொகினியா முஸ்லிம்கள் மீது ஆங் சாங் சுகி தலைமையிலான பௌத்த பேரினவாதத்தின் இனப்படுகொலையை இனச்சுத்திகரிப்பை பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை எனும் கருத்துப்படும் சுகியின் வாதத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக இந்தியப்பிரதமர் நேரில் சென்று கைகொடுத்துவிட்டு வந்திருந்தார்.

இது சீனாவில் தங்கியிருக்கும் இந்திய வெளியுறவு நடிவடிக்கையின் சீனாவின் நண்பர்களை அவர்களின் இக்கட்டான நேரத்தில் கைகொடுத்து தன்பக்கம் இழுத்தல் என்கின்ற தந்திரம்.

மூன்றாவது,

மக்களாட்சிமுறைக் கூட்டாட்சி இந்தியாவை சீனாபோல் ஒரு இராணுவமயப்படுத்தப்பட்ட supreme leadership தேசமாக மாற்றுவது.

இந்தியாவின் வல்லரசுக்கனவிற்கு எப்போதும் யாராலும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய முக்கியமான விடயம் இந்தியாவை துண்டு துண்டாக உடைத்துவிடுதல் என்பது.

அந்த ஆபத்தை இல்லாமல் செய்ய வரைபடத்தின் வெளி எல்லையை முற்றிலும் இராணுவ வேலியாக்கி தனித்தனிநாடுகள்போல்பிரிந்துகிடக்கும் மாநிலங்களின் எல்லைக்கோடுகளையும் அதிகாரங்களையும் கரைத்து அழித்துவிடவேண்டிய தேவை இந்தியாவின் வல்லரசுக் கனவிற்கு இருக்கின்றது.

இந்த செயல்திட்டத்தின் நடவடிக்கைகளின் விளைவுகள்தான் ஜி.எஸ்.ரி வரிப்பட்டியல் விவகாரம், இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டம்,நீட்தேர்வுபோன்றவற்றிற்கு எதிரான போராட்டங்களை தோற்றுவித்திருக்கிறது.

அதாவது மாநிலங்களிற்கு ஏற்கெனவே இருக்கின்ற அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு அல்லது பறிக்கப்பட்டு மத்தியில் ஓரிடத்தில் இருந்து கட்டுப்படுத்துவது அல்லது நெறிப்படுத்துவது. மாநிலங்களின் தனித்துவங்கள் அழிக்கப்பட்டு ஒரு மொழி ஒரு தேசம் ஒரு கலாச்சரம் ஒரு கோசம் என்ற நிலை நோக்கி நகர்த்துவது.

இதை மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதாக்கட்சிதான் செய்கிறது என்று மொட்டையாக சொல்லிவிடமுடியாது. பி.ஜே.பி ஆட்சியில் இந்துத்துவ வாசம் கொஞ்சம் அதிகம் இருக்குமே தவிர மற்ற செயல்பாடுகளில் எல்லாம் காங்கிரசும் பாரதிய ஜனதாவும் வேறு வேறல்ல. அவை இந்தியா என்ற வல்லரசுக்கனவில் மிதக்கும் தேசத்தின் கொள்கைவகுப்பை முன்னெடுத்து நகர்த்தும் இரட்டைக்குதிரைகள்.

உதாரணமாக மாநிலப்பட்டியலில் இருந்த கல்வி தேசியப்பட்டியலிற்கு மாற்றப்பட்டது மத்தியில் காங்கிரசும் மாநிலத்தில் தி.மு.கவும் ஆட்சியில் இருக்கும் போதே என்பதை கவனிக்க வேண்டும். அன்று நிகழ்த்தப்பட்ட சட்டத்திருத்தம்தான் இன்று நீட் தேர்வு தொடர்பான மத்திய அரசின் முடிவை மாநிலங்கள் ஏற்கவேண்டியிருக்கிறது.

ஆக நீட் தேர்வு என்பது இந்தியாவின் கல்வித்தரத்தை உயர்த்துதல் மற்றும் மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறித்து மத்தியின் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்ற ஒரு கல்லில் இருமாங்காய் அடிக்கும் இந்திய தேசத்தின் வல்லரசுக்கனவின் நீண்டகாலச்செயல்திட்டத்தின் ஒரு பகுதிதான்.

இன்னுமொரு உதாரணம் தனுஸ்கோடி மக்கள் வசிப்பதற்கு ஏற்ற பிரதேசமா என்று ஆய்வு செய்யப் படவுள்ளதாக ஒரு செய்தி. இதுபோன்ற செய்திகள் இந்திய வரைபடத்தின் எல்லைக்கோடெங்கும் இராணுவ வேலி அமைத்து இந்தியா உடைந்துவிடாமல் சீனாபோல் இறுக்கமாக வைத்திருத்தல் என்கின்ற இந்தியாவின் ஒரு நீண்ட காலச்செயல்திட்டத்தோடு தொடர்புடையவை.

மேற்சொன்ன பொருளாதாரம் வெளியுறவு மற்றும் மக்களாட்சிமுறைக் கூட்டாட்சி இந்தியாவை சீனாபோல் ஒரு supreme leadership தேசமாக மாற்றுவது போன்ற விடயங்களிற்கு வலுச்சேர்ப்பதற்கு மாநிலங்களின் ஆட்சி அதிகாரம் ஒன்றில் வலுவற்றதாய் இருக்கவேண்டும் அல்லது மத்தியின் சொல்லுக்கு முழுவதுமாக செவிசாய்ப்பதாய் இருக்கவேண்டும் அல்லது மத்திய அரசின் தேசியக்கட்சியின் ஆட்சியாய் இருக்கவேண்டும்.

இப்படியான தேவைகளினதும் நிகழ்ச்சி நிரல்களோடும் தொடர்புடைய காட்சிகள்தான் தற்போது தமிழ்நாட்டில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

ஆக தமிழ்நாடு போராட்டங்களின் பூமி மட்டுமல்ல இந்தியாவின் வல்லரசுக்கனவிற்கு தன்னுடைய நிலத்தையும் வளத்தையும் அதிகாரத்தையும் என அத்தனை தனித்துவங்களையும் பலிகொடுத்துக்கொண்டிருக்கும் பூமியும் கூட.

**இந்திரன் ரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா தமிழர் வரலாறு - 16

# கனடாவில் சிறுவர் தமிழ் இலக்கியம்

கனடா தமிழர்கள் ஏனைய துறைகளில் காட்டும் ஆர்வத்தைச் சிறுவர் தமிழ் இலக்கியத்தில் காட்டவில்லை என்பதே எனது சொந்தக் கருத்தாகும். இன்றும் அந்தக் குறை சரிவர நிவர்த்தி செய்யப்படவில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்கு இதில் அதிக ஆர்வம் இல்லாமல் போனதால்தான் ஒரு கட்டத்தில் தமிழ் கற்பதில் அடுத்த தலைமுறையினருக்கும் ஆர்வம் இல்லாமல் போய்விட்டது. தமிழ் சமூகம் மட்டுமல்ல, தமிழ் பெற்றோர், தமிழ்ஆசிரியர், பிள்ளைகளுக்கும் இந்தப் பின்னடைவில் முக்கிய பங்குண்டு. ஊரிலே தமிழ் சூழலில் வளர்ந்ததால் எங்களுக்குத் தமிழ் மொழி கற்பதில் எந்தக் குறையும் இருக்கவில்லை. புலம் பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழி தானாக வளரப் போவதில்லை என்பதை நாம் அறிவோம். ஆனாலும் கடந்த 35 வருடங்களாக இந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்பதில் தன்னார்வத் தொண்டர்களாகவும், நிதி உதவி வழங்கியதன் மூலம் மிகவும் ஆர்வத்தோடு பாடுபட்டவர்களையும், தமிழ் சிறுவர் இலக்கிய நிகழ்வுகளை தங்கள் ஊடகங்களில் பதிவு செய்து ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களையும் நாம் கட்டாயம் பாராட்டியே தீரவேண்டும். இன்றும் கனடாவில் தமிழ் நிலைத்து நிற்பதற்கு இவர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதையும் வருக்காலத் தலை முறையினர் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ் தானாகவே வளரும் என்று வெறும் வார்த்தைகளைச் சொல்லித் தட்டிக் கழிப்பவர்களுக்கு வித்தியாசமான மேலை நாட்டுக் கலாச்சார சூழலில் நாம் வாழ்வது புரியவில்லை என்றே கருதவேண்டும். தமிழகத்தில் இருந்து வேலை தேடிச் சென்று கயானா நாட்டில் வாழும் பல தமிழர்களின் தலைமுறையினர் தமிழை மறந்து போனதற்குக் காரணம் என்னவென்று நாம் அறிவோம். அதே நிலை கனடா தமிழர்களுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதும் அதுவே எமக்கு எப்பொழுதும் ஒரு படிப்பினையாகவும் இருக்கும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். கனடவில் வாழப்போகும் அடுத்த தலைமுறைக்கு இதைப்பற்றித் தெரியப் படுத்த வேண்டும் என்பதாலும், ஆரம்ப காலத்தில் தமிழ் மொழி எப்படி இந்த மண்ணில் தக்க வைக்கப்பட்டது என்பது பறற்றியும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடும் இச் சந்தர்ப்பத்தில் கனடாவில் சிறுவர் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நாங்கள் கனடா வந்தபோது பெரிய அளவில் தமிழர்கள் கனடாவில் இருக்கவில்லை. தமிழ் மொழி கற்பதற்கான வசதிகளோ, அதற்கான சூழலோ பெரிதாக இருக்க வில்லை. தமிழ் கற்பதில் தங்கள் பிள்ளைகளை ஒருசில பெற்றோரைத் தவிர மற்றவர்கள் ஈடுபடுத்தவில்லை. காரணம் புதிய இடம் என்பதால் தங்கள் இருப்பைத் தக்க வைப்பதிலும், தங்கள் குடும்ப நிதி நிலமையைச் சீர்செய்வதிலும் அதிக கவனம் செலுத்தினார்கள். பிறந்த மண்ணிலே போர் முடிவடைந்தால் திரும்பிச் செல்வதும் அவர்களில் சிலரின் நோக்கமாகவும் இருந்தது. அதுமட்டுமல்ல, அதிக அளவில் அப்போது தமிழர்கள் இல்லாதபடியால், ஆங்கில மொழியே தங்கள் பிள்ளைகளுக்குப் போதுமானது என்ற நோக்கத்தோடு சில பெற்றோர் செயற்பட்டனர். திடீரென எதிர்பாரத வகையில் தமிழ் மக்களின் வருகையால் ரொறன்ரோவில் தமிழர் தொகை அதிகரிக்கவே தாய்மொழியாம் தமிழ் மொழியின் தேவை இந்த மண்ணில் உணரப்பட்டது. புலம் பெயர்ந்து வந்த தமிழ் மக்களில் பெரும் பகுதியினர் ஒன்ராறியோவில் குடியேறினர். சிறு பகுதியினர் மொன்றியல், வான்கூவர், கல்காரி போன்ற இடங்களுக்குச் சென்று குடியேறினர்.

தமிழ் மொழியின் தேவையை மனதிற் கொண்டு தமிழ் கற்பதில் ஆர்வமுள்ள மாணவர்களுக்காகச் சில தனியார் வகுப்புக்கள் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன. ஒன்ராறியோ கல்விச் சபைகளின் உதவியுடன் வாரத்தில் ஒரு நாளாவது தமிழைக் கற்பிக்க வேண்டும் என்ற அனுபவம் மிக்க பெரியவர்களின் விடா முயற்சியால் வாரநாட்களில் பாடசாலை முடிந்தபின்பும், சனி ஞாயிறு காலை நேரங்களிலும் தமிழ் வகுப்புக்கள் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டன. எல்லா வசதிகள் இருந்தாலும் பிள்ளைகளைப் பெற்றோர் அனுப்புவதில் தயக்கம் காட்டினார்கள். இலவச கல்வியைக்கூட ஏற்பதில் தயக்கம் காட்டினர். நீங்கள் நம்பமாட்டீர்கள், அப்போது வீடு வீடாகச் சென்று பெற்றோருக்கு எடுத்துச் சொல்லிப் பிள்ளைகளைத் தமிழ் வகுப்புகளில் சேர்க்க வேண்டிய நிலையில் நாம் இருந்தோம். ஒரு வகுப்பில் குறைந்தது 25 பிள்ளைகள் இருந்தால்தான் புதிதாக ஒரு வகுப்பை ஆரம்பிக்க முடிந்தது. சில வகுப்புகளில் வயது வித்தியாசம் பார்க்காமல் எல்லோரையும் ஒரு வகுப்பிலே வைத்துப் படிப்பிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் இருந்த தமிழ் தொடர்பு சாதனங்களும் மாணவர்களின் வருகையை அதிகரிக்க எங்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தன.

அனேகமான தொடர்பு சாதனங்கள் தமிழ் மொழியின் தேவை கருதி சிறுவர்களுக்கான ஆக்கங்களைச் சிறுவர் பகுதி மூலம் முன்னெடுத்துச் சென்றன. ஈழத்தில் நடந்த விடுதலைப் போராட்டத்தின் நோக்கமும் இதற்கு வலுச்சேர்ப்தாக இருந்தது. புலம் பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழியை வளர்ப்பதற்கு அப்போது இருந்த இயக்கங்களின் ஆதரவும் இருந்தன. எந்த மொழியை அழிக்கிறார்கள் என்று தமிழ் மக்கள் புலம் பெயர்ந்தோமோ அந்த மொழி இந்த மண்ணில் அழிந்து போவதற்குப் பெற்றோர்கள் காரணமாக இருக்கக்கூடாது என்பதைப் பெற்றோருக்கு மிகவும் தெளிவாக மேடைகளிலும், தொடர்பு சாதனங்கள் மூலம் எடுத்துச் சொன்னோம். ஒன்ராறியோ அரசின் ஆதரவுடன் பெற்றோர் ஆசிரியர் மாணவர்களின் உதவியுடன் பல பகுதிகளிலும் தமிழ் வகுப்புக்கள் மெல்ல மெல்ல விரிவடைந்தன. தொடக்க காலத்தில் சுமார் 3500 பிள்ளைகள் வரை தமிழ் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். ஆனால் தாயகத்தில் நடந்த எதிர்பாராத நிகழ்வின் காரணமாக 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின் தமிழ் கல்வி கற்கும் பிள்ளைகளின் வருகையில் திடீரெனப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் புகுந்த மண்ணில் தமிழ் மொழி வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது. மொழி அழிந்தால் அந்த இனமே அழிந்து விடும் என்ற பயம் தமிழர்களாகிய எங்களுக்கு ஏற்பட்டது.



சைவத்தமிழ் விழாவில் மாணவர்களின் பட்டிமன்றம்

நான் ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக 2012 ஆண்டு பொறுப்பேற்ற போது பெற்றோர், ஆசிரியர்களுடன் ஒன்று சேர்ந்து மீண்டும் கட்டி எழுப்பினோம். தமிழ் பிள்ளைகளின் வருகை அதிகரித்ததால் சுமார் 3000 பிள்ளைகள் வரை தமிழ் மொழிப் பரீட்சைக்கு அப்போது விண்ணப்பித்திருந்தார்கள். இன்றும் ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் தமிழ் கல்வி அறிவை ஊட்டுவதோடு, தன்னார்வத் தொண்டர்களாக இணைந்து மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பரீட்சை வைப்பதால், இந்த மண்ணில் தமிழ் மொழி அழிந்து போகாமல் நிலைத்து நிற்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றனர். தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளோடு ஒப்பிடும் போது ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம்தான் அதிக ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொண்ட சங்கமாகச் சிறந்ததொரு நோக்கத்தோடு பணியாற்றும் சங்கமாக இருக்கின்றது.

கனடாவில் தமிழ் கற்பதற்கு ஏற்ற பாடநூல்களோ அல்லது காணொளிகளோ போதிய அளவு அப்போது இருக்கவில்லை. அக்கால கட்டத்தில் அவுஸ்ரேலியாவில் தயாரிக்கப்பட்ட மாவை ஆனந்தனின் பாப்பா பாரதி என்ற காணொளி வெளியிடப்பட்டாலும் பலர் அதைப்பற்றி அறிந்திருக்கவில்லை. எனவேதான் கனடாவில் இருந்த கல்விமான்கள் சிலர் ஒன்று சேர்ந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்று திட்டம் வரைந்தனர். இவர்களின் உதவியுடன் தமிழ் மொழியைக் கனடாவில் கற்பிப்பதில் தொடக்கத்தில் இருந்த குறைபாடுகளை நீக்குவதற்காகக் குரு அரவிந்தன் போன்றவர்கள் எடுத்த முயற்சிகள் நல்ல பலனைக் கொடுத்திருக்கின்றன. தமிழ் ஆரம் என்ற பெயரில் கனடிய சூழலுக்கு ஏற்ப குரு அரவிந்தனால் 1990 களின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட ஒளித்தட்டுக்கள், ஒலித் தட்டுக்கள், பாடநூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், சிறுவர் பாடல்கள், சொல் தேடல்கள், சிறுவர் நாடகங்கள் போன்றவை கனடியத் தமிழ் சிறுவர்களுக்கு இப்பொழுதும் பெரும் துணையாக இருக்கின்றன.

இந்த வீடியோ ஒளித்தட்டை வெளியிடும் முயற்சிக்கு உறுதுணையாக நின்ற அதிபர் பொ. கனகசபாபதி, கவிஞர் கந்தவனம், பேராசிரியர் இ. பாலசுந்தரம், திருமதி. விமலா பாலசுந்தரம், ம. சே. அலெக்ஸாந்தர், வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), மாலினி அரவிந்தன், இதை ஒளிப்பதிவு செய்த நேரு, இசை அமைத்த முல்லையூர் பாஸ்கரன், ஆசிரியைகளாகப் பங்கேற்ற திருமதி கோதை அமுதன், அருட்செல்வி மற்றும் அதில் இடம் பெற்ற நிகழ்ச்சிகளைத் தந்து உதவிய நடன ஆசிரியர்கள், பங்கு பற்றிய சிறுவர், சிறுமிகள் எல்லோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அன்று எல்லோரும் சேர்ந்து விதைத்த விதை இன்று தமிழ் என்னும் நிழல் பரப்பிப் பெரு விருட்சமாக நிற்கின்றது.

'ஆக்க இலக்கியத் துறையில் தனியிடம் பிடித்துள்ள குரு அரவிந்தன் அவர்களை புகலிட நாட்டில் தமிழ் மொழி கற்கும் மாணவருக்குரிய சிறுவர் இலக்கியம் படைத்த வகையிலும் அவரைத் தமிழ் ஆர்வலர் அனைவரும் சேர்ந்து பாராட்டுவோம்' என்று பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் குரு அரவிந்தனின் 25 வருட கனடிய இலக்கிய சேவையைப் பாராட்டிக் கனடா தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் வாசித்த தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

கனடா நாட்டிற்கு ஏற்ற வகையில் குரு அரவிந்தன் எழுதிய சிறுவர் பாடல்களில் இரண்டை உதாரணத்திற்குத் தருகின்றோம். தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி 100 ஆண்டு விழாவின் போது வெளியிட்ட குழந்தைப்பாடல்கள் தொகுப்பில் வெளிவந்த பாடல்கள் இது. ஒன்று கனடா கூஸ் (புழழளந) என்று சொல்லப்படுகின்ற கனடா வாத்துக்கள் பற்றியது. இயற்கைச் சூழலில் எழுதப்பட்ட பாடலிது. மற்றப்பாடல் மரபுத்திங்களாகக் கனடாவில் பிரகடனப் படுத்தப்பட்ட தைமாதத்தில் வரும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பற்றியது. தைத் திருநாளைக் கொண்டாடுபவர்கள் பாடக்கூடிய பாடல் இது. இந்தப் பாடல் வாட்டர்லூ தமிழ் மன்றத்தினர், சொப்கா குடும்ப மன்றத்தினர் ஆகியோர் மேடையேற்றிய 'பொங்கலோ பொங்கல்' என்ற குரு அரவிந்தனின் சிறுவர் நாடகத்தில் இடம் பெற்றது.

இது போன்ற பாடல்கள் மூலமும் சிறுவர்களுக்கான நாடகம், திரைப்படம் போன்றவை மூலமும் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள சிறுவர்களைத் தமிழ் மொழியில் நன்கு பரீட்சயமானவர்களாக உருவாக்க முடியும். இதைப் போலவே எதிர் காலத்தில் இந்த மண்ணில் தமிழ் இனம் நிலைத்து நிற்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு, இன்று பலரும் சிறுவர் தமிழ் இலக்கிய ஆக்க முயற்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**குரு அரவிந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முள்ளிவாய்க்காலை அநுராதபுரத்துக்குள் புதைத்தல்!

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கான பொது நினைவுத்தூபியை அநுராதபுரத்தில் அமைப்பதற்கு அரசாங்கம் இணங்கியிருக்கின்றது. யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கான பொதுத்தூபி அமைப்பது தொடர்பிலான தனிநபர் பிரேரணையொன்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈபிடிபி) பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவால் கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. குறித்த பிரேரணை மீதான விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போதே, பொது நினைவுத் தூபியினை அநுராதபுரத்தில் அமைக்க முடியும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன அறிவித்திருக்கின்றார். அத்தோடு, ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமையை பொது நினைவு தினமாக கொள்ள முடியும் என்றும் அவர் பரிந்துரைத்திருக்கின்றார்.

நினைவு கூருவதற்கான அடிப்படைக் கடப்பாடுகள் மீதும், மனித உரிமைகள் மீதும் தொடர்ச்சியாக ஏறி நின்று நர்த்தனமாடி வருகின்ற இலங்கை அரசாங்கமும், அதன் பாதுகாப்பு அமைச்சும் யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான பொது நினைவுத் தூபியை அமைப்பது தொடர்பில் இணக்கம் வெளியிட்டிருப்பது 'நல்லிணக்கத்தின் பெரும் பாய்ச்சல்' என்று யாராவது புளகாங்கிதம் அடையக்கூடும். அதுவும், வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்புக்களின் போது அரச மற்றும் அரச சார்புத் தரப்புக்கள் அதனை பிரதான விடயமாகவும் எடுத்துச் செல்லக்கூடும்.

தார்மீக அறம் தாண்டி தந்திரமான செயற்பாடுகளை முன்வைப்பதில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும், அவர் வளர்த்தெடுக்கும் அரசியல் வாரிசுகளும் முதன்மையானவர்கள். அதில், ருவான் விஜயவர்த்தன அண்மைய வரவு. பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்தாலும், பாதுகாப்பு கட்டளைப் பீடங்களுக்குள்ளும், தேசிய புலனாய்வுப் பிரிவுக்குள்ளும் ருவான் விஜயவர்த்தன படு நெருக்கமான உறவினைப் பேணுகின்றார். பல நேரங்களில் மஹிந்த ராஜபக்ஷ காலத்து கோத்தபாய ராஜபக்ஷவை நினைவுபடுத்தவும் செய்கிறார். கூட்டு அரசாங்கத்தின் தலைமைக் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாப்பு பீடங்களுடனான உறவை மிக வலுவாக வைத்துக் கொள்வது தொடர்பில் இயங்குவது இயல்பானது. அதன்போக்கிலேயே மைத்திரிபால சிறிசேனவைத் தாண்டி, பாதுகாப்புப் பீடங்களுக்குள் ஆளுமை செலுத்தக்கூடிய நபராகவும் தன்னுடைய நம்பிக்கைக்குரியவராகவும் ருவான் விஜயவர்த்தனவை ரணில் விக்ரமசிங்க முன்னிறுத்தியிருக்கின்றார். அப்படியான நிலையில், இலங்கை அரசாங்கம், பாதுகாப்பு அமைச்சு என்கிற நிலையில் மைத்திரிபால சிறிசேனவை மாத்திரமல்ல, ருவான் விஜயவர்த்தனவையும் பெரும் கவனத்தோடு நோக்க வேண்டிய தேவை தமிழ்த் தரப்புக்களுக்கு உண்டு.

ஏனெனில், பல நேரங்களில் மைத்திரிபால சிறிசேனவினதும், இராணுவத் தளபதிகளினதும் முகத்தை முன்னிறுத்திக் கொண்டு படு பயங்கரமான வேலைகளை ரணில் விக்ரமசிங்கவும், ருவான் விஜயவர்த்தனவும் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதன்போக்கிலேயே, பொது நினைவுத் தூபியை அநுராதபுரத்தில் அமைப்பது தொடர்பிலான பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரையையும் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. அத்தோடு, ரணில் விக்ரமசிங்க மேற்கு நாடுகளுடன் பெரும் நட்பும் இணக்கமும் கொண்டிருக்கின்ற போதிலும், இலங்கையின் இன—மத அரசியல் அதிகார பீடங்களின் பிரதான அங்கமான பௌத்த பீடங்களை அவர் என்றைக்குமே பகைத்துக் கொண்டதில்லை; தாண்டியும் சென்றதில்லை. அந்த அடிப்படைகளிலிருந்தும் அனைத்தையும் நோக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

"நினைவுத் தூபியானது பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட வேண்டும். அதாவது, பொது மக்கள் செல்லக் கூடியதாகவும், பாதுகாப்பான இடமாகவும் அது இருக்க வேண்டும். மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் பலர் உயிரிழந்திருப்பதால் சகலருக்கும் பொதுவான இடமாக அநுராதபுரம் அமையும்." என்று தன்னுடைய விளக்கத்தினை ருவான் விஜயவர்த்தன முன்வைத்திருக்கின்றார்.

வடக்கு—கிழக்குஇணைப்புவழியில் அநுராதபுரம் அமைந்திருக்கின்றது என்கிற கண்டுபிடிப்பும், அதுவே பொது நினைவுத் தூபியை அநுராதபுரத்தில் அமைக்க காரணங்களில் பிரதானமானது என்கிற வாதமும் நகைப்புக்குரியது. அத்தோடு, எல்லோரும் சென்றுவரக் கூடிய பாதுகாப்பான இடமாக அநுராதபுரமே இருக்கின்றது என்கிற செய்தியினூடு நாட்டின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரா ருவான் விஜயவர்த்தன முன்வைக்கும் வாதம் எவ்வகையானது? ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், வடக்கு—கிழக்கு இன்னமும் பாதுகாப்பு அச்சுறுத்தலுள்ள பகுதி என்கிற விடயத்தை மறைமுகமாக முன்வைப்பதன் மூலம் அவர், வடக்கு— கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பின் நீட்சியை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கின்றார். இது வடக்கு—கிழக்கு தொடர்பிலான தென்னிலங்கையின் அணுகுமுறைகள் எந்தக் காலத்திலும் மாறுவதில்லை என்பதை மீளவும் உறுதி செய்கின்றது.

வடக்கு— கிழக்கில் முப்பது ஆண்டுகளாக நீண்ட யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றார்கள். இதில், பெரும்பான்மையானவர்கள் பொது மக்கள். அதிலும், 90 வீதமானவர்கள் தமிழ் மக்கள். அப்படியான நிலையில், நினைவேந்தல் சார்ந்த பொது அமைவிடமொன்று தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமான வடக்கு—கிழக்கிலிருந்து அவர்களுக்கு (இன்றைக்கு) சற்றும் சம்பந்தமில்லாத அநுராதபுரம் என்கிற சிங்கள— பௌத்த பூமிக்கு நகர்த்தப்படுவது நியாயமானதா? அது, உண்மையிலேயே நினைவுகூருதலுக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் செயற்பாடா? அது, வெளிப்படையாகவே நினைவுகூருதலை மறுதலிக்கும் செயற்பாடுகளின் போக்கிலானது இல்லையா?

இலங்கையின் பல பகுதிகளிலும் இராணுவத்தினருக்கான நினைவுத் தூபிகளும், போர் வெற்றி தூபிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. முள்ளிவாய்க்கால், கிளிநொச்சி தொடங்கி கண்டி வரையில் அவை நீள்கின்றன. அத்தோடு, விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டதாக கூறப்படும் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பொது மக்களை நினைவுகூரும் தூபிகளும், நினைவிடங்களும் புதிது புதிதாக தொடர்ந்தும் அமைக்கப்படுகின்றன. இந்த ஆண்டின் நடுப்பகுதியிலும் அப்படியான நினைவிடமொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அனுராதபுரத்தில் திறந்து வைத்தார். அப்படியான நிலையில், யுத்தத்தில் உயிரிழந்தவர்களில் 90 வீதமானவர்கள் வடக்கு— கிழக்கில் இருக்கும் போது, பொது நினைவுத் தூபியை அநுராதபுரத்தில் யாருக்காக அமைக்க வேண்டும்?

நினைவு கூருதலும், அது சார் நிகழ்வுகளும் சமூகமொன்றின் ஆன்மாவோடு சம்பந்தப்பட்டது. அதுவும், விடுதலைக்கான பயணத்தை தொடருகின்ற சமூகத்துக்கு அந்த ஆன்மாவின் இருப்பு முக்கியமானது. அந்த நிலையிலேயே, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பிரதானமானதாகக் கொள்ளப்படுகின்றது. அப்படியான நிலையில், முள்ளிவாய்க்கால் கோரங்களை மாத்திரமல்ல, தமிழ் மக்களின் விடுதலை ஆன்மாவையும் அகற்றம் செய்துவிட வேண்டும் என்கிற நோக்கில்தான் நல்லிணக்கத்தின் பாய்ச்சலை அநுராதபுரத்தில் நிகழ்த்துவது தொடர்பில் ருவான் விஜயவர்த்தன கருத்து வெளியிட்டிருக்கின்றார். அத்தோடு, மே 18 என்பது ஏற்கனவே தமிழ் மக்களினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளாக முன்வைக்கப்பட்ட நிலையில், அதனை ஆட்டங்காணச் செய்வதற்கான ஆரம்ப முனைப்பாகவே, மே மாதத்தின் மூன்றாம் வெள்ளிக்கிழமையை பொது நினைவு தினமாக முன்வைப்பதனூடு நிகழ்த்தவும் முனைத்திருக்கின்றார்.

இந்த இடத்தில் வடக்கு மாகாண சபை மீதான கேள்வியொன்று எழுகின்றது. அதாவது, மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், முள்ளிவாய்க்காலில் பொது நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும் என்கிற பிரேரணையை வடக்கு மாகாண சபையின் முன்வைத்து நீண்ட நாட்களாகின்றது. ஆனாலும், பொது நினைவிடத்தினை அமைப்பது தொடர்பிலான ஆரம்ப கட்டங்கள் எதனையும் காண முடியவில்லை. அதற்கான காணியையோ, நிதியையோ பெற்றுக்கொள்வது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, மே 18ஆம் திகதி மாத்திரம் வாகனங்களில்வந்து அஞ்சலித்துவிட்டுச் செல்வதோடு விடயங்கள் முடிந்துவிட்டதாக கருதுகின்றார்கள். காணி ஒதுக்கீடு அல்லது கொள்வனவு சார்ந்து இயங்குவதற்கு ஆளுநரின் அனுமதி தேவைப்படுகின்றது. மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என்கிற தொடர் வாதங்களை வடக்கு மாகாண சபை முன்வைக்கலாம். ஆனால், அதனைத் தாண்டிய தொடர் அழுத்தங்களை வடக்கு மாகாண சபை விடுத்திருக்கின்றதா என்றால் அதுவும் இல்லை. வடக்கு மாகாண ஆளுநர், முல்லைத்தீவில் சிங்களக் குடியேற்றங்களை இறுதி செய்வது தொடர்பில் காணி ஒதுக்கீடுகளை எந்தவித இடையூறுமின்றிச் செய்து கொண்டிருக்கின்றார். ஆனால், ஒரு பொது நினைவிடத்துக்கான காணியைப் பெற்றுக் கொள்வதற்கு வடக்கு மாகாண சபையால் இன்னமும் முடியவில்லை என்பது வேதனையானது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு பருவகால நிகழ்வு என்கிற நிலையை நோக்கி தமிழ்த் தரப்பு கடத்திக் கொண்டிருக்கின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. எந்தவித பற்றுறுதியும், கூட்டுப்பொறுப்பும் இன்றி விடயங்களைக் கையாண்டு முக்கியமான கட்டமொன்றை எதிரிகளிடம் கையளித்துவிட்டு பின்னர் அழுவதால் எந்தப் பயனும் இல்லை. டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்த பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அவரும், பொது நினைவுத் தூபியை அநுராதபுரத்தில் அமைப்பது தொடர்பில் எந்த மாற்றுக் கருத்தும் இன்றி ஏற்றுக்கொண்டு நன்றியும் கூறிவிட்டார். இந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபையும் தங்களது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளனவா என்கிற கேள்வி எழுகின்றது. அந்தக் கேள்விக்கான பதில், 'இல்லை' என்று மாத்திரம் தொடர்ந்தும் அமையுமானால், அநுராதபுரம் தாண்டி அஸ்கிரிய பீடத்துக்குள் பொது நினைவுத் தூபி அமைக்கப்பட்டாலும் நாம் ஆச்சரியப்பட முடியாது.



புருஜோத்தமன் தங்கமயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org